இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 190 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 08 – செவ்வாய்க்கிழமை 20 பிப்ரவரி 2024 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 190 : Thiruvalluvar Year - 2055 - Maasi 08 - Tuesday 20 February 2024 - Chennai 20 Pages ₹ 5.00


## மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற - தடைகளைத் தாண்டி,

# வளர்ச்சியை நோக்கி முன்னேறும் பட்ஜெட்!

## முதல்வர் - ‘தாயுமானவர்’ மு.க.ஸ்டாலின் அரசின் நிதிநிலை அறிக்கையை பேரவையில்

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து பயன்தரும் பல அறிவிப்புகளை வெளியிட்டார்!

**சென்னை, பிப். 20 -**

**முதல்வர் - ‘தாயுமானவர்’ மு.க.ஸ்டாலின் அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க வரவு - செலவுத் திட்டத்தை சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் நேற்று தாக்கல் செய்தார். அப்போது நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், “மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, தடைகளைத் தாண்டி -வளர்ச்சியை நோக்கி முன்னேறும் பட்ஜெட்” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டு பயன்தரும் பல அறிவிப்புகளை வெளியிட்டார்.**

தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், 2024 - 25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை வருமாறு :-

பேரவைத் தலைவர் அவர்களே!

2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை நூற்றாண்டு கண்ட இந்த சட்டமன்றப் பேரவையின் முன் வைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் தொடர் வழிகாட்டுதலை நல்கிய நமது முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

2. காலத்தை வென்ற அய்யன் திருவள்ளுவரின் குறளை இம்மன்றத்தில் பதிவு செய்து என் உரையைத் தொடங்குகிறேன்.

**“காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்”.**

(குறள் - 386)

குடிமக்கள் எவரும் எளிதில் அணுகக்கூடியவராகவும், எவரிடத்திலும் கடுமையான சொற்களைக் கூறாது ஆட்சிபுரிந்து வரும் அரசரின் நாட்டை உலகமே போற்றும்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (19.2.2024), தமிழ்நாடு அரசின் 2024 –2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்று, பேரவைக்குள் சென்றார்.

### வள்ளுவரின் வாக்கு என்றுமே பொய்க்காது!

3. கடைக்கோடித் தமிழர்களும் எளிதில் அணுகக் கூடிய ஒப்பற்ற தலைவராகவும், கடுஞ்சொல் தவிர்த்து மாற்றுச் சிந்தனை கொண்டவர்களையும் அன்போடு அரவணைத்துச் சென்றிடும் பெருந்தன்மைக்கு இலக்கணமாகவும் திகழ்ந்து வரும் நமது முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டிற்கே பெருமை.

4. எனது உரையின் முன்னோட்டமாக வரலாற்றுச் சுவடுகளில் தடம் பதித்து தலைசிறந்த நிகழ்வுகள் சிலவற்றை இம்மாமன்றத்தின் கனிவான பார்வைக்கு முன்வைத்திட விழைகிறேன். கடந்த நூறு ஆண்டுகளில் பழம்பெருமை மிக்க இந்த சட்டமன்றத்தின் முன்வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் இடம்பெற்ற பல்வேறு நலத்திட்டங்கள் தமிழரைத் தலைநிமிரச் செய்தன. இத்தகைய முன்முயற்சிகள் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு வெற்றிநடை போடுவதற்கு வழிவகுத்தன.

- கடந்த 1894-ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்தின் பொதுப் பணித்துறை செயலாளராகப் பதவி வகித்த கர்னல்.பென்னிகுயிக், 87 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஆங்கிலேயே அரசிற்கு அனுப்பி வைத்த முன்மொழிவுதான், முல்லைப் பெரியாறு அணையாக உருவெடுத்து இன்றளவும் தென் தமிழ்நாட்டை வாழவைத்துக் கொண்டிருக்கிறது.
- மிகச்சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன், 1924ஆம் ஆண்டு, நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் பனகல் அரசர் அவர்கள் அன்றைய சென்னை மாகாணத்தின் முதன்மை அமைச்சராக இருந்தபோது, இந்தப் பேரவையில் முன்வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில்தான் முதன்முதலில் காவிரி ஆற்றின் குறுக்கே மேட்டூர் நீர்த்தேக்கம் உருவாக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. பத்து ஆண்டுகள் கழித்து 1934-35ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைவரை நிதி ஒதுக்கப்பட்டு, மொத்தம் 647 இலட்ச ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட மேட்டூர் நீர்த்தேக்கம் மூலம் இன்று தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களிலுள்ள சுமார் 16 இலட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.
- இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை மாகாணத்தில்தான் 1939-40ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சதவீத பொது விற்பனை வரி மூலமாக முதலாம் ஆண்டில் 439 இலட்சம் ரூபாய் வரி வருவாய் திரட்டப்பட்டது.
- முதன் முதலில் 1921-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக பதவி வகித்த சர். பிட்டி. தியாகராயர் அவர்களால் ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு ஓர் அணா செலவில் சென்னை ஆயிரம் விளக்குப் பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம் பிற்காலத்தில் பெருந்தலைவர் காமராஜரால் தமிழ்நாடெங்கும் விரிவுபடுத்திட ஒரு மாணவருக்கு ஓர் ஆண்டிற்கு 18 ரூபாய்க்கு மிகாமல் மொத்தம் 10 இலட்ச ரூபாய் 1957-58ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ஏழை, எளிய மக்களின் கண்ணியமான வாழ்வை உறுதி செய்திட முத்தமிழறிஞர் கலைஞரால் 1970-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்திற்கு 1971-72ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னாளில் நாடு முழுதும் விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கு 1982-83 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.
- வேளாண்குடி மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக முத்தமிழறிஞர் கலைஞரால் 1990-ஆம் ஆண்டில் முதன் முதலில் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இலவச மின்சாரத் திட்டத்திற்கு முதலாமாண்டில் 550 கோடி ரூபாய் மானியத்தொகை ஒதுக்கப்பட்டது.
- 2001 - 02ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேல்நிலைக் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் - பழங்குடியின பெண் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியை உயர்த்தும் நோக்கோடு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் அறிமுகப்படுத்தப்பட்ட மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தின் வாயிலாக அம்மாணவியரின் வாழ்வு சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது.
- ஏழை, எளிய குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்து நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரு ரூபாய் விலையில் ஒரு கிலோ அரிசித் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அறிமுகப்படுத்தி 2009-10ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2800 கோடி ரூபாய் மானியத் தொகையை ஒதுக்கினார்.

5. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க திருப்புமுனைத் திட்டங்களின் வரிசையில் நமது முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்திற்கு 2023-24 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதும், திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்டத்திற்கு 7000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதையும் இந்த சட்டமன்ற வரலாறு பொன்னெழுத்துக்களால் தன் நினைவுப் பேழையில் என்றென்றும் குறித்து வைத்துக்கொள்ளும்.

> **“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்” எனச் செயல்பட்டு வரும் நமது முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசுக்கென ஒரு மாபெரும் தமிழ்க்கனவு உண்டு. வானவில்லின் வண்ணங்களைப் போன்று ஏழு முதன்மையான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தமிழ்க் கனவு அது.**
>
> **1 சமூக நீதி, 2 கடைக்கோடித் தமிழர் நலன், 3. உலகை வெல்லும் இளைய தமிழகம், 4. அறிவுசார் பொருளாதாரம், 5. மகளிர்நலன் காக்கும் சமத்துவப் பாதை, 6. பசுமைவழிப் பயணம், 7. தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும்.**


**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**








இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 20-02-2024

# இணையற்ற இரண்டு தீர்மானங்கள்

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இணையற்ற இரண்டு தீர்மானங்களைக் கொண்டு நிறைவேற்றி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**ஒன்று - இந்திய ஜனநாயகத்தைக் காக்க!**

**மற்றொன்று - தமிழ்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்க!**

ஒரே நாடு – ஒரே தேர்தல் என்பதை உருவாக்குவதன் மூலமாக அரசியல் ஒற்றைத் தன்மையை உருவாக்க பா.ஜ.க. நினைக்கிறது. மாநிலங்களையும் உள்ளாட்சி அமைப்புகளையும் அடையாளமற்று செல்லாதது ஆக்கும் முயற்சியாகும். எனவே தான், 'ஒரே நாடு – ஒரே தேர்தல்' என்ற எதேச்சதிகார நடவடிக்கையை எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தொகுதி மறு சீரமைப்பை, மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மாற்றுவதன் மூலமாக – குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஒழுங்காக கடைப்பிடிக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பின்னடைவைச் சந்தித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சரிவைச் சந்திக்க வேண்டி வரும். இதன் மூலமாக தமிழ்நாட்டின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் பேசுவோர் எண்ணிக்கை குறையும். எனவே தான் இதனையும் நாம் எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இவை இரண்டையும் அரசியல் எதிர்ப்பாக, அரசியல் கட்சிகளின் எதிர்ப்பாக மட்டும் இல்லாமல் தமிழ்நாடு சட்டமன்றத்தின் ஒட்டுமொத்தமாக ஆக்கிக் காட்டிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்பதற்கு எதிராகவும், ஒரே நாடு – ஒரே தேர்தல் என்பதற்கு எதிராகவும் திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையான எதிர்ப்பை ஏற்கனவே பதிவு செய்துள்ளது.

'ஒரே நாடு – ஒரே தேர்தல்' முறை குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவுக்கு தி.மு.க. சார்பிலான கருத்தை கழகப் பொதுச் செயலாளர் – மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் ஏற்கனவே அனுப்பி விட்டார்.

**"அரசியல் சட்டத்திற்கும் – அச்சட்டம் தந்த கூட்டாட்சி தத்துவத்திற்கும் எதிராக – மத்திய மாநில உறவை மட்டுமின்றி, ஒன்றியத்திற்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் "ஒரே நாடு – ஒரே தேர்தல்" திட்டத்தை கைவிடு! அதிகாரவரம்பற்ற விசாரணை நடத்தும் உயர்நிலைக்குழு – அதிகாரப் பசி கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு துணை போகாமல் – தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும்!"** – என்று அந்தக் கடிதத்தில் மாண்புமிகு துரைமுருகன் குறிப்பிட்டு இருந்தார்.

2022 இல் சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் பாராளுமன்றம், மற்றும் மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்துவது சம்பந்தமாகத்தான் ஆலோசனைகளைக் கோரியது. ஆனால், தற்பொழுது ஒன்றிய அரசு இதை விரிவுபடுத்தி பாராளுமன்ற மற்றும் மாநில சட்ட சபைகளோடு, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் இணைத்து ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் விதமாக ஆய்வு வரம்புகளை வெளியிட்டுள்ளது. இந்தச் செயல் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும், குடியரசுத் தலைவர் முறையிலான ஆட்சியை நோக்கியும் செல்வதாகும். மாநில அரசின் உரிமைகளில் தலையிடுவதும் ஆகும். எனவே அனைத்து மாநில அரசுகளும் 'ஒரே நாடு – ஒரே தேர்தல்' என்பதை எதிர்க்க வேண்டும்.

'தொகுதிகளின் எண்ணிக்கை குறையக் கூடாது' என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே அறிக்கை விடுத்து இருந்தார். மகளிருக்கு 33 விழுக்காடு என்ற நாடகத்தை பா.ஜ.க. ஆட்சி செய்தது. சட்டத்தை நிறைவேற்றுவது போல நிறைவேற்றி, அது நடைமுறையில் நிறைவேறிவிடாத அளவுக்கு தடையையும் ஏற்படுத்தியது பா.ஜ.க. அரசு. தொகுதி வரையறை முடிந்த பிறகு தான் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று 'கட்டை'யைப் போட்டுவிட்டது பா.ஜ.க. அரசு. தொகுதி மறுவரையறை என்பது இப்போதைக்கு நடக்கும் விஷயம் அல்ல என்பதை முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டி இருந்தார். அது தொடர்பான அறிக்கையில், தொகுதி மறுவரையின் மற்றொரு பக்கத்தை சுட்டிக் காட்டி இருந்தார் முதலமைச்சர் அவர்கள்.

**"தமிழ்நாட்டின் மீது – தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (delimitation) உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கிற அரசியல் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும். அரசியல் விழிப்பு மிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிட மாட்டோம் என்ற உத்தரவாதத்தை வழங்கி, தென்னிந்திய மக்களை ஆட்கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிட வேண்டும் எனப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்"** என்று கேட்டுக் கொண்டிருந்தார் முதலமைச்சர் அவர்கள். ஆனால் பா.ஜ.க. தலைமையோ, பா.ஜ.க. அரசோ இதற்கு அதிகாரப்பூர்வமான பதிலை இது வரை தரவில்லை.

தமிழ்நாட்டுக்கு, தொகுதிகளின் எண்ணிக்கை குறையாது என்ற உத்தரவாதம் இதுவரை கிடைக்கவில்லை. எனவேதான் தமிழ்நாடு அதிகமான கவலை கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**மாநிலங்களை ஒழிப்பதுதான் ஜனசங்கத்தின் வேலைத் திட்டமாக 1952 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதனைச் செய்வது தான் பா.ஜ.க. ஆட்சியின் வேலைகள் ஆகும். இதனை இறுதிவரை எதிர்த்தாக வேண்டும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அ.தி.மு.க. அரசின் பட்ஜெட் அறிவிப்புகள் புஸ்வாணமானதை மறந்துவிட்டு

# தி.மு.க. அரசின் பட்ஜெட்டை குறைகூறும் பழனிசாமிக்கு - நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகக் கூட்டணிக்கு மக்கள் வெற்றியைத் தந்து பதில் அளிப்பார்கள்!

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலடி!

சென்னை, பிப்.20-

**"அ.தி.மு.க. அரசின் பட்ஜெட்களில் வெளியான அறிவிப்புகள் புஸ்வாணமானதை மறந்துவிட்ட எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு வெற்றியை அளித்து மக்கள் பதில் அளிப்பார்கள்" என விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட இயக்கக் கோட்பாடுகளைக் கொண்ட, எல்லோருக்கும் எல்லாமுமான, கடைக்கோடி மனிதருக்கும் நலவாழ்வு அளிக்கும் பட்ஜெட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு தாக்கல் செய்திருக்கிறது. இதனால், கொதிநிலைக்குப் போயிருக்கும்எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, 'கனவு பட்ஜெட்; மக்களுக்குப் பயன் தராது' எனப் புலம்பியிருக்கிறார்.

'தி.மு.க. அரசுக்கு 8,33,361 கோடி கடன் உள்ளது. கடன் பெற்றே ஆட்சியை நடத்துகின்றனர். இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் நம்பர் ஒன் அரசாகத் தமிழ்நாடு அரசு உள்ளது' எனச் சொல்லியிருக்கிறார்.

### அ.தி.மு.க. ஆட்சியில்தான் கடன் சுமை அதிகம்!

எம்.ஜி.ஆர். மாளிகையின் பரணில் தூக்கிப் போடப்பட்டிருக்கும் அ.தி.மு.க.வின் 2011 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையைத் தேடி எடுத்துப் படித்துப் பாருங்கள். அதையெல்லாம் படிக்க உங்களுக்கு நேரம் இருக்காது என்பது எங்களுக்குத் தெரியும். அதனால், 8ஆம் பக்கத்தை மட்டுமாவது கொஞ்சம் புரட்டிப் பாருங்கள். 'ஒரு லட்சம் கோடி ரூபாய் கடனாளி மாநிலம் என்கிற தலைக்குனிவில் இருந்து தமிழ்நாட்டை மீட்டு, தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கவும், தன்மானத்துடன் வாழவும், வழிவகை செய்யப்படும்' என வாக்குறுதி அளித்திருந்தீர்கள். அந்தத் தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க.தான் தொடர்ந்து 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. அம்மையார் ஜெயலலிதா, பன்னீர் செல்வம், பழனிசாமி ஆகியோரின் பத்தாண்டு ஆட்சிகளில் கடன் சுமை என்கிற தலைக்குனிவைப் போக்குவதற்குப் பதிலாக ஒவ்வொரு தமிழரின் தலையிலும் கடனை ஏற்றியது தான் உங்கள் சாதனை.

நடப்பது மக்களாட்சியா… இல்லை மன்னராட்சியா எனச் சந்தேகம் கொள்ளும் வகையில் சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் துதி பாடிக் கொண்டிருந்தார்கள். எதார்த்தத்துக்கு வராமல் ஜெயலலிதா அவர்களையும் பழனிசாமி அவர்களையும் குளிர்விப்பதற்கே தமிழ்நாடு சட்டமன்றம் பயன்பட்டது. 2011 -2012 ஆம் ஆண்டில் 1 லட்சத்து 30 ஆயிரத்து 630 கோடி ரூபாயாக இருந்த கடனைப் படிப்படியாக உயர்த்தி 2020 -2021ஆம் ஆண்டில் 4 லட்சத்து 85 ஆயிரத்து 502 கோடி ரூபாயாகக் கொண்டு வந்து நிறுத்தினீர்கள்.

'கடன்' என்ற சொல்லுக்குக் 'கடமை' என்ற பொருளும் உண்டு. ஆனால், கடமையைச் செய்யத் தவறிக் கடன் சுமை தொடர்ந்து ஏறிக் கொண்டே போனதுதான் பத்தாண்டு அ.தி.மு.க. அரசின் சாதனை. 'ஒரு மாநில அரசு, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் ஆண்டுக்கு மூன்று விழுக்காட்டுக்கு மேல் கடன் வாங்க முடியாது. அதே சமயம் எந்தக் காலத்திலும் ஒட்டுமொத்தமாக 25 விழுக்காட்டைத் தாண்டக் கூடாது' என்கிறது மத்திய நிதி கமிஷன். இந்த வரம்பைத் தமிழ்நாடு அரசு இன்னும் தாண்டவில்லை.

ஓர் அரசு கடன் வாங்குவதில் தவறு இல்லை. உலகம் எங்கும் அரசுகள் கடன் வாங்கித்தான் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் அப்படிப் பெறப்படும் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடிய திறன் பெற்ற அரசாக இருக்க வேண்டும். அப்படியான அரசாக தி.மு.க. அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 'வருஷா வருஷம் கடன் வாங்கித்தான் இந்த அரசு வண்டியை ஓட்டிக்கிட்டு இருக்கு' என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள். பத்தாண்டு அ.தி.மு.க. அரசும் அதைத்தானே செய்து கொண்டிருந்தது. தி.மு.க. அரசின் கடனைப் பற்றிக் கவலைப்படும் பழனிசாமி ஏன் மோடி அரசின் கடனைப் பற்றி வாய் திறக்கவில்லை?

### ஒன்றிய அரசின் கடன் பற்றி பழனிசாமி பேசலாமே!

2014-இல் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் ஆட்சியில் 54 லட்சம் கோடியாக இருந்த கடன் பத்தாண்டில் 205 லட்சம் கோடிக்கு மேல் உயர்ந்திருக்கிறதே அதைப் பேசப் பழனிசாமி அவர்களின் வாய்க்கு யார் பூட்டு போட்டார்கள்?

பா.ஜ.க.வோடு கூட்டணி இல்லை என்பதை மணிக்கொரு முறை சொல்லிக் கொண்டிருக்கும் பழனிசாமி அவர்கள், அது உண்மையென்றால் ஒன்றிய அரசின் கடனைப் பற்றி கர்ஜிக்க வேண்டியது தானே?

பழனிசாமி அவர்கள் அளித்த அந்தப் பேட்டியில் அவரே ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். "அ.தி.மு.க. ஆட்சியை விட அதிக வருவாய் இப்போது தி.மு.க. ஆட்சியில் வருகிறது" எனச் சொல்லியிருக்கிறார். அதாவது வருவாயைப் பெருக்கும் பணியைத் தி.மு.க. அரசு செவ்வனே செய்து வருகிறது என அவரே சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். கடனை அடைக்க வருவாயைப் பெருக்கும் வழியையும் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு செய்து கொண்டிருக்கிறது. நிச்சயமாகக் கடனை அடைக்கும் வழிகளை இன்னும் சிறப்பாக இந்த அரசு மேற்கொள்ளும்.

'தி.மு.க. அரசின் பட்ஜெட் கானல் நீர் போன்றது; மக்களுக்குப் பயன் தராது' எனச் சொல்லியிருக்கிறார். அது பயன் தரும் என நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் சரியான தீர்ப்பு எழுதுவார்கள். கடந்த காலங்களில் அ.தி.மு.க.வின் பட்ஜெட்டுகளில் வெளியான அறிவிப்புகள் புஸ்வாணமானதை எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மறந்துவிட வேண்டாம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பத்திரப்பதிவு முடிந்தவுடன்

# இணையதளத்தில் எவ்விதக் கட்டணமுமின்றி வில்லங்கச் சான்று!

## அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப்.20-

சென்னை, பெரியமேடு சார் பதிவாளர் அலுவலகதரதில் ஆய்வு மேற்கொண்டு, பதிவுத்துறையில் ஆவணங்கள் பதிவு செய்தவுடன் வில்லங்கச் சான்று விவரங்களை Tiny URL மூலம் ஆவணதாரருக்கு அனுப்பும் வசதியை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்.

தற்போது பத்திரப்பதிவு முடிவடைந்தவுடன் பொது மக்கள் பதிவுத்துறையின் இணையதளத்தில் சென்று எந்தவிதமான கட்டணமுமின்றி வில்லங்கசான்று விபரங்களை தரவிறக்கம் செய்யும் வசதி நடைமுறையில் உள்ளது. இணையதளத்தில் சென்று வில்லங்கச்சான்று விபரங்களை பார்வையிடும் வசதியை மேலும் எளிதாக்கும் வண்ணம், ஒரு பத்திரப் பதிவு நிறைவடைந்த மறுநாள் சொத்து உரிமையாளரின் கைபேசிக்கு ஆவணத்தைப்பொறுத்த தற்போதைய வில்லங்கச்சான்று விபரங்களை எவ்வித கட்டணமுமின்றி Tiny URL ஆக குறுஞ்செய்தி(SMS) மூலம் அனுப்பிவைக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வசதி மூலம், பத்திரப்பதிவு நிறைவடைந்த மறுநாள், Tiny URL உடன் கூடிய குறுஞ்செய்தி(SMS) பொதுமக்களின் கைபேசி எண்ணுக்கு அனுப்பிவைக்கப்படும். அந்த Tiny URLயை கிளிக் செய்த பின்னர் ஆவணத்தைப்பொறுத்த வில்லங்கச்சான்றினை PDF வடிவில் கைபேசியிலேயே தரவிறக்கம் செய்து சேமித்துக்கொள்ளலாம். இவ்வாறான வில்லங்கசான்று விபரங்கள் முப்பது (30) நாட்கள் வரையில் தரவிறக்கம் செய்து கொள்ளும் வண்ணம் மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., பதிவுத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உடனிருந்தனர். இத்தகவலை பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தெரிவித்துள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 அன்று புதுச்சேரி ஆரோவில்லில் இளைஞர்களின் உடற்பயிற்சி விழிப்புணர்வுக்காக மாரத்தான் போட்டியில் ஓடத் தொடங்கி 18–02–2024 அதே புதுச்சேரி ஆரோவில்லில் தமது 150 வது மாரத்தானை நிறைவு செய்தார்.நிகழ்வில் 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம் நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்து கூறினார். இம்மாரத்தானில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கு பெற்றனர்.

# ரூ. 2,824 கோடியில் புறவழிச்சாலைகள் - ரூ. 2,006 கோடியில் உயர்மட்ட மேம்பாலங்கள்!

## நிதி நிலை அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

6. காலத்தை வென்று நிலைத்து நிற்கும் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களால்தான், தமிழ்நாடு வளர்ச்சிப்பாதையில் கம்பீரமாகப் பயணித்து வருகிறது. ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வு குறித்த அளவற்ற கருணையும், அந்நோக்கத்தை நிறைவேற்றிடத் தேவையான நிதி ஒதுக்கீடும் முறையாக அமைந்ததால் நமது மாநிலம் முன்னேற்றத்தை அடையத் தொடங்கியது.

7. **“கருணையும், நிதியும்”** ஒன்றாகச் சேரும் போதெல்லாம் தமிழர் தலைநிமிர்ந்தனர்; தமிழ்நாடு வளம் பெற்றது என்பதை நாடறியும். இம்மாமன்ற உறுப்பினர்களும் அதை வழிமொழிவார்கள் என்று நான் நம்புகிறேன்.

8. இந்த வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்கிட வழிகாட்டியாக அமைந்தவை பேரறிஞர் அண்ணாவின் சொல்லோவியம்தான். நிதியமைச்சராகவும் பொறுப்பு வகித்த பேரறிஞர் அண்ணா 1967-68ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் பொழுது **“இந்த வரவு செலவுத் திட்டத்தில் மூன்றரை கோடி மக்களுடைய வாழ்வும், தாழ்வும் இந்த 64 பக்கங்களில் அடங்கியிருக்கின்றன. நம்முடைய இதயமும் அதிலே கலக்கப்பட்டிருக்கிறது. நம்மைத் தேர்ந்தெடுத்த மக்களின் இலட்சியங்கள் இதில் அடங்கியிருக்கின்றன” என்று குறிப்பிட்டார்.**

9. அறிஞர் அண்ணாவின் அறிவுரைகளைத் தாங்கியே இந்த வரவு - செலவுத் திட்டத்தை வெறும் புள்ளிவிவரக் குவியலாக இல்லாமல் கடைக்கோடித் தமிழரின் எண்ணங்களின் எதிர்பாரா அணிவகுப்பாக மாற்றிட முயன்றிருக்கிறோம். மேலும், பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையே தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை வழிநடத்த வேண்டிய சூழலில் நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

10. ஆழிசூழ் தமிழ் நிலப்பரப்பிற்குள் அழையா விருந்தினர் போல் அவ்வப்போது வருகை புரிந்து இன்னல்கள் பல கொடுத்திடும் இயற்கைப் பேரிடர்கள் ஒருபுறம்; கூட்டாட்சித் தத்துவத்தை அடியோடு மறந்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளும் ஒன்றிய அரசு மறுபுறம்; இதற்கிடையே தமிழ்நாட்டை வளர்ச்சிப்பாதையில் அழைத்துச் செல்ல உதவும் வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கிட வேண்டிய தேவை எழும் போதெல்லாம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழிகாட்டுதல்கள் மட்டுமே கலங்கரை விளக்கமாய் எங்களுக்கு அமைந்தன.

**11. “அறநெறி முதற்றே அரசின் கொற்றம்” எனச் செயல்பட்டு வரும் நமது முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசுக்கென ஒரு மாபெரும் தமிழ்க்கனவு உண்டு. வானவில்லின் வண்ணங்களைப் போன்று ஏழு முதன்மையான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தமிழ்க் கனவு அது.**

**1 சமூக நீதி**

**2 கடைக்கோடித் தமிழர் நலன்**

**3. உலகை வெல்லும் இளைய தமிழகம்**

**4. அறிவுசார் பொருளாதாரம்**

**5. மகளிர்நலன் காக்கும் சமத்துவப் பாதை**

**6. பசுமைவழிப் பயணம்**

**7. தாய்த் தமிழும் - தமிழர் பண்பாடும்.**

இந்த ஏழு இலக்குகளை முன்வைத்தே இந்த வரவு - செலவுத் திட்டம் அமையப் பெற்று இருக்கிறது.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (19.2.2024) தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### தமிழ்மொழி வளர்ச்சி!

12. தமிழர்களின் ஒற்றுமை, அரசியல் நேர்மை, குடிமக்கள் உரிமை, வணிகச் சிறப்பு, சமய நல்லிணக்கம், பசிப்பிணி ஒழிப்பு மற்றும் பெண்ணியம் உள்ளிட்ட சமூகச் சிந்தனைகள், பண்பாட்டு மரபுகள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் தமிழின் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை 25 இந்திய மற்றும் உலக மொழிகளுக்குச் சென்றடையும் வகையில், அவற்றை மொழிபெயர்க்க 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. நமது செழுமையான தமிழ் இலக்கியப் படைப்புகளை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லவும், சிறந்த பன்னாட்டு அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பெற்றுத் தமிழில் பல புதிய படைப்புகளை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு, சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியை இரண்டாவது ஆண்டாக வெற்றிகரமாக நடத்தியது. இதில் 40 நாடுகளில் இருந்து 75க்கும் மேற்பட்ட பதிப்பாளர்கள் மற்றும் இலக்கிய முகவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தமிழ்ப் படைப்புகளை பிற மொழிகளுக்கு மொழி பெயர்க்க 483 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உட்பட, மொத்தம் 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

14. கடந்த இரு நூற்றாண்டுகளில் பல்வேறு உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்நூல்களை விட இரண்டு மடங்கு தமிழ்நூல்களை, தற்போது இரண்டே ஆண்டுகளில் மொழிபெயர்த்திட இவ்வரசு முன்முயற்சி எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச்சிறந்த நூல்களை உலகின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களிலும், புகழ்பெற்ற நூலகங்களிலும் இடம்பெறச் செய்ய இவ்வாண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும். **தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவிடச் செய்யும் இம்முயற்சிக்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.**

15. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவராக பதவியேற்றிருந்த காலத்தில் கல்லூரி மாணவர்களுக்கான 32துறைகள் சார்ந்த 875 கலை, அறிவியல் பாடநூல்களை தமிழ்வழியில் வெளியிட்டு சாதனை படைத்தார். அவர் வகுத்துத் தந்த பாதையில் பயணித்து, தற்போது, கலைஞர் நூற்றாண்டில் தமிழ்நாடு பாடநூல் கழகம் இதுவரை 340 மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், இலக்கிய மொழி பெயர்ப்பு நூல்களை வெளி யிட்டுள்ளது. அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் 600 முக்கிய நூல்கள் தமிழில் வெளியிடப்படும்.

16. 25ஆண்டுகளுக்கு முன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னின்று நடத்திய தமிழ் இணையம் - 99 மாநாட்டிற்குப் பிறகு, இந்த ஆண்டு வெற்றிகரமாக நடைபெற்ற கணித்தமிழ் -24 மாநாட்டில் உலகெங்கிலும் இருந்து தமிழறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், மின்னணு வணிக நிறுவனங்களுடைய நிர்வாகிகள் கலந்துகொண்டு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தமிழுக்கான இடம் குறித்து ஆக்கப்பூர்வமாக விவாதித்து பல செயல்திட்டங்களை உருவாக்கியுள்ளனர். அதன்படி துரிதமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பப் பரப்பில் தமிழ்மொழி செழித்து வளரத் தேவையான இயந்திரவழிக் கற்றல் (Machine Learning) செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயற்கைமொழிச் செயலாக்கம் (Natural Language Processing), பெருந்திரள் மொழி மாதிரிகள் (Large Language Models) போன்ற புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கிடும் புத்தொழில்நிறுவனங்களுக்குநிதியுதவிஅளித்திட இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

17. தமிழ் இணைய கல்விக்கழகம் உருவாக்கியுள்ள தமிழ் மின் நூலகம் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய மின் நூலகமாகத் திகழ்ந்து வருகிறது. 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்நூல்கள், பருவ இதழ்கள், அரிய ஆவணங்கள் மற்றும் 8 இலட்சம் ஓலைச்சுவடிப் பக்கங்கள் இந்த நூலகத்தில் காணக் கிடைக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 5 கோடி முறை இந்த இணையதளம் பயனர்களால் பார்வையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழியின் வளம் தமிழரின் தொன்மை குறித்து எதிர்காலத் தலைமுறையினருக்கும் கொண்டு சேர்த்திடும் வகையில் தமிழ்நாடெங்கும் உள்ள அரிய நூல்கள் மற்றும் ஆவணங்களை மின்பதிப்பாக மாற்றும் முயற்சிக்கு இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

### பழங்குடி மொழி வளங்களை ஆவணப்படுத்துதல்

18. தமிழ்நாட்டில் பேசப்படும் சௌராஷ்டிரா, படுக மொழிகளையும் தோடர், கோத்தர், சோளகர், காணி, நரிக்குறவர் உள்ளிட்ட பல்வேறு பழங்குடியின மக்களின் மொழி வளங்கள் மற்றும் ஒலி வடிவங்களையும் எதிர்காலத் தலைமுறையினருக்குப் பயன்படும் வகையில் இனவரைவியல் (Ethnography) நோக்கில் ஆவணப்படுத்திப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திடும்.

### பண்பாடு!

19. கீழடி எனும் ஒற்றைச்சொல் தமிழர்தம் மரபுவழிப் பயணத்தில், தலைமுறைகளைத் தாண்டி உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தது. கூடல் மாநகருக்கு அருகே வைகைக் கரையில் சங்ககாலத்தில் செழித்து வளர்ந்த நகர நாகரிகத்தினை தொல்லியல் அகழ்வாராய்ச்சி மூலம் வெளிக்கொணர்ந்ததை ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமே கொண்டாடி மகிழ்ந்தது. தமிழரின் நீண்ட நெடிய பண்பாட்டு மரபினை மொழி, வரலாறு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் துணைகொண்டு, சான்றுகளின் அடிப்படையில் அறிவுலகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உறுதி யாக நிறுவிடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது.

20. அந்த வகையில் தமிழ்நாட்டில் 2024 -25 ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்டம் - கீழடி, விருதுநகர் மாவட்டம் - வெம்பக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் - பொற்பனைக்கோட்டை, திருவண்ணாமலை மாவட்டம் - கீழ்நமண்டி, தென்காசி மாவட்டம் - திருமலாபுரம், திருப்பூர் மாவட்டம் - கொங்கல்நகரம், கடலூர் மாவட்டம் மருங்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் - சென்னானூர் என மொத்தம் எட்டு இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு மட்டுமின்றி பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் காலச்சுவடுகளைத் தேடி கேரள மாநிலத்திலுள்ள முசிறி (பட்டணம்), ஒடிசா மாநிலத்திலுள்ள பாலூர், ஆந்திர மாநிலத்திலுள்ள வெங்கி, கர்நாடகத்திலுள்ள மஸ்கி ஆகிய தொல்லியல் சிறப்புமிக்க இடங்களிலும் இந்த ஆண்டு அகழாய்வு மேற்கொள்ளப்படும். மேற்கூறிய பகுதிகளில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள தொல்லியல் துறைக்கு **5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். அகழ்வாராய்ச்சிக்கென நாட்டிலேயே ஒரு மாநிலத்தில் இவ்வளவு அதிக நிதியை தமிழ்நாடு அரசுதான் தொடர்ந்து வழங்கி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

21. தேசிய கடல்சார் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களோடு இணைந்து, கொற்கை மற்றும் சங்ககாலப் பாண்டியரின் துறைமுகமான அழகன்குளம் ஆகிய பகுதிகளின் கடலோரங்களில் 65 இலட்சம் ரூபாய் செலவில் முன்கள ஆய்வும் அதனைத் தொடர்ந்து ஆழ்கடல் ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

22. கீழடி அகழாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட சங்ககால செங்கல் கட்டுமானங்கள், உறைகிணறுகள், தொழிற்கூடப் பகுதிகள் ஆகியவற்றை பொதுமக்களும், எதிர்காலத் தலைமுறையினரும் நேரடியாகக் கண்டு உணரும் வகையில், கீழடி அகழாய்வுத் தளத்தில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம் (Open Air Museum) ஒன்று 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், நவீன மரபணுவியல் தொழில்நுட்பங்களைக் கொண்டு தமிழ்மக்களின் மரபணுத் தொன்மை, இடப்பெயர்வு, வேளாண்மை, பண்பாட்டு நடைமுறைகள் மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களைக் கண்டறிய மதுரை காமராசர் பல்கலைக்கழக மரபியல் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தொல்மரபணுவியல் ஆய்வகம் மூலம் தொல்மரபியல் ஆய்வினை மேற்கொள்வதற்கு 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

23. சிந்துவெளிப் பண்பாடு குறித்து முதன் முதலில் இந்தியத் தொல்லியல் துறையின் தலைவராக இருந்த சர் ஜான் மார்ஷல் அவர்களால் 1924-ஆம் ஆண்டு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்நிகழ்வை நினைவுகூரும் வகையில் சிந்துவெளிப் பண்பாட்டு நூற்றாண்டுக் கருத்தரங்கம், பன்னாட்டு அறிஞர்கள் கலந்து கொள்ளும் வகையில் இந்த ஆண்டு சென்னையில் நடத்தப்படும்.

## சமூக முன்னேற்றம் – தொழில் வளர்ச்சி என அனைத்துத் தளங்களிலும் தமிழ்நாடு முத்திரை பதித்துள்ளது

### ஊரக வளர்ச்சி !

24. இருபத்தியோராம் நூற்றாண்டிலும், இன்றளவும் கிராமப் பகுதிகளில் வறுமையின் அடையாளமாக எஞ்சியிருப்பவை குடிசைகளே. குடிசைகளில் வாழ்ந்திடும் குடும்பங்கள் பாதுகாப்பான நிரந்தர வீடுகளுக்கு இடம் பெயரும்போது, ஏற்றத்தாழ்வு கொண்ட இந்தச் சமூகத்தில் அவர்கள் சுயமரியாதையுடன் தங்கள் வாழ்வைத் தொடர்ந்திடக் கிடைக்கும் பெரும் வாய்ப்பாகவே அது அமைந்திடும். இவற்றை எல்லாம் உணர்ந்துதான், நாட்டிலேயே முதன்முறையாக ஊரகப் பகுதிகளில் ஏழைக் குடும்பங்கள் வசிக்கும் குடிசைகளுக்குப் பதிலாக நிரந்தர வீடுகள் கட்டித்தரும் முன்னோடித் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2010 ஆம் ஆண்டு குடிசையில்லா மாநிலம் என்ற இலக்கை எய்திடும் வகையில் ‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’ அறிமுகப் படுத்தப்பட்டது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்






# கடைக்கோடித் தமிழரின் எண்ணங்களின் அணிவகுப்பாக மாற்றிட முயற்சி!

## நிதி நிலை அறிக்கை!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

25. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் குடிசைகளை மாற்றி அனைவருக்கும் பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகளை அமைத்துத் தரும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட சமீபத்திய கணக்கெடுப்பின்படி, கிராமப் பகுதிகளில் ஏறத்தாழ எட்டு இலட்சம் குடிசை வீடுகளில் மக்கள் வாழ்ந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. **‘குடிசையில்லா தமிழ்நாடு என்ற இலக்கினை எய்திடும் வகையில், வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் எட்டு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும். முதற்கட்டமாக, 2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் ஒவ்வொன்றும் 3.50 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

26. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளில் சொந்தமாக வீட்டுமனை இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குவதுடன், வீடு கட்டுவதற்கான தொகை அவர்தம் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்படும். அறிவியல்பூர்வமான கணக்கெடுப்பு, வெளிப்படையான பயனாளிகள் தேர்வு முறை, தங்கள் கனவு இல்லங்களை பயனாளிகள் தாங்களே உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பு என குறிப்பிடத்தக்க அம்சங்களைத் தாங்கிய **இப்புதிய திட்டம் ‘கலைஞரின் கனவு இல்லம்’ என்ற பெயரில் வரும் நிதியாண்டில் 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்**.

27. தரமான சாலை வசதிகளை கடைக்கோடி கிராம மக்களும் எளிதில் பெற்றுப் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட, முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்” கீழ் 2024-25 ஆம் ஆண்டில், 2,000 கிலோமீட்டர் சாலை மேம்பாட்டுப் பணிகள் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

28. தமிழ்நாட்டில் அனைத்து குக்கிராமங்களும் அடிப்படை வசதிகளைக் கொண்டு தன்னிறைவு பெற்றிடும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் -II இன் கீழ். 2024-25 ஆம் ஆண்டில் 2,482 கிராம ஊராட்சிகளில் 1,147 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

29. 105 ஆண்டுகளுக்கு முன்பே, 1919 ஆம் ஆண்டிலேயே, காவிரி ஆற்றில் இருந்து நீரேற்றம் செய்து, ஐந்து இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர்த்தேக்கம் செய்து, ஈரோடு நகரெங்கும் குழாய் பதித்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் முன்னோடித் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகம் செய்து நிகழ்த்திக் காட்டியவர் அன்றைய ஈரோடு நகர்மன்றத் தலைவராகப் பதவி வகித்த தந்தை பெரியார் அவர்கள்.

“மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு” என முழங்கி,தமிழ்ச்சமூகத்தை வழிநடத்திய தந்தை பெரியார், உள்ளாட்சி அமைப்புகளின் முதன்மையான பணியாக பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை முன்னிறுத்தி, அத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியும் காட்டினார் என்பது நமக்கெல்லாம் பெருமை. தந்தை பெரியாரின் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, கடந்த மூன்று ஆண்டுகளில் **ஊரகப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு 46 இலட்சம் குடிநீர் இணைப்புகளை வழங்கியுள்ளது. மேலும், ஊரகப் பகுதிகளில் உள்ள பழைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குப் பதிலாக, 365 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இந்த ஆண்டு அமைக்கப்படும்.**

30. நாட்டிலேயே நகரமயமாக்கம் அதிகம் காணப்படுவது தமிழ்நாட்டில் தான். நகரமயமாதல் என்னும் வளர்ச்சிப் பாதையில் சென்னைப் பெருநகர மாநகராட்சி உள்ளிட்ட பல மாநகராட்சிகளை ஒட்டிய விரிவாக்கப் பகுதிகளுக்குத் தேவையான சாலை வசதிகள், குடிநீர் இணைப்பு மற்றும் தெருவிளக்கு வசதிகள் உருவாக்கித் தர வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு **மாநகராட்சிப் பகுதிகளை அடுத்துள்ள விரிவாக்கப் பகுதிகளில், வரும் ஆண்டில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

31. ‘விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்த்துளி’ என்ற சொற்றொடரை முழுவதுமாக உள்வாங்கி, கல்லணை முதல் சங்கிலித்தொடர் ஏரிகள், குளங்கள் என நீர் மேலாண்மையின் உச்சத்தை தமிழ்ச் சமூகம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே எட்டியிருந்தது. ஆனால், காலப்போக்கில் இந்த நீர்நிலைகள் ஆங்காங்கே பராமரிப்பு இன்றியும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியும் தன் நிலையை இழந்து வருகின்றன. இந்தச் சூழலில் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் வரத்துக் கால்வாய்களைச் சீரமைத்து மேம்படுத்தி, இயற்கையை மீட்டெடுக்கும் பெரும் முயற்சியாக **இந்த ஆண்டில் சுமார் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைசிறந்த அறிவியல் நிறுவனங்களின் வழிகாட்டுதலுடன் மக்கள் பங்களிப்போடு 5,000 நீர்நிலைகளைப் புனரமைக்கும் பெரும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.**

32. ஊரகப் பகுதிகளில் ஏழை எளிய மக்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பு வழங்கிடும் விதமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை நாட்டிலேயே மிகச் சிறப்பாகச் செயல்படுத்திடும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும் 92 இலட்சம் பயனாளிகளில், 26 இலட்சம் ஆதி திராவிடர்களும் 16 இலட்சம் பழங்குடியினர்களும் அடங்குவர். அதிலும் குறிப்பாக, 79 இலட்சம் பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவது குறிப்பிடத்தக்கது. 2024-25 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 3,300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

33. நெகிழிக் கழிவுகள் உள்ளிட்ட மட்காத குப்பைகள், கிராமப்புறங்களின் சுற்றுச்சூழலை மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகிடுவதைத் தவிர்க்க, முறையான திடக்கழிவு மேலாண்மைக் கட்டமைப்புகளை உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் உருவாக்கி, மட்காத குப்பைகளை முறையாகச் சேகரித்து மறுசுழற்சி செய்தல், தொழில் நிறுவனங்களின் எரிபொருள் பயன்பாட்டிற்கு வழங்குதல் போன்ற பணிகளைச் செயல்படுத்தி சுகாதாரமான தமிழ்நாட்டை உருவாக்கிடும் நோக்கோடு, ஒரு புதிய நிறுவனம் ஏற்படுத்தப்படும்.




**வறுமை ஒழிப்பு!**

34. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நாட்டிற்கே முன்னோடியாக விளங்கிடும் வகையில், தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பல சமூகநலத்திட்டங்களின் வாயிலாக வறுமையை குறைப்பதில் நமது மாநிலம் மிகச் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அதை அங்கீகரிக்கும் வகையில் ஒன்றிய அரசின் ‘நிதி ஆயோக்’ சமீபத்திய தனது அறிக்கையில் பன்முக வறுமைக் குறியீட்டின்படி, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சதவீதம் மிகக் குறைவாக 2.2 சதவீதம் மட்டுமே என அறிவித்துள்ளது. இருப்பினும், தற்போது மிகவும் வறியநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைக்கோடி ஏழைக் குடும்பங்களையும் கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிட அரசு முடிவு செய்துள்ளது. **அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மிகவும் வறியநிலையில் உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழைக் குடும்பத்தினருக்கு அரசின் உதவிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வழங்கி, விரைவில் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்திட அரசு உறுதியாக உள்ளது.**

35. ஆதரவற்றோர், தனித்து வாழும் முதியோர், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்புக் குறைபாடு உடைய குழந்தைகள் உள்ள குடும்பங்கள் போன்ற சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்திடும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமன்றி கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, வீடுகள் போன்ற அனைத்து உதவிகளும் வழங்கப்படும். அரசிடம் உள்ள தரவுகள், கள ஆய்வு, மக்கள் பங்கேற்புடன் கலந்துரையாடல், கிராமசபை ஆகியவற்றின் மூலம் மாநிலம் முழுக்க மிகவும் ஏழைக் குடும்பங்கள் கண்டறியப்படும். ‘**முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்**’ என்ற பெயரிலான இப்புதிய திட்டத்தில், மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பங்கேற்பும் உறுதி செய்யப்படும். இந்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 27,922 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்**

36. தமிழ்நாட்டில் நகர்ப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, பொது சுகாதாரம், இணைப்புச் சாலைகள், தெருவிளக்குகள், நவீன மின் மயானம், நூலகங்கள் மற்றும் கணினியுடன் கூடிய அறிவுசார் மையங்கள், பாதாளச் சாக்கடை மற்றும் சமுதாய அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கும் நோக்கத்தோடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 1,328 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் முடிவுற்று 1,659 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட, வரும் நிதியாண்டில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். அம்ருத் 2.0 திட்டத்தில், 4,942 கோடி ரூபாய், ஒன்றிய அரசு பங்களிப்புடனும் 9,047 கோடி ரூபாய் மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடனும், திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2024-25 ஆம் ஆண்டில், பல்வேறு திட்ட நிதிகளைத் திரட்டி நகர்ப்புர உள்ளாட்சிப் பகுதிகளில் 4457 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 2,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.**

## நிதி ஆதாரங்களைத் திரட்டும் மாநில அரசின் அதிகாரத்தை ஒன்றிய அரசு கட்டுப்படுத்துகிறது !

37. சென்னை பெருநகர மாநகராட்சியில் நவீன, உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் 42 விரிவாக்கப் பகுதிகளில் கட்டமைப்பை மேம்படுத்தவும் “சிங்காரச் சென்னை 2.0” திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது. இதுவரை, கடந்த 3 ஆண்டுகளில் 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,183 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு வரும் நிதியாண்டு 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

38.விரைவான நகரமயமாக்கலின் விளைவாக, சென்னை மாநகரத்தில் வாகனப் போக்குவரத்து பன்மடங்காக அதிகரித்துள்ளதால் ஏற்படும் கடும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, சென்னையில் அதிகப் போக்குவரத்து நெரிசல் கொண்ட சாலைகள் அகலப்படுத்துவதற்காகக் கண்டறியப்பட்டுள்ளன. அதன் முதற்கட்டமாக, புதிய ஆவடி சாலை, பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலைகளை 18 மீட்டராகவும், டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை மற்றும் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலைகளை 30.5 மீட்டராகவும் வளர்ச்சி உரிமைப் பரிமாற்ற (TDR) முறையில் அகலப்படுத்தும் திட்டம், சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

39. சென்னை சிங்காரச் சென்னையை உருவாக்கும் நோக்கோடு தீவுத்திடலில் இயற்கை வனப்புடன் கூடிய நகர்புரப் பொதுச் சதுக்கம், கண்காட்சி அரங்குகள், திறந்த வெளி திரையரங்கம் போன்ற நவீன சமூகக் கட்டமைப்பு வசதிகளை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் 104 கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சென்னை கடற்கரையோரப் பகுதிகளை அழகுற சீரமைத்து மேம்படுத்திடும் நோக்கோடு கோவளம், எண்ணூர், பெசன்ட் நகர் ஆகிய கடற்கரைப் பகுதிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வசதிகளுடன் மெருகூட்டி அழகுபடுத்தப்படும்.

40. நாட்டிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான சென்னை மாநகரத்தின் சில பகுதிகளில், குறிப்பாக, வடசென்னையில் போதிய அளவு அடிப்படை வசதிகளும் கட்டமைப்புகளும் இல்லாத நிலை உள்ளது. **சென்னை மாநகரில் சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்ய “வடசென்னை வளர்ச்சித் திட்டம்” எனும் புதிய முயற்சியை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.** இத்திட்டத்தின் கீழ், வாட்டர் பேசின் (water basin) சாலையில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் புதிய குடியிருப்புகள், எழும்பூரில் குழந்தைகள் நல மருத்துவமனையில் 53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உயர்தர சிகிச்சைப் பிரிவு (Super speciality block), இராயபுரத்தில் RSRM மருத்துவமனையில் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய கட்டடங்கள், பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய தளங்கள், 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்பயிற்சி நிலையம், 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரெட்டேரி, வில்லிவாக்கம், பாடி ஏரிகளை சீரமைத்தல், 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 பள்ளிகளைப் புதுப்பித்தல், மேம்படுத்துதல் மற்றும் கணினிமயமாக்கல் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் என மொத்தம் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

41. சென்னை மாநகராட்சி வடசென்னை பகுதிகளில் பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் அவற்றுக்கான தேவைகளை நிறைவு செய்ய, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள கழிவுநீர் சேகரிப்புக் குழாய்கள், கழிவுநீர் இறைக்கும் நிலையங்கள், உந்து குழாய்கள் மற்றும் உபகரணங்களின் செயல்திறன் போதுமானதாக இல்லை. எனவே, வடசென்னைப் பகுதிகளில் கழிவுநீர் மற்றும் குடிநீர் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு கழிவுநீரைத் திறம்பட அகற்றுவதற்கும், நீர்நிலை மாசுபாட்டைத் தவிர்ப்பதற்கும் 946 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய திட்டம் நிறைவேற்றப்படும்.

42. சென்னையை ஒட்டி பூந்தமல்லிக்கு அருகில் அதிநவீனத் திரைப்பட நகரம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது. சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இந்தக் கனவுத் தொழிற்சாலையில் VFX, Animation மற்றும் LED Wall போன்ற நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய படப்பிடிப்புத் தளங்கள், படத் தயாரிப்புக்குப் பிந்தைய பணிகளுக்கான (Post Production) கட்டமைப்புகள் மற்றும் படப்பிடிப்பிற்குத் தேவையான கட்டமைப்புகள், அரசு தனியார் பங்களிப்புடன் (Public-Private Partnership) அமைக்கப்படும்.

43. தமிழ்நாட்டில் நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்களுக்குத் தூய்மையான மற்றும் பசுமையான வாழிடச் சூழலை உருவாக்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. சென்னையில் உள்ள முக்கிய நீர்வழிகளான அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் கொசஸ்தலையாறு ஆகியவற்றைச் சீரமைத்திட இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதன் முதற்கட்டமாக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கூடுவாஞ்சேரியிலிருந்து தாம்பரம், திருநீர்மலை, மணப்பாக்கம், ஆலந்தூர், சைதாப்பேட்டை பகுதிகள் வழியாகப் பாய்ந்து, வங்கக்கடலில் கலக்கும் அடையாறு நதியை மீட்டெடுத்து அழகுறச் சீரமைக்கும் திட்டம், அரசு தனியார் பங்களிப்புடன் சுமார் 1,500 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். அடையாறு ஆற்றின் இரு கரைகளிலும் 70 கிலோமீட்டர் தூரத்திற்கு கழிவுநீர்க் குழாய்கள் அமைத்து கழிவுநீர் வெளியேறுவதற்கு ஏற்ற மாற்று வழிகளை அமைப்பது, நாள் ஒன்றிற்கு 110 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட 14 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஆற்றின் கரையில் மக்களின் மனம் கவரும் வகையில் நான்கு பூங்காக்கள் அமைத்தல் மற்றும் நதிக்கரை நெடுக பசுமைப் பரப்புகளை அதிகரிப்பது போன்ற சிறப்பு அம்சங்களை கொண்ட இத்திட்டம் விரைவில் தொடங்கப்பட்டு 30 மாத காலகட்டத்தில் பணிகள் நிறைவு செய்யப்படும். சைதாப்பேட்டை முதல் திரு.வி.க. பாலம் வரையிலான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 15 மாதங்களுக்குள்ளாகவே இப்பணிகள் முடிக்கப்படும்.

44. காவிரி தென்பெண்ணை
பாலாறு - தமிழ்
கண்டதோர் வைகை
பொருநை நதி - என
மேவிய ஆறு பலவோடத்
திருமேனி செழித்த தமிழ்நாடு

எனப் பாடிய மகாகவி பாரதியின் உணர்வுகளை உள்வாங்கி உரிய திட்டங்களை நமது அரசு தீட்டி வருகிறது. தமிழ்நாட்டின் பிற முக்கிய நகரங்கள் வழியாகப் பாய்ந்திடும் வைகை, காவிரி, தாமிரபரணி மற்றும் நொய்யல் ஆகிய நதிகளை ஒட்டிய பகுதிகள் சீரமைக்கப்பட்டு, நதிநீரை தூய்மையாகப் பராமரிக்கவும், கரையோரம் பசுமையான மரங்களுடன் கூடிய பூங்காக்கள், திறந்த வெளி அரங்கம் உள்ளிட்ட முக்கிய அம்சங்களுடன், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஈரோடு, மற்றும் கோயம்புத்தூரில் நதிகள் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ள விரிவான ஆய்வுப் பணிகள் மற்றும் திட்ட அறிக்கை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

45. வானுயர்ந்த கட்டடங்கள் பெருகி வரும் பெருநகரப் பகுதிகளில் பூங்காக்கள் மட்டுமின்றி, பசுமை வெளிகளை அதிகரித்து இயற்கைச் சூழலை மேம்படுத்துவதன் மூலம், நகர்ப்புரங்களில் காற்று மாசுபடுவதையும் குறைத்திட இயலும். எனவே, சென்னை பெருநகர மாநகராட்சி உள்ளிட்ட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பசுமைப் பரப்பை அதிகரிக்க வளர்ந்த மரங்கள் நடுவது, மியாவாக்கி காடுகள், பசுமைக்கூரைகள், செங்குத்துத் தோட்டங்கள், பசுமைச் சுரங்கப் பாதைகள், பசுமைத் திரைகள், நடைபாதைகளில் மரங்கள் அமைத்தல் என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. **இப்பணிகள் பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் பங்களிப்போடு, ‘நகர்ப்புர பசுமைத் திட்டம்’ என்ற புதிய திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.**

46.தமிழ்நாட்டில் தற்போது ஈரோடு, வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல், தாம்பரம், நாகர்கோவில், காரைக்குடி, இராஜபாளையம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 12 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் சோதனை அடிப்படையில் 24மணி நேரமும் தடையற்ற குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதே அடிப்படையில், 2024-25 ஆம் மதுரை மற்றும் சேலம் மாநகராட்சிகளிலும் நிதியாண்டில் 24மணி நேரமும் தடையற்ற குடிநீர் விநியோகம் விரிவுபடுத்தப்படும்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

# நிதிப் பற்றாக்குறையை குறைத்து சாதனை படைத்துள்ளது!

## நிதிநிலை அறிக்கை!... 4ஆம் பக்கத் தொடர்ச்சி

47. பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுக்கழிப்பறைகளை நவீன முறையில் சீரமைத்து வடிவமைத்தல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் புதிய கழிப்பறைகளைக் கட்டுதல் பணிகளுக்காக அரசு தனியார் பங்களிப்பு முறையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் 430 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இதே முறையில் இந்த ஆண்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும்




பெருநகர சென்னை மாநகராட்சியின் பிற பிற பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

48. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்தோடு 1,517 கோடி ரூபாய் மதிப்பில் நெமிலியில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. 9 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட இந்நிலையம் நிறைவுறும் தருவாயில் உள்ளது; விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

**குடிநீர் வழங்கல்**

49. 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வரும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் 7,890 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஓசூர் மாநகராட்சி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சிகள், 16 பேரூராட்சிகள், 20 ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள 6,802 ஊரகக் குடியிருப்புகளில் வசித்து வரும் நாற்பது இலட்சம் மக்கள் பயனடைவதுடன், அப்பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்கும் உதவும்.

50. கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் நகராட்சியிலுள்ள சுமார் 65,000 மக்களுக்குத் தேவையான அளவு குடிநீர் வழங்கும் பொருட்டும், பெரம்பலூர் மாவட்டத்தில் எறையூர் மற்றும் பாடலூரில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளாகத்திற்குத் தேவையான நீரை வழங்கும்பொருட்டும், ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் 366 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

51.காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், எருமப்பட்டி, கபிலர்மலை மற்றும் பரமத்தி ஆகிய 4 ஒன்றியங்களிலுள்ள 216 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் 358 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

52. வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, திண்டுக்கல் மாநகராட்சி, சின்னாளப்பட்டி. சேவுகம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 425 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் சுமார் 6 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் 565 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும். இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 25,858 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மகளிர் நலன்!**

53. **"ஒரு சமூகத்தில், பெண்கள் அடையும் வளர்ச்சியைக் கொண்டே அச்சமூகத்தின் வளர்ச்சியை மதிப்பிட வேண்டும்"** என்று உரைத்த அண்ணல் அம்பேத்கரின் வழியில், ஆணுக்கிங்கே பெண் நிகர் என்னும் சரிநிகர் சமத்துவப் பாதையில் மகளிர் நலன் காக்க பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. நாட்டிற்கே முன்னோடியாக பெண்களுக்கு சொத்துரிமை வழங்கி, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் தனி இட ஒதுக்கீடு அளித்தது முதல், அவர்களுக்கு விடியல் பயணத் திட்டம் வரை புதுமையான பல திட்டங்கள் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. அந்த வரிசையில் "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற இலக்கின்படி செயல்பட்டு அறிவிக்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம், ஒரு கோடியே பதினைந்து இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் அவர்களுடைய வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

54. விலைவாசி உயர்வால் தொடர்ந்து அதிகரிக்கும் குடும்பச் செலவுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்பது அவர்களது அன்றாட வாழ்க்கைக்கு பேருதவியாக இருப்பது மட்டுமின்றி, அவர்கள் மாதந்தோறும் கணிசமாக சேமிக்கவும் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின் நோக்கம், தரவுகளின் அடிப்படையில் பயனாளிகளைத் தேர்வு செய்த முறை, திட்டச் செயலாக்கத்தில் கணிணிமயம் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகிய அம்சங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. **மகத்தான இத்திட்டத்தை பல்வேறு மாநிலங்களிலுள்ள மகளிரும் பயன்பெறும் வகையில் எதிர்காலத்தில் இந்த நாடே பின்பற்றும் என்று நம்புகிறோம். மகளிர் நலன் காக்கும் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 13,720 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.**

55. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே கையெழுத்திட்ட முதல் ஐந்து கோப்புகளில் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கும் "விடியல் பயணம்" என்ற மகத்தான திட்டமும் ஒன்று. தமிழ்நாட்டு மகளிரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டம் அவர்களுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரிவதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவித்திருக்கின்றன. சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் விடியல் பயணத் திட்டத்தின் மூலம் பயணம் செய்யும் பெண்களின் சதவீதம் 40 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. தினமும் சராசரியாக 50 இலட்சம் மகளிர் பயணம் செய்து, ஜனவரி 2024 நிலவரப்படி, பேருந்துகளில் மகளிர் 444 கோடி பயணங்களை மேற்கொண்டுள்ளனர். மேலும், திருநங்கைகள் மற்றும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களும் **கட்டணம் இல்லாமல் பயணம் செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது, மாநிலத்தின் மலைப்பகுதிகளில் வாழும் மகளிர் பயன்பெறும் வகையில் நீலகிரி மாவட்டம், கொடைக்கானல், வால்பாறை போன்ற மலைப்பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். மகளிரின் பேராதரவு பெற்ற இத்திட்டத்திற்கான மானியத்தொகையாக 3,050 கோடி ரூபாயை 2024 - 25 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு ஒதுக்கியுள்ளது.**

56. காலத்திற்கேற்ப அரசு நலத்திட்டங்களின் நோக்கத்தையும், செயல் வடிவத்தையும் மாற்றித் தகவமைத்துக் கொள்வது முதிர்ச்சியடைந்த ஒரு அரசின் செயல்பாடாகும். அந்தவகையில், ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மாணவியர் உயர்கல்வி பயிலுவதை உறுதிசெய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டத்தில் 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் மாதந்தோறும் ரூபாய் 1,000 பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்ட பின்னர், உயர்கல்வியில் முதலாமாண்டு சேரும் மாணவிகளின் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 34 சதவீதம் அதிகரித்து, கூடுதலாக 34,460 மாணவியர் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர் என்பதை பெருமையுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட **இந்தப் புதுமைப்பெண் திட்டம், வரும் கல்வியாண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படும். இந்த ஆண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த 370 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**முதலமைச்சரின்**
**காலை உணவுத் திட்டம்!**

57. "Nothing is more powerful than an idea whose time has come" புகழ் பெற்ற பிரெஞ்சு இலக்கியவாதியான விக்டர் ஹியூகோவின் காலத்தை வென்ற இந்த வாசகத்திற்கு 21 ஆம் நூற்றாண்டில் செயல் வடிவம் கொடுத்தவர், நமது முதலமைச்சர் அவர்கள்.

58. மதியஉணவுத் திட்டம் மற்றும் சத்துணவுத் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்கள் தமிழ்நாட்டில் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், பல குழந்தைகள் காலைஉணவு அருந்தாமல் பள்ளிக்கு வருவதால் அவர்களிடம் கவனச்சிதறல் தென்படுவதையும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் குழந்தைகளின் நலன் பாதிக்கப்படுவதையும் எடுத்துக் கூறி, கல்வியாளர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் பலரும் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாகவே கோரிக்கைகளை முன் வைத்து வந்தனர். **எனினும், காலம் நமது முதலமைச்சர் அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தது.**

59. சமூகநீதியை அடிப்படையாகக் கொண்ட திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" கடந்த 2022ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளன்று மதுரையில் தொடங்கப்பட்டு, பிறகு கடந்த 2023ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 30,992 அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 15 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், மாணவர்களின் வருகை உயர்ந்துள்ளதோடு, அவர்களின் ஊட்டச்சத்தும் கற்றல் திறனும் மேம்பட்டுள்ளது என ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

60. **"பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியறிவு பெற்றிடவும், எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்"** என்று அறிவித்த முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தினை மேலும் முழுமையாகச் செயல்படுத்திட, **தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் மேலும் சுமார் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில், வரும் கல்வி ஆண்டு முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

61. தமிழ்நாட்டில் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தும் பொருட்டு **"ஊட்டச்சத்தை உறுதி செய்"** என்ற திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, அதன் விளைவாக, ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளில், 74 சதவீத குழந்தைகள் இயல்புநிலைக்கு முன்னேறியுள்ளனர். இன்னும், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ளவர்களாகக் கண்டறியப்படும் 6 மாதத்திற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளின் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்துப் பெட்டகம் வழங்கப்படும். மேலும், குழந்தைகள் மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்திடும் வகையில், வரும் நிதியாண்டில் சுமார் 70 கோடி ரூபாய் செலவில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 500 குழந்தைகள் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும். ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் 3,123 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

62. 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தொலைநோக்குடன் விதைக்கப்பட்ட சுயஉதவிக் குழுத் திட்டம், இன்று நாடெங்கும் கோடிக்கணக்கான மகளிரின் வாழ்க்கையில் ஒளியேற்றும் இயக்கமாக உருவெடுத்துள்ளது. மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்றி சமூகத்தில் பெண்களுக்கு உரிய பங்கினை வழங்கிடும் நோக்கில் அவர்களின் வளர்ச்சிக்கும், திறன் மேம்பாட்டிற்கும் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. இதுவரை, சுயஉதவிக் குழு இயக்கத்தில் இணைந்திடாத மகளிர் மற்றும் விளிம்புநிலை வாழ் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு, 10,000 புதிய சுயஉதவிக் குழுக்கள் வரும் நிதியாண்டில் உருவாக்கப்படும். மேலும், வரும் நிதியாண்டில் 35,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

63. தமிழ்நாட்டின் முத்திரை பதிக்கும் திட்டங்களில் ஒன்றான **'தோழி'** பணிபுரியும் மகளிர் விடுதிகள் தாம்பரம், திருச்சிராப்பள்ளி, கூடுவாஞ்சேரி உள்ளிட்ட 10 இடங்களில் 1,145 மகளிர் பயன்பெறும் வகையில் 35 கோடி ரூபாயில் அனைத்து நவீன வசதிகளுடன் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. சென்னை, திருவண்ணாமலை, ஓசூர் ஆகிய நகரங்களில், 432 பெண்கள் பயன்பெறும் வகையில், 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய 'தோழி' விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து, வரும் நிதியாண்டில், சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய முக்கிய நகரங்களில் 345 மகளிர் பயன்பெறும் வகையில் 26 கோடி ரூபாய் 3 புதிய 'தோழி' விடுதிகள் கட்டப்படும். மதிப்பீட்டில்

64. மூன்றாம் பாலினத்தவரின் நல்வாழ்வுக்கென பல்வேறு புதுமையான திட்டங்களை நாட்டிலேயே முன்னோடியாக தமிழ்நாடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. மூன்றாம் பாலினத்தவரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டினை உறுதிசெய்து, வாழ்க்கையில் வெற்றிபெற அவர்கள் உயர் கல்வி கற்பது மிகவும் இன்றியமையாததாகும். எனினும், தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மூன்றாம் பாலினத்தவர் மட்டுமே தமிழ்நாட்டில் உயர்கல்வி பயின்று வருகின்றனர். எனவே, **உயர்கல்வியைத் தொடர விரும்பும் மூன்றாம் பாலினத்தவரின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவுகளையும் அரசே ஏற்கும். திருநங்கைகள் நல வாரியம் மூலம்** நடைமுறைப்படுத்தவிருக்கும் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் கூடுதலாக அரசால் வழங்கப்படும்.

65. அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றை திறம்படச் செயல்படுத்தவும் அதன் நிர்வாகத்தை மேம்படுத்தவும் உரிய ஆலோசனைகள் வழங்கிட அமைக்கப்பட்ட மேனாள் நீதியரசர் திரு. கே. சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இத்துறையில் உரிய சீர்திருத்தங்களை மேற்கொள்வது என இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதுவரை சமூகப் பாதுகாப்புத் துறை என்ற பெயரில் இயங்கி வந்த இந்தத் துறை, இனி **"குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை"** என பெயர் மாற்றம் செய்யப்படும். மேலும், தலைமைப் பாதுகாப்பு அலுவலர் உள்ளிட்ட புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, துறையின் மனிதவள மேலாண்மை உறுதி செய்யப்படும்.

66.மேலும், முதற்கட்டமாக கோயம்புத்தூரில் குழந்தைகளுக்கான திறன் பயிற்சிக் கூடம், ஆலோசனை அறைகள், நூலகம், குடும்பப் பார்வையாளர்கள் அறை, மருத்துவப் பரிசோதனை அறை, பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய வசதிகளுடன் கூடிய ஒரு மாதிரி இல்லம் **பூஞ்சோலை** என்ற பெயரில் அமைக்கப்படும். இந்த வரவு செலவுத் திட்டமதிப்பீடுகளில் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு 7,830 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி!**

67.**"கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்"** என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். கல்வி முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவரும் தலைசிறந்த கல்வியாளருமான பேராசிரியர் அன்பழகன் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கென 7,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தை 5 ஆண்டுகளில் செயல்படுத்த இந்த அரசால் அறிவிக்கப்பட்டு, 2,497 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. **இந்நிதியாண்டிலும் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும்.**

68. அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றும் உயர்ந்த நோக்கத்தோடு அமைக்கப்பட்ட உண்டு, உறைவிட மாதிரிப் பள்ளிகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் படிக்கும் ஒவ்வொரு மாணவரும் நாட்டின் முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறமுடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் 38 மாதிரிப் பள்ளிகள் 352 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பல்வேறு மாவட்டங்களில் உள்ள 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக 100 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப் பட்டுள்ளன.

69. நவீன தொழில்நுட்பத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் பொருத்தமான கற்றல் கற்பித்தல் சூழலை உருவாக்கவும், அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளில் 525 கோடி ரூபாய் செலவில் 8,209 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech lab) மற்றும் 435 கோடி ரூபாய் செலவில் 22,931 தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classroom) அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளன. மேலும், வரும் நிதியாண்டில் 15,000 திறன்மிகு வகுப்பறைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப் படும்.

70. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் இல்லத்தில் முடங்கிக் கிடந்தவை குழந்தைகள் மட்டுமல்ல; அவர்களது கல்விக் கனவும் தான். அதனை மீட்டு அவர்களிடம் ஏற்பட்ட கற்றல் இடைவெளியைப் போக்கவும் கற்றல் இழப்பை ஈடுசெய்யவும், இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளிகளில் சேர்க்கவும் முதலமைச்சர் அவர்களால் இல்லம் தேடிக் கல்வி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளிலும் தன்னார்வலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் குழந்தைகளிடம் ஏற்பட்ட கற்றல் இழப்பை மீட்டெடுத்ததில் மிகப்பெரும் பங்காற்றியுள்ளது. வரும் கல்வி யாண்டு முதல் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை, தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்திட 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

## 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை!

### 126 நிமிடங்கள் அவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வாசித்தார்!



சென்னை, பிப். 20–

தமிழ்நாடு சட்டப் பேரவையில், நடப்பு நிதியாண்டுக்கான (2024– 2025) நிதி நிலை அறிக்கையை நிதி மற்றும் மனித வள மேலாணமைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 126 நிமிடங்கள் வாசித்தார்.

தமிழ்நாடு சட்டப் பேரவை நேற்று தொடங்கியதும் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் திருக்குறளை வாசித்து அதற்கான உரை விளக்கத்தையும் படித்தார்.

தொடர்ந்து நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் 10.01 மணிக்கு நிதிநிலை அறிக்கையை படிக்கத் தொடங்கினார்.

அரசின் அறிவிப்புகளை ஒன்றன்பின் ஒன்றாக அவர் படிக்கும் போதெல்லாம் அவையில் உறுப்பினர்கள் தங்கள் மேஜையினை தட்டி தட்டி தங்களது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினர்.

சிறிதும் இடைவெளி இன்றி 12.07 மணி வரை தொடர்ந்து 126 மணித்துளிகள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நிதி அறிக்கையினை வாசித்தார்.

அவர் நிதி நிலை அறிக்கையை வாசித்து முடித்தவுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இருப்பிடத்திலிருந்தவாறே நிதி அமைச்சரைப் பாராட்டினார்.

முன்னதாக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தனது உரையின் நிறைவாக, நிதி அறிக்கை அளிக்க தமக்கு வாய்ப்பளித்தமைக்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## தூத்துக்குடியில் விண்வெளி தொழில் பூங்கா!



# பள்ளிவாசல் - தேவாலயங்களை புனரமைக்க ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு!

## நிதிநிலை அறிக்கை!... 5ஆம் பக்கத் தொடர்ச்சி

71. வாசிப்பை நேசிக்கும் மக்கள் இயக்கம் ஒன்றை உருவாக்கிடும் உயரிய நோக்கில், சென்னை புத்தகக் கண்காட்சியைப் போன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 2022-23 ஆம் ஆண்டு முதல் 13 கோடி ரூபாய் அரசு நிதியுதவியுடன் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில், 37 மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில், சுமார் 55 இலட்சம் புத்தக ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். மேலும், இக் கண்காட்சிகளின் வாயிலாக, சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

72. இளைஞர்கள் அறிவுசார் தளத்தில் உயர்ந்திட நூலகங்கள் முதன்மைக் களமாக உள்ளன. குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் பொது நூலகங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்திட 213 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக்கல்வித் துறைக்கு 44,042 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### உயர்கல்வி

73. நாட்டிலேயே உயர்கல்விச் சேர்க்கை விகிதம் அதிகமாக உள்ள மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. அந்தச் சாதனை அளவைத் தக்கவைத்திடவும், கல்லூரி மாணவர்களுக்குத் தரமான உயர்கல்வியினைத் தொடர்ந்து வழங்கிடவும் இந்த அரசு பல முன்முயற்சிகளை எடுத்து வருகிறது. பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசுக் கல்லூரிகளின் கட்டடங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில், அரசு பொறியியல், கலை அறிவியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டடக் கட்டமைப்புப் பணிகள் 200 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். மேலும், ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்புடன் பொறியியல், பலவகை தொழில்நுட்பம், கலை, அறிவியல் கல்லூரிகள் உட்பட 236 அரசு கல்வி நிறுவனங்களுக்கு கணினி மற்றும் இதர அறிவியல் கருவிகள் 173 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். 45 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை (Poly Technic) தொழில்துறை 4.0 தரத்திற்கு உயர்த்திட 3,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

74. கடந்த 202122 ஆம் ஆண்டு பொறியியல், வேளாண்மை உள்ளிட்ட தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என அவர்களின் மொத்தக் கல்விச் செலவையும் முழுமையாக அரசே ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டத்தின் கீழ், பல்வேறு தொழிற்படிப்புகளில் தற்போது படித்து வரும் 28,749 மாணவர்களின் கல்விக் கட்டணத்தையும் அரசே ஏற்பதற்காக வரும் நிதியாண்டில் 511 கோடி ரூபாய் செலவிடப்படும்.

## கோவையில் கலைஞர் பெயரில் மாபெரும் நூலகம்!

75. பன்முகத் திறனுடன் கூடிய தொழிற் சூழல், தொழில் முனைவோரின் உற்சாகம், தலைசிறந்த கல்வி நிறுவனங்கள், இனிய விருந்தோம்பல் என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட கோயம்புத்தூர் மாநகரம், நாட்டிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும். கோவை வாழ் பொதுமக்களிடையே, குறிப்பாக **இளைய தலைமுறையினரின் அறிவுத் தாகத்தை மேலும் தூண்டும் விதமாக ஒரு மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம், முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் கோயம்புத்தூரில் அமைக்கப்படும்.** இதில் உலகத்தரம் வாய்ந்த நூல்கள், பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் இணைய வளங்களும் இடம் பெறுவது மட்டுமன்றி விண்வெளி, எந்திரவியல், மெய்நிகர் தோற்றம் (Virtual Reality), இயற்கை அறிவியல் என பல்வேறு அறிவியல் மற்றும் பொறியியல் பிரிவுகளைச் சார்ந்த கண்காட்சிகள் ஏற்படுத்தப்படும். மேலும், புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் திறன் வழங்கிடும் வகையில் ஒரு தொழில் வளர் காப்பகம் (Incubation Hub) ஏற்படுத்தப்படும். அறிவியலைக் கொண்டாடும் இப்புதிய மையம் அறிவுசார் தமிழ்ச் சமூகத்தின் அடையாளச் சின்னமாகத் திகழும். இந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர் கல்வித் துறைக்கு 8,212 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நான் முதல்வன்

76. உலகை வெல்லும் இளைய தமிழகத்தைப் படைக்கும் உயரிய நோக்கத்தோடு நான் முதல்வன் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். தனிச்சிறப்பு மிக்க இத்திட்டத்தில் இதுவரை சுமார் 28 இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 18 ஆயிரம் பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும், 20,000 கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு பயிற்சி பெற்ற மாணவர்களில் 1.19 இலட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

77. தமிழ்நாட்டில் பரவலாக கல்லூரிகளில் திறன் பயிற்சிக் கட்டமைப்பை உருவாக்குவது மிகவும் அவசியமாகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் **100 பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திறன் பயிற்சிக் கட்டமைப்புகள்** (Skill Labs) உருவாக்கப்படும்.

78. ஒன்றிய குடிமைப்பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரித்திட, ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு, அவர்கள் முதல்நிலை தேர்வுக்குத் தயாராக மாதந்தோறும் 7,500 ரூபாய் மற்றும் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, தற்போது **ஒன்றியப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே மற்றும் வங்கிப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிகம் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு சென்னை, கோவை, மதுரை மண்டலங்களில் உண்டு, உறைவிட வசதியோடு கூடிய தரமான ஆறுமாத காலப் பயிற்சி வழங்கிட 6 கோடி ரூபாய் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

79. அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடும் பொருட்டு, அரசு பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வரிசையில், அரசுப் பள்ளி மாணவர்கள் தங்களது பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயின்றிட உதவித் தொகை அளித்து உதவும் வகையில், ஒரு புதிய திட்டம் வரும் ஆண்டு அறிமுகப்படுத்தப்படும்.

80. உயர்கல்வியில் பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டம் பெண்களின் உயர்கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல், **அரசுப் பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும் அரசுப் பள்ளி மாணவரின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும் தமிழ்ப் புதல்வன்' எனும் ஒரு மாபெரும் திட்டம் வரும் நிதி யாண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்படும்.** இத்திட்டத்தின் கீழ், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள் பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். இத்தகைய முன்னோடித் திட்டங்களின் மூலம் நமது இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி அவர்கள் நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள். **இப்புதிய திட்டத்தின் மூலம் சுமார் மூன்று இலட்சம் கல்லூரி மாணவர்கள் பயனடைவர்.** உயரிய நோக்கம் கொண்ட இத்திட்டத்தை நிறைவேற்றிட வரும் நிதியாண்டில் 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.




81. தமிழ்நாட்டு மாணவர்களின் கல்லூரிக் கனவை நனவாக்கிடவும், அவர்தம் பெற்றோரின் நிதிச்சுமையைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலும், தேவையின் அடிப்படையில் **2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு 2,500 கோடி ரூபாய் அளவிற்கு, பல்வேறு வங்கிகள் மூலம் கல்விக்கடன் வழங்கிடுவதை அரசு உறுதி செய்திடும்.**

### இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு

82. விளையாட்டுப் போட்டிகளின் தலைமையகமாக தமிழ்நாட்டை மாற்றிடவும் இலட்சிய வேட்கையுடன் ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களை உருவாக்கிட, சென்னை, மதுரை, திருச்சி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் நான்கு ஒலிம்பிக் பயிற்சி மையங்கள் (Olympic Academy) நிறுவப்படும். இப்பயிற்சி மையங்கள் இறகுப்பந்து, கையுந்து பந்து, கூடைப்பந்து, தடகளம் உள்ளிட்ட விளையாட்டுகளுக்கான உலகத்தரமிக்க பயிற்சிகளை வழங்குவதுடன் விளையாட்டு அறிவியலுக்கான மையங்களாகவும் செயல்படும்.

83. தமிழ்நாட்டு இளைஞர்களின் ஆற்றலையும் அறிவுத்திறனையும் ஆக்கப்பூர்வமாகவும் பயனுள்ளதாகவும் மெருகேற்றி, தரணி போற்றிடும் சாதனையாளர்களாக உருவாக்கிட முதலமைச்சரின் இளைஞர் திருவிழாக்கள் தமிழ்நாடெங்கும் நடத்தப்படும். இளைஞர்களின் கலைத் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பேச்சு, பாட்டு, இசை, நடனம் என் பன்முகப் போட்டிகள் நடத்தப்படும். மேலும், கிரிக்கெட், கையுந்து பந்து, கால்பந்து, இறகுப்பந்து, சிலம்பம் என 33 விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிக்கான கருவிகள் அடங்கிய கலைஞர் விளையாட்டு தொகுப்புகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் வழங்கப்படும்.

84. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே தமிழ்நாடு அரசின் தாரக மந்திரம். இம் முயற்சிகளின் ஓர் பகுதியாக மாற்றுத்திறன் படைத்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் (Para Athletes) திறமைகளை மேம்படுத்திட, நாட்டிலேயே முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளுக்கான 6 விளையாட்டு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் மாற்றுத்திறனாளிகளின் விளையாட்டுத் திறனை வளர்க்கும் நோக்கோடு அவர்கள் விளையாடுவதற்கு ஏற்ற சிறப்பு இறகுப்பந்து, கையுந்து பந்து, வாள்வீச்சு உள்ளிட்ட ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

85. கடல்சார் நீர் விளையாட்டுகளில் இளைஞர்களின் ஆர்வத்தை ஈர்த்திடவும் நீர் விளையாட்டுப் போட்டிகளுக்கான உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பை ஏற்படுத்திடவும் இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாதமி (Tamil Nadu Olympic Water Sports Academy) இராமநாதபுரம் மாவட்டத்தில் பிரப்பன்வலசையில் அமைக்கப்படும். இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 440 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தொழிலாளர் நலன்

86. நல்ல தரமான வேலைவாய்ப்புகளை இளைஞர்கள் பெற்றிடும் வகையில், அவர்களின் திறனை உயர்த்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை "தொழில் 4.0" தரநிலைக்கு உயர்த்தி, 2,877 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்திறன் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

87. மேலும், கடலூர் மாவட்டம் வேப்பூர், திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி, திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் ஆகிய இடங்களில் **10 புதிய அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் 111 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.** அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் கல்வி கற்றல் தரத்தினை மேம்படுத்திட திறன் மிகு வகுப்பறைகள் அமைக்கப்படும்.

### மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு!

88. தமிழ்நாட்டில் மருத்துவத் துறையின் தொடர் முயற்சிகளினால், 2030 ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலம் தொடர்பான நிலைத்த வளர்ச்சி இலக்குகளை (SDG) நமது மாநிலம் ஏற்கெனவே எட்டியுள்ளது. இந்நிலையில், தமிழ்நாட்டில் தொற்றாநோய்களின் பரவல் அதிகரித்து வருவதை கருத்திற்கொண்டு, தொற்றாநோய் உண்டாவதற்கு முக்கியக் காரணிகளாக விளங்கும் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவது அவசியம். இந்நோக்கத்தோடு, "மக்களைத் தேடி மருத்துவம்' எனும் ஒரு மகத்தான திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் வீட்டிலிருந்தே பயன்பெறும் வகையில், சேவைகளை வழங்கும் இத்திட்டத்திற்காக, 243 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

89. மருத்துவக் காப்பீட்டினைப் பயன்படுத்தி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில், அரசு மருத்துவமனைகளின் பங்களிப்பை 50 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்தி, நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இந்த மருத்துவமனைகளில் கட்டமைப்பை மேலும் மேம்படுத்தி, உயர் சேவைகளை வழங்குவதற்காக காப்பீட்டுத் தொகுப்பு நிதியிலிருந்து 200 கோடி ரூபாய் செலவிடப்படும்.

90. விலைமதிப்பற்ற மனித உயிர்களைக் காத்து, 2 இலட்சம் நபர்களுக்கு மேல் பயன் பெற்றுள்ள நாட்டிலேயே முன்னோடியான 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தை மேலும் மேம்படுத்திட இந்த அரசு முனைந்துள்ளது. சிகிச்சை செலவுகளைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தின் கீழ், **விபத்து நடந்த முதல் 48 மணி நேரத்தில் வழங்கப்படும் இலவச சிகிச்சைக்கான உச்சவரம்புத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.**

91. மாநிலம் முழுவதிலும் உள்ள சிசிச்சைப் பிரிவுகள் மற்றும் நோய் கண்டறிதல் சேவைகளுக்கான கட்டமைப்பு வசதிகள் வரும் நிதியாண்டில் மேலும் மேம்படுத்தப்படும். இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், அரியலூர் மாவட்டம் செந்துறை, காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர், இராணிப்பேட் டை மாவட்டம் அரக்கோணம் ஆகிய அரசு மருத்துவமனைகளி




லும், தேனி மற்றும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், 50 படுக்கைகள் கொண்ட 6 தீவிர சிகிச்சைப் பிரிவுகள் 142 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். அதேபோல், ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டப்படும். மேலும், 87 கோடி ரூபாயில் 25 வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் 64 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

92. புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர சிகிச்சைகளை அளிப்பதோடு, இந்நோயை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடிப்பது புற்றுநோயால் ஏற்படும் உயிரிழப்பு களைக் குறைத்திட மிகவும் அவசியமாகும். இந்த வகையில், மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைத்துறைகளை இந்த அரசு மேம்படுத்தியுள்ளது. புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, நோய் வந்த பின்பு ஆரம்ப நிலையிலேயே அதனை கண்டறிவது, தகுந்த சிகிச்சை அளிப்பது மற்றும் புனர்வாழ்வு சேவைகள் அளிப்பது போன்ற பல்வேறு நோய் மேலாண்மை உத்திகளைக் கொண்டு, ஒரு புதிய புற்றுநோய் மேலாண்மை இயக்கத்தை இந்த அரசு செயல்படுத்தும். அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்குத் தேவையான உயர்தர சிகிச்சைக்காக கூடுதல் உயர்நிலை புற்றுநோய்க் கருவிகள் வழங்கப்பட்டு, அதை உயர்திறன் மையமாக (Centre of Excellence) தரம் உயர்த்தப்படும்.

93. 25 அரசு மருத்துவமனைகளில் சிறப்பு போதைப் பழக்க மீட்பு மையங்களை நிறுவி, மது மற்றும் போதைப் பொருட்களால் பாதிக்கப்பட்டோருக்கு தேவையான மனநல ஆலோசனை, மருத்துவ சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள் 20 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 20,198 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தொழில் வளர்ச்சி!

94. இந்தியாவின் முதலாவது PM MITRA ஜவுளிப் பூங்கா கடந்த ஆண்டு விருதுநகர் மாவட்டத்தில், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் தொடங்கப்பட்டது.

ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கான ஒருங்கிணைந்த மற்றும் மதிப்பூட்டப்பட்ட உற்பத்தி மையமாகத் திகழவிருக்கும் இப்பூங்காவை அமைக்கும் பணிகள் 1,683 கோடி ரூபாய் மதிப்பில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் இரண்டு இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மேலும் சிப்காட் நிறுவனம் மூலம், சேலம் மாவட்டத்தில் 111 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டு வரும் பூங்காவின் மூலம் 8,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் 800 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்படும்.

95. தஞ்சை மண்டலத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் விதமாக, தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி அருகில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 300 ஏக்கர் நிலப் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் ஒரு புதிய தொழிற்பூங்காவை அமைக்கும். இந்தப் புதிய பூங்காவில் உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல், தோல் அல்லாத காலணிகள் உள்ளிட்ட சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தாத தொழில்கள் அமைக்க உரிய முயற்சிகள் எடுக்கப்படும்.

96. உடனடியாக தொழில் தொடங்கிட விரும்பும் அயல்நாட்டு முதலீட்டாளர்களின் தேவையை நிறைவுசெய்யும் விதமாக ஆயத்தத் தொழிற்கூடங்களை (Plug and Play facilities) உருவாக்குவதற்கான கொள்கையை சிப்காட் வரும் நிதி யாண்டு முதல் செயல்படுத்தும். இந்த ஆயத்தத் தொழிற்கூடங்கள் பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புடன்முதற்கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் மாணலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்படும்.

97. தொழிற்துறைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கையில் நாட்டிலேயே அதிக பங்களிப்பை கொண்டிருப்பதும், மாநிலத்தின் தொழிற் சூழலமைப்பின் பாலினப் பன்முகத் தன்மையும் முற்போக்கான முதலீட்டாளர்கள் பலரை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கின்றன. இதனை உணர்ந்து, இவற்றை மேலும் உயர்த்திடவும், பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிப்பதை மேலும் அதிகரிக்கவும், ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும்.

**தமிழ்நாட்டைச் சார்ந்த பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர் போன்ற 500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு, அளிக்கும் புதிய தொழில் அவர்களின் ஊதியத்தில் 10 சதவீதம் ஊதிய மானியம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.** பணிபுரியும் மகளிரின் மழலைக் குழந்தைகளின் நலன் காத்து உதவும் வகையில் அனைத்து சிப்காட் தொழிற்பேட்டைகளிலும் பொதுத்துறை தனியார் பங்களிப்புடன் குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்படும். மகப்பேறு, திருமணம் போன்ற பல காரணங்களினால் பணியில் இடைநிற்க நேரிட்டு, மீண்டும் வேலைக்குச் செல்ல விரும்பும் பெண்களுக்குத் தேவையான தனித்திறன் பயிற்சி அளிப்பதற்கான புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

98. மாநிலத்தில் சமச்சீரான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு நல்ல ஒரு வாய்ப்பாக அமைந்தது. 6.64 இலட்சம் கோடி ரூபாய்க்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதில், தென்மாவட்டங்கள் 112 இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்துள்ளன. சிறிய அளவிலான செயற்கைக்கோள்களை ஏவுவதற்கான விண்வெளித் தளத்தை தூத்துக்குடி மாவட்டத்தில் இஸ்ரோ நிறுவனம் தற்போது உருவாக்கி வருகிறது. அதனையொட்டிய பகுதிகளில் **வான்வெளி சார்ந்த தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் விதமாக 2000 ஏக்கர் நிலப் பரப்பளவில் ஒரு புதிய விண்வெளி தொழில் மற்றும் உந்துசக்தி பூங்கா (Space Industrial and Propellant Park) டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும்.**

99. தமிழ்நாடு, ஓர் அறிவுசார் பொருளாதார மாநிலமாக வெற்றிகரமாக மாற்றம் அடைந்து வருவதற்கான அடையாளமாக, அதிக எண்ணிக்கையிலான முக்கிய பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் உலகளாவிய திறன் மையங்களை (GCC) தற்போது தமிழ்நாட்டில் அமைத்து வருகின்றன. உலகச் சந்தைக்குத் தேவையான அதிநவீன ஆராய்ச்சி, வடிவமைப்பு, மாதிரி வடிவமைப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு போன்றவை தற்போது நம் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவில், உலகளாவிய திறன் மையங்கள் அமைப்பதற்குரிய தலைசிறந்த இடமாக தமிழ்நாட்டினை உருவாக்குவதற்கு, மாநிலத்தில் அமைய உள்ள புதிய உலகளாவிய திறன் மேம்பாட்டு மையங்களில், ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மாத ஊதியத்துடன் உருவாக்கப்படும் உயர்திறன் மிக்க வேலைகளுக்கு முதலாமாண்டு 30 சதவீதம், இரண்டாமாண்டு 20 சதவீதம் மற்றும் மூன்றாமாண்டு 10 சதவீதம் ஊதிய மானியம் வழங்கப்படும். மேலும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் உலகளாவிய திறன் மையங்கள் அமைப்பதற்கான உகந்த சூழல் ஏற்படுத்தப்படும். இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைக்கு 2,295 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்!

100. முதல் தலைமுறை தொழில்முனைவோர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் வரும் நிதியாண்டில் 101 கோடி ரூபாய் அளவிற்கு மானிய உதவி அளிக்க நிதி ஒதுக்கப்படும். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் அவர்களுக்குரிய தொகை அளிக்கப்படுவதை உறுதிசெய்ய மின்னணு வர்த்தக வரவுகள் தள்ளுபடி (TReDS) தளத்தில் பெரும்பான்மையான பொதுத்துறை நிறுவனங்களும் இணைவது உறுதி செய்யப்படும்.

தொடர்ச்சி 7ஆம் பக்கம்

# முதலமைச்சர் தலைமையில் நாமெல்லாம் பணியாற்றுவது நமக்குக் கிடைத்த பெருமை!

## நிதி நிலை அறிக்கை... 6ஆம் பக்கத் தொடர்ச்சி

101. கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகளின் விளைவாக புத்தொழில் நிறுவனங்கள் (Startups) அமைவதற்கான உகந்த சூழலை உருவாக்குவதில் நாட்டிலேயே தலைசிறந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு தேர்வுசெய்யப்பட்டுள்ளது என்பது பெருமகிழ்ச்சிக்குரியது. உலகின் அந்த வெற்றியைத் தக்கவைக்கும் நோக்கோடு, உலகின் பல்வேறு பகுதிகளில் முத்திரை பதித்த முன்னணி புத்தொழில் நிறுவனங்களும், இளம் தொழில்முனைவோர்களும் கலந்துகொள்ளும் வகையில் “உலக புத்தொழில் மாநாடு” Global Startup Summit) வரும் 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடத்தப்படும்.

102. பல்வேறு சமூக மேம்பாடு குறித்த தேவைகள், காலநிலை மாற்றம், அரசுத்துறை சார்ந்த சேவைகள் குறித்தான தீர்வுகளை உருவாக்கவும், அவற்றை செயல்படுத்தக்கூடிய ஆர்வமும் ஆற்றலும் மிக்க தொழில்முனைவோர்களைக் கண்டறிந்து, அந்நிறுவனங்களுக்குத் தேவையான வளங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்திடவும், பெரியார் சமூகநீதி புத்தொழில் வளர்மையம் (Periyar Social Justice Venture Lab) ஒன்று உருவாக்கப்படும். சமூகத்தில் விளிம்புநிலையில் வாழும் மக்கள், பட்டியலின மற்றும் பழங்குடியினரால் தொடங்கி நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு இந்த மையம் முன்னுரிமை அளிக்கும்.

103. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் (TANSIDCO) திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் ஆகிய இடங்களில் மொத்தம் 80 ஏக்கர் பரப்பளவில், 32 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்கென் மூன்று புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும். இதன் மூலம் 3,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

104. குறுந்தொழில் முனைவோர்கள் உடனடியாக தொழில் துவங்க, 12 ஏக்கர் பரப்பளவில் 4 அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி ஆயத்தத் தொழில் வளாகம் (Plug and Play) 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி தொழிற்பேட்டையில்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் கட்டப்படும். இதன்மூலம் 1,000 நபர்களுக்கு நேரடியாகவும் 500 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

105. மதுரையில் 26,500 சதுர அடி பரப்பளவில் தொழில் **புத்தாக்க மையம் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.** தொழில்துறையில் புத்தாக்கத்தை ஊக்குவிக்கவும், தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்க நிறுவனங்களை மேம்படுத்தவும் இம்மையம் உதவிடும். இம்மையத்தில், புத்தொழில் தொடங்குபவர்கள் (Startups) கூட்டாகப் பணிபுரியும் வசதி மற்றும் தொழில் 4.0 உபகரணங்கள், தயாரிப்புகள் மேம்பாட்டு மையம், முன்மாதிரி தயாரிப்பு வசதி (prototyping) மற்றும் பயிற்சி நிலையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

106. மேலும், மதுரை மாவட்டத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்கு உதவும் வகையில், **தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் சக்கிமங்கலம் தொழிற்பேட்டையில் 5 ஏக்கர் நிலப்பரப்பில், 118 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று அடுக்குகள் கொண்ட அடுக்குமாடித் தொழில் வளாகம் கட்டப்படும். இதன் மூலம், 4,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.**

107. குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ். விருதுநகர் மாவட்டம் வெள்ளயாபுரத்தில் ஆயத்தஆடை உற்பத்திக்கும், செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கத்தில் சித்த மருத்துவ மூலிகைப் பொருட்கள் தயாரிப்பிற்கும், கன்னியாகுமரி மாவட்டம் அழகியபாண்டியபுரத்தில் ஆயத்தஆடை உற்பத்திக்கும், சேலம் மாவட்டம் இராக்கிப்பட்டியில் பட்டுநூல் உற்பத்திக்கும், நாமக்கல் மாவட்டம் கத்தேரியில் துணிநூல் வார்ப்பிற்கும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் இராங்கியத்தில் ஆயத்தஆடை உற்பத்திக்கும் 6 குறுங்குழுமத் திட்டங்கள் தமிழ்நாடு அரசு மானியத்துடன் 25 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் பொது வசதி மையங்களுடன் அமைக்கப்படும்.

108. நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, 16 கூட்டுறவுத் தேயிலை உற்பத்தி தொழிற்சாலை உறுப்பினர்களால் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட பசுந்தேயிலைக்கு ஊக்கத்தொகையாக கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் வழங்கப்படும். சுமார் 27 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில் இதற்காக ஒன்பது கோடி ரூபாய் செலவிடப்படும். இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு 1,557 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தகவல் தொழில்நுட்பம்

109. அரசு நிர்வாக நடைமுறைகளை எளிமையாக்கி, வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வரும் நோக்கோடு அரசு அலுவலகங்களை முழுமையாக கணினிமயமாக்கும் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி, சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகிறது. வரும் 2024-25 ஆம் நிதியாண்டில் பல்வேறு துறைத் தலைமை அலுவலகங்களுக்கும் சார்பு அலுவலகங்களுக்கும் தேவையான மென்பொருட்கள் மற்றும் **கணினிகள்** உள்ளிட்டவற்றை வழங்கவும், அலுவலர்களுக்கு உரிய திறன்பயிற்சி அளித்து மின் அலுவலகத் திட்டத்தை (eOffice) விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 30 கோடி ரூபாய் 2024-25 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.

110. அரசுசார் இணையவழிச் சேவைகளை மேலும் துரிதமாக அளித்திடும் வகையில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மூலம் பேரிடர் தரவு மீட்பு வசதிகளுடன் கூடிய மேகக் கணினியக் கட்டமைப்பு கொண்டதாக மாநிலத் தரவு மையம் அடுத்த 5 ஆண்டுகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

## உலக புத்தொழில் மாநாடு!




111. இணைய உலகத்தின் தகவல் பரிமாற்றத்தை மேலும் பரவலாக்கும் வகையில், சென்னை போன்றே கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் ஆயிரம் முக்கிய இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கப்படும்.

112. கடந்த 2000 ஆம் ஆண்டில் சென்னையில் டைடல்நிறுவனத்தை அமைத்து தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திட்டவர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் வகுத்துத் தந்திட்ட தகவல் நெடுஞ்சாலையில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் இணைந்திட வேண்டும் என்ற நோக்கில், **மதுரையில் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 இலட்சத்து 40 ஆயிரம் சதுரஅடி பரப்பளவிலும், திருச்சியில் 345 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 இலட்சத்து 30 ஆயிரம் சதுரஅடி பரப்பளவிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் (Neo Tidel Parks) அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 13,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.**

113. உலக அளவில் அண்மைக்காலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள புதிய தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) குறித்தும், அது தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு தரப்பிலும் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்தும் இந்த அரசு கவனமுடன் ஆய்வு செய்து வருகிறது. கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்துறை, ஆராய்ச்சி மற்றும் மருத்துவத் துறைகளில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதன் வாய்ப்புகள் குறித்த ஆக்கபூர்வமான வழிகாட்டுதல்களையும், இப்புதிய தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை வழிநடத்திடத் தேவைப்படும் வரையறைகளைத் தெளிவாக வகுத்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் **“தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு இயக்கம்” (Tamil Nadu Artificial Intelligence Mission) ஒன்று ஏற்படுத்தப்படும்.** தமிழ்நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களின் பேராசிரியர்கள், மின்னணு கல்வி தொழில் நிர்வாகிகள் மற்றும் துறை வல்லுநர்கள் இந்த அமைப்பில் இடம் பெற்றிருப்பர்.

114. நாட்டிலேயே வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான கோயம்புத்தூரில், தகவல் தொழில்நுட்பம், வாழ்வியல் அறிவியல், விண்வெளி, பொறியியல் துறைக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு போன்ற உயர்தொழில்நுட்ப அலுவலகங்களுக்கானதேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, 20 இலட்சம் சதுரஅடியில், இரண்டு கட்டங்களாக 1,100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன் தகவல் தொழில்நுட்பப் பூங்கா கோவை விளாங்குறிச்சியில் அமைக்கப்படும்.

### நீர்வளம்

115. நீரின்றி அமையாது உலகு என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு மாநிலத்தின் நீர் வளங்களை உரிய முறையில் பராமரித்து, பாதுகாப்பதற்கென பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

116. அண்மையில் மிக்ஜாம் புயலால் சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தென் மாவட்டங்களில் வரலாறுகாணாத மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பினை சீரமைப்பதற்கு 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

117. பருவகால மழைநீரை முறையாக சேமிக்கவும், பாசனத்திற்கு உரிய நீரை உறுதி செய்யவும், வரும் நிதியாண்டில் தரைகீழ் தடுப்பணை, கால்வாய் சீரமைப்பு, புதிய அணைக்கட்டு போன்ற நீர் செறிவூட்டும் கட்டுமானங்களும் நீர்ப்பாசனப் பராமரிப்புப் பணிகளும் 734 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அணைகள் மற்றும் கதவணைகளில் பகுதடைந்துள்ள கதவுகளை மாற்றி, புதிய கதவுகள் அமைத்திடவும், பழுது பார்த்துப் பராமரிக்கவும் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்

118. தமிழ்நாட்டில் காவிரி வடிநிலத்தில், நீர் மேலாண்மையினை திறம்படச் செய்யும்பொருட்டு, கல்லணைக் கால்வாயினை “நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல்” திட்டத்தின் முதற்கட்டமாக 1,037 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவு பெறும் தருவாயில் உள்ளன. **தற்போது இரண்டாம் கட்டமாக வரும் நிதியாண்டில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 23 இலட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.**

119. மாநிலத்தில் மேலாண்மையை திறம்பட உள்ள நீர்வளங்களின மேற்கொள்வதற்கு, தமிழ்நாடுநீர்வளத் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பை 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த இணைய தகவல் தளம் விரைவில் தொடங்கப்படும். இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீர்வளத் துறைக்கு 8,398 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பசுமை ஆற்றல்

120. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி வரும் 2030ம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டினை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றிடுவதற்கு தற்போதைய மின் தேவையைக் காட்டிலும் இரண்டு மடங்கு கூடுதலாக மின்சாரம் தேவைப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உயர் இலக்கினை அடைவதற்கு, வரும் காலங்களில் பசுமை ஆற்றல் முக்கியப் பங்காற்றிடும். வரும் 2030ம் ஆண்டிற்குள், 100 பில்லியன் யூனிட் கூடுதல் புதுப்பிக்கத்தக்க பசுமை ஆற்றலை உருவாக்கி தமிழ்நாட்டில் நாட்டிலேயே தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்படும். அந்த இலக்கை நோக்கிய பசுமைப் பயணத்தில், முதற்கட்டமாக புதிய பசுமை ஆற்றல் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சூரிய மின்சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தியோடு, பசுமை ஹைட்ரஜன், நீரேற்று புனல் மின் உற்பத்தி மற்றும் பிற புதிய பசுமை ஆற்றல் முயற்சிகள் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் இந்நிறுவனம் செயல்படுத்தும்.

121. அண்மையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 18,429 மெகாவாட் பசுமை ஆற்றல் ஆதாரங்களை தமிழ்நாட்டில் அமைப்பதற்கான, 32 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதில் 2,570 மெகாவாட் பசுமை ஆற்றல் மின் உற்பத்தி செய்வதற்கான அனுமதி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

122. மேலும், தமிழ்நாட்டில் 11,500 மெகாவாட் திறனுள்ள நீரேற்று புனல் மின் நிலையங்கள் அமைப்பதற்கு உகந்த 12இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்புடன், சுமார் 60,000 கோடி ரூபாய் முதலீட்டில் இந்தப் புதிய நீரேற்று புனல் மின் நிலையங்கள் உருவாக்கப்படும்.

### காலநிலை மாற்றம்

123.

**“சிறகிலிருந்து பிரிந்த**
**இறகு ஒன்று**
**காற்றின் தீராத பக்கங்களில்**
**ஒரு பறவையின் வாழ்வை**
**எழுதிச் செல்கிறது”**

படிமக் கவிஞர் பிரமிளின் கவிதை வரிகளை சுற்றுச்சூழல் அமைப்பில் பொருத்திப் பார்த்தால் இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் அனைத்து உயிரினங்களையும் இயற்கை வளங்களையும் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொடையளிப்பது மானுடக் கடமை என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. நாட்டிலேயே பல்லுயிர் இனங்களின் தாயகமாக தமிழ்நாடு திகழ்கிறது. இருப்பினும், மாறி வரும் காலச்சூழலில் உலகெங்கும் உள்ள சில அரிய வகை உயிரினங்கள் அழிந்து வரும் நிலை காணப்படுவதால், அவ்வகை உயிரினங்களைப் பாதுகாத்திட வேண்டிய தேவைக் குறித்து பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு (International Union for Conservation of Nature) உட்பட பல அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. எனவே, பல்லுயிர் நலன் காக்கும் முயற்சியாக, அழிந்து வரும் உயிரினங்கள் பாதுகாப்பு நிதி ஒன்றை 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க, தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென முதற்கட்டமாக ஐந்து கோடி ரூபாயை அரசு வழங்கும். பிற அரசு நிறுவனங்கள், பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதி, தேசிய சுற்றுச்சூழல் அமைப்புகளின் உதவியோடு, அழிந்துவரும் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள உயிரினங்களைப் பாதுகாக்க உரிய திட்டங்கள் வகுக்கப்படும்.

124. காலநிலை மாற்ற இயக்கம், பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம் ஆகிய முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியும், 15 புதிய ராம்சார் ஈர நிலங்கள் மற்றும் 5 சரணாலயங்களைக் கொண்டு பசுமைப் பயணத்தில் நாட்டிற்கே வழிகாட்டியாக தமிழ்நாடு திகழ்கிறது. இதன் தொடர்ச்சியாக, **தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில் 1,076 கிலோமீட்டர் கடற்கரைப் பகுதியை மையமாகக் கொண்டு கடலோர வளங்களை மீட்டு எடுப்பதற்காக 1675 கோடி ரூபாய் மதிப்பீட்டில் “நெய்தல் மீட்சி இயக்கம்” என்ற திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.** கடற்கரையோர பல்லுயிர்ப் பெருக்கம், கடற்கரை பாதுகாப்பு, கடற்கரையோரச் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுக் கட்டுப்பாடு உள்ளிட்ட 4 முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது இத்திட்டம்.




125. இத்திட்டத்தின் மூலம், நீலப் பொருளாதாரத்தின் திறனை பயன்படுத்திக்கொள்வதுடன் சதுப்பு நிலங்கள், பவளப்பாறைகள் மற்றும் உப்பு சதுப்பு நிலங்களை மீட்டெடுக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும். அலையாத்திக் காடுகளைப் (Mangroves) பாதுகாப்பது, மன்னார் வளைகுடாவிலுள்ள கரியாச்சல்லி தீவுப்பகுதிகளில் பவளப் பாறைகளை புனரமைக்கும் திட்டம் ஆகிய பணிகளும் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூர் பகுதியில் 137 ஹெக்டேர் பரப்பளவில், லண்டன் கியூ கார்டன் (London Kew Gardens) நிறுவனத்தின் துணையோடு, 345 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாபெரும் பல்லுயிர் பாதுகாப்புப் பூங்கா ஒன்று அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், நாகப்பட்டினம் மற்றும் சென்னை ஆகிய பகுதிகளில், கடல் ஆமை பாதுகாப்பு மையங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் மனோரா பகுதியில் சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம் ஒன்றும் அமைக்கப்படும். எண்ணூர் கடற்கழிப் பகுதியினை (Ennore Creek) 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாத்து மீட்டெடுப்பதற்கான பணிகள் செயல்படுத்தப்படும்.

126. தமிழ்நாட்டிலுள்ள கடற்கரைகளை உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. முதற்கட்டமாக, செங்கல்பட்டில் உள்ள கோவளம் கடற்கரைக்கு நீலக் கொடி சான்றிதழ் பெறப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, **சென்னையில் மெரினா கடற்கரை, இராமநாதபுரத்தில் அரியமான், தூத்துக்குடியில் காயல்பட்டினம், திருநெல்வேலியில் கோடாவிளை, நாகப்பட்டினத்தில் காமேஸ்வரம், புதுக்கோட்டையில் கட்டுமாவடி, கடலூரில் சில்வர் கடற்கரை, விழுப்புரத்தில் மரக்காணம் ஆகிய இடங்களிலுள்ள முக்கியக் கடற்கரைப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, நீலக் கொடி கடற்கரைகள் சான்றுகளை பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.** நெகிழிக் கழிவு மேலாண்மை வசதிகளை அமைப்பதில், கடற்கரையோரச் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களை ஈடுபடுத்தவும், கைவிடப்பட்ட மற்றும் பயனற்ற மீன்பிடிக் கருவிகளை அகற்றவும், நெகிழிக் கழிவுகளுக்கான சுழற்சிப் பொருளாதாரத் தீர்வுகளைச் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### போக்குவரத்து

127. தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமங்களுக்கும் தரமான போக்குவரத்து சேவைகளைத் தொடர்ந்து வழங்கிட, புதிய பேருந்துகளை வாங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்நிதியாண்டில் 3,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும். இதுமட்டுமன்றி ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) நிதியுதவியுடன் 500 மின் பேருந்துகள் கொள்முதல் செய்து இந்நிதியாண்டில் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கடந்த 1997 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்திய சிற்றுந்து (Mini bus) திட்டம் தமிழ்நாடெங்கும் பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது, வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நகரங்களை ஒட்டிய ஊரகப் பகுதிகளிலும் போக்குவரத்துச் சேவையை வழங்கிடும் நோக்கில் மாற்றியமைக்கப்பட்ட விதிமுறைகளுடன் சிற்றுந்து திட்டம் தமிழ்நாட்டில் விரிவுபடுத்தப்படும்.

128. இந்த வரவுசெலவுத் திட்டத்தில் மகளிருக்கான இலவசப் பேருந்துக் கட்டண மானியத்திற்காக 3,050 கோடி ரூபாய், மாணவர்களுக்கான பேருந்துக் கட்டண மானியத்திற்காக 1,521 கோடி ரூபாய் மற்றும் டீசல் மானியத்திற்காக 1,800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சென்னை மெட்ரோ இரயில்

129.தினந்தோறும் சுமார் மூன்று இலட்சம் பயணிகள் விரும்பிப் பயணிக்கும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் 63,246 கோடி ரூபாய் செலவில் 119 கிலோமீட்டர் தூரத்திற்கு மூன்று வழித்தடங்களில் துரிதமாக நடைபெற்று வருகின்றன. முதற்கட்டமாக பூந்தமல்லி முதல் கோடம்பாக்கம் வரையிலான உயர் வழித்தடம் வரும் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இந்த வரவுசெலவுத் திட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக 12,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

130. கோவை மாநகரில் அவிநாசி சாலை மற்றும் சத்தியமங்கலம் சாலை வழித்தடங்களில் மெட்ரோ இரயில் திட்டத்திற்கென 10,740 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாநகரில் திருமங்கலம் மற்றும் ஒத்தக்கடை பகுதிகளை இணைத்திடும் வகையில் 11,368 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகளை ஒன்றிய அரசின் மூலதனப் பங்களிப்பு பெறுவதற்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் அனுமதி கிடைத்தவுடன் இந்த இரு நகரங்களிலும் மெட்ரோ இரயில் அமைப்பதற்கான பணிகள் தொடங்கும்.

131. சென்னை மெட்ரோ இரயில் வழித்தடத்தை சென்னை விமான நிலையத்தில் இருந்து கிளாம்பாக்கத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை 4,625 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெறப்பட்டு, ஒன்றிய அரசின் மூலதனப் பங்களிப்பிற்காக ஒப்புதல் கோரப்பட உள்ளது. மேலும், கோயம்பேடு முதல் ஆவடி வரையிலும், பூந்தமல்லி முதல் பரந்தூர்வரையிலுமான இரண்டாம் கட்டத்தின் நீட்டிப்பு வழித்தடங்களுக்குவிரிவானதிட்டஅறிக்கைகள் தயாரிக்கப்படும்.

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

# ரூ. 60 ஆயிரம் கோடியில் புதிய மின் திட்டங்கள்!

நிதி நிலை அறிக்கை... 7ஆம் பக்கத் தொடர்ச்சி

132. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து உருவாக்கப்படவுள்ள புதிய சிறப்பு அமைப்பு மூலம், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு எதிரே மரபுசார் வடிவமைப்புடன் சுமார் 10 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் 27 தளங்களைக் கொண்ட முத்திரை பதிக்கும் ஓர் கட்டடம் 688 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். பொதுத்துறை, வணிக மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் அலுவலகத் தேவையினை இப்புதிய கட்டடம் நிறைவு செய்யும்.

133. தற்போதுள்ள பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் அருகில் உள்ள குறளகம் கட்டடம் அமைந்துள்ள பகுதியில், ஒருங்கிணைந்த பன்முகப் போக்குவரத்து வசதிகள் கொண்ட பேருந்து நிலையம் மற்றும் உயர்தர நவீன வசதிகள் கொண்ட அலுவலக வளாகம் ஒன்று 823 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இதில் அமையவுள்ள நவீன வசதியுடன் கூடிய பேருந்து நிலையம் அமைத்திடத் தேவையான 200 கோடி ரூபாய் நிதியை அரசு வழங்கிடும்.

134. அண்ணாநகர் (மேற்கு), கலைஞர்




கருணாநிதி நகர் மற்றும் மந்தைவெளியில் அமைந்துள்ள பேருந்து நிலையங்கள் மற்றும் பணிமனைகளைத் தரம் உயர்த்தி நவீன வசதிகளுடன் கூடிய அலுவலகங்களும் வணிக வளாகங்களும் உருவாக்க விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்!

135. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்த தொழில் முனைவோர்களின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ளது.** இத்திட்டத்தின் மூலம் 755 நபர்கள் 84 கோடி ரூபாய் மானியத்துடன் கூடிய 156 கோடி ரூபாய் வசதி பெற்றுப் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்குக் கடன் கிடைத்த வரவேற்பினைக் கருதி, திருத்த மதிப்பீடுகளில் கூடுதலாக 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், அண்மையில் அறிமுகப்படுத்தப் பட்ட CM Arise என்ற புதிய திட்டத்தின் கீழ், தொழில் தொடங்குவதற்கு 35 சதவீத வட்டி மானியத்துடன் பத்து இலட்சம் ரூபாய் வரை கடன் பெறலாம். இத்திட்டத்தை தொழில்முனைவோர் நடைமுறைப் படுத்த வரும் ஆண்டில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

136. நகர்ப்புரப் பகுதிகளிலும், ஊரகப் பகுதிகளிலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் முழுமையான சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 230 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் பயன்பெறும் வகையில் திருமணக் கூடம், உள்விளையாட்டுக் கூடம், கற்றல் மற்றும் பயிற்சி மையம் போன்ற வசதிகள் கொண்ட 120 சமூகக் கூடங்கள் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

137. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கையை உயர்த்திடவும், அவர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய தங்குமிட வசதிகளை வழங்கிடவும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி மற்றும் சென்னையில், ஐந்து நவீன மாணவர் விடுதிகள் கட்டும் பணிகள் 150 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, சென்னை, தஞ்சாவூர், தருமபுரி, நாமக்கல் மாவட்டங்களில் கல்லூரி மாணவியர் விடுதிகளும், மதுரையில் கல்லூரி மாணவர் விடுதியும், மொத்தம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு கட்டப்படும். இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பன்முகத் திறனை வளர்க்கும் விதமாக அவர்களுக்கென ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

138. **பழங்குடியினர் வாழ்விடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், 'தொல்குடி' என்ற புதிய திட்டம் அடுத்த நான்கு ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்தின்கீழ், பழங்குடியினர் குடியிருப்புகளில் சாலை வசதி, குடிநீர், தெரு விளக்குகள், பாதுகாப்பான வீடுகளும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப் படும். இந்த ஆண்டு, ஆயிரம் பழங்குடியின இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குத் தங்குமிட வசதிகள் கொண்ட நவீன தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து உரிய வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்கென தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் புதிய திட்டம் செயல் படுத்தப்படும்.

139. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கிவரும் அனைத்துப் பள்ளிகளிலும், 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classrooms) ஏற் படுத்தப்படும். மேலும், அனைத்துப் பள்ளிகளுக்கும் அதிவேக இணைய வசதிகள் ஏற்படுத்தப்படும். இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 3,706 கோடி ரூபாய் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

### பிற்படுத்தப்பட்டோர் நலன்!

140. சமூகநீதியை நிலைநாட்டுவதில் பெரும் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, நமது நாட்டிற்கே முன்னோடியாக பல்வேறு திட்டங்களை தேசிய மக்கள் தொகை செயல்படுத்தி வருகிறது. வரும் கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பினையும் இணைத்து நடத்திட வேண்டும் என்று ஒன்றிய அரசை இவ்வரசு வலியுறுத்திவருகிறது.

141. தமிழ்நாட்டில் 1,353 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ் விடுதிகளில் தங்கிப் பயின்றுவரும் மாணவர்களுக்கு கட்டணமில்லா உணவு மற்றும் தங்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அண்மையில், விடுதி களில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு மாதாந்திர உணவு மானியம் 1,400 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு 1,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் 52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 12 விடுதிகளில் கட்டுமானப் பணிகள் வருகின்றன. மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 17 பள்ளி விடுதிகள், கல்லூரி விடுதிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், பள்ளிப் படிப்பு உதவித்தொகை வழங்குவதற்காக 124 கோடி ரூபாயும், பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக 237 கோடி ரூபாயும்

## ரூ. 1000 கோடியில் புதிய வகுப்பறைகள்!

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இம்மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்கு 193 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சிறுபான்மையினர் நலன்!

142. சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, அவற்றுக்குரிய நிரந்தரமாக வழங்குவதற்கான சான்றிதழ்களை ஆணைகள்வெளியிடப்பட்டுள்ளன. இந்த முடிவு, சிறுபான்மையினரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. வழிபாட்டுத் தலங்களுக்கு முறையான அனுமதி பெறுவதிலும், வழிபாட்டுத் தலங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதிலும் உள்ள இடர்பாடுகளைக் களைந்திட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

143. பள்ளிவாசல்களையும், தர்காக்களையும் பழுதுபார்ப்பதற்கும் சீரமைப்பதற்கும் இந்த ஆண்டு பத்து கோடி ரூபாய் மானியம் வழங்கப் படும். கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை, வேலூர், தென்காசி மாவட்டத்தில் பொட்டல்புதூர் உள்ளிட்ட இடங்களிலுள்ள தர்காக்கள் இந்த ஆண்டு சீரமைக்கப்படும். தேவாலயங்களைப் சீரமைப்பதற்கும் இந்த ஆண்டு பழுதுபார்ப்பதற்கும், பத்து கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். சென்னையில் சூளை, கடலூர் மாவட்டத்தில் விருத்தாச்சலம், சிவகங்கை மாவட்டத்தில் இடைக்காட்டூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள தேவாலயங்களைப் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும். இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு 1,429 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மாற்றுத்திறனாளிகள் நலன் !

144. மாற்றுத்திறனாளிகள் என்ற பெயரைச் சூட்டியது மட்டுமல்லாமல், அவர்களது நலனுக்காக பல்வேறு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை நாடறியும். அந்த வழியில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்துவருகிறது. உலக வங்கி நிதியுதவியுடன் 1,763 கோடி ரூபாய் மதிப்பில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைத் திட்டம் (RIGHTS Project) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் பகுதிகளிலேயே அவர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதோடு, அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தோடு, முதற்கட்டமாக, 15 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் வாயிலாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் சிகிச்சை களும் வழங்கப்படும். இல்லம் சார்ந்த சிகிச்சை களும் வழங்கப்படும்.

145. புற உலகச் சிந்தனையற்ற மதி இறுக்கம் (Autism Spectrum Disorder) உடையோருக்குத் தொடுதிறன் சிகிச்சை, செயல்முறைப் பயிற்சி, இயன்முறைப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, சிறப்புக் கல்வி, தொழிற் பயிற்சி ஆகிய ஒருங்கிணைந்த மறுவாழ்வுச் சேவைகள் மட்டுமன்றி பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான ஆற்றுப்படுத்தல் சேவை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ஆகிய அனைத்து சேவைகளையும் ஓரிடத்திலேயே பெற்றிடும் வகையில், புற உலகச் சிந்தனையற்ற மதி இறுக்கம் உடையோருக்கான உயர்திறன் மையம் (Centre of Excellence for Persons with Autism Spectrum Disorders) ஒன்று 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் அமைக்கப்படும்.

### இந்து சமய அறநிலையத் துறை !

146. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் கடந்த மூன்று ஆண்டுகளில் நிறைவுபெற்று 1,290 திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. திருக்கோவில்களில் குடமுழுக்குகள் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் பழனி, திருவண்ணாமலை, திருவரங்கம், சமயபுரம் உள்ளிட்ட 11 திருக்கோவில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. திருக்கோவில் சொத்துகளையும் உடமைகளையும் பாதுகாப்பதற்கு இந்த அரசு எடுத்த முயற்சிகளின் விளைவாக, 6,071 ஏக்கர் நிலமும் 25.34 இலட்சம் சதுர அடி மனைகளும் 5.04 இலட்சம் சதுர அடி கட்டடங்களும் திருக்கோவில்கள் வசமாக்கப்பட்டுள்ளன. இவற்றின் 5,718 கோடி ரூபாய் ஆகும்.

147. மேலும், 143 மொத்த திருக்கோவில்களில் மதிப்பு உள்ள திருக்குளங்களைச் சீரமைக்க 84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்துசமய அறநிலையத் துறையின் பதிப்பகத் துறை மூலமாக 200 க்கும் மேற்பட்ட அரிய நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. செங்கல்பட்டு மாவட்டம் திருநீர்மலை மற்றும் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள திருக்கோவில்களுக்கு மதிப்பீட்டில் கம்பிவட ஊர்தி வசதி 26 கோடி ரூபாய் உருவாக்கப்படும். மேலும், ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவில்களில் திருப்பணிகள் செய்திட இந்த ஆண்டு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

### சுற்றுலா!

148. தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலட்சிய இலக்கை எய்திடுவதில், சுற்றுலா மேம்பாடு ஒரு பெரும்பங்கை ஆற்றிடும் என இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்த நோக்கத்துடன், கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர், திண்டுக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒருங்கிணைந்த சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல், புதிய சுற்றுலாத் தலங்களை உருவாக்குதல், கட்டமைப்பின் பராமரிப்பு, இளைஞர்களுக்குத் திறன் மேம்பாடு வாயிலாக வேலைவாய்ப்பு அதிகரித்தல் போன்ற பல்வேறு அம்சங்கள் இத்திட்டத்தில் அடங்கும். அரசு தனியார் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையை மேம்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், வளர்ச்சிக் குழுமங்கள் உருவாக்கப்படும். மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத்தலங்களை சுற்றுலா ஒவ்வொரு மேம்படுத்துவது குறித்து அனைத்து தரப்பினருடனும் கலந்து ஆலோசித்து, உரிய திட்டங்களைத் தீட்ட இந்த வளர்ச்சிக் குழுமங்கள் உதவும்.

### கால்நடை பராமரிப்பு

149. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் உரிய இனப்பெருக்கத் தடை சிகிச்சைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இயலாமல் போனதால், மாநிலத்தில் பல இடங்களில் தெரு நாய்களின் எண்ணிக்கை உயர்ந்து, அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. எனவே, விலங்குகள் இனப்பெருக்கத் தடை திட்டத்தை மேலும் முறையாகச் செயல்படுத்திடவும், தமிழ்நாட்டின் பல இடங்களில் இயங்கிவரும் இனப்பெருக்கத் தடை மையங்களை மேம்படுத்திடவும் 2024-25 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். மேலும், தமிழ்நாடு விலங்குகள் நல் வாரியத்திற்கு வரும் நிதியாண்டில் 11 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

### மீன்வளம் மற்றும் மீனவர்நலன்!

150. மீன்பிடித் தொழிலில், இந்தியாவில் ஐந்தாவது பெரிய மாநிலமாக தமிழ்நாட்டைத் திகழவைக்கும் நமது மீனவர்கள் மீது இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் முதல்வர் அவர்கள் தலைமையில் இராமநாதபுரத்தில்நடைபெற்ற மீனவர் மாநாட்டில் 2 இலட்சத்து 77 ஆயிரம் மீனவர்கள் பயன்பெறும் வகையில், சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களும், புதிய பணிகளும் அறிவிக்கப்பட்டன. மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் மாவட்டங்களைச் குமரி நாட்டுப்படகு சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்களுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவானது மாதம் ஒன்றிற்கு 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மானிய விலையில் வழங்கப்படும் டீசல் எண்ணெயின் அளவு, விசைப்படகுகளுக்கு 18 ஆயிரம் லிட்டரிலிருந்து 19 ஆயிரம் லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு 4 ஆயிரம் லிட்டரிலிருந்து 4 ஆயிரத்து 400 லிட்டராகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

151. **வரும் நிதியாண்டில், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவள்ளூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தூண்டில் வளைவு, மீன் இறங்கு தளம், தூர் வாருதல், செயற்கை மீன் கரையோரப் பாதுகாப்பு மற்றும் உறைவிடங்கள் போன்ற கட்டுமானப் பணிகள் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

### பால்வளம்!

152. ஆவின் நிறுவனத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தி, பொதுமக்களுக்கு தரமான பால் தினந்தோறும் வழங்கிட அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது. அண்மையில், பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதனால், 3.87 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து வருகின்றனர். திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் உள்ளிட்ட ஆவின் தொழிற்சாலைகளில் அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய தானியங்கி இயந்திரங்களைப் பொருத்திட 60 கோடி ரூபாய் மதிப்பில் நவீனமயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். பால் தரத்தை உறுதி செய்திட 21 கோடி ரூபாய் மதிப்பில் நவீன கருவிகள் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கும் வழங்கப்படும்.

### கைத்தறி மற்றும் துணிநூல்

153. நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஜவுளிப் பொருட்களின் தரத்தை உயர்த்திடவும், தேவையான சந்தை வாய்ப்புகளை உருவாக்கிடவும் 20 கோடி ரூபாய் செலவில், கரூர், ஈரோடு, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் 10 சிறிய ஜவுளிப் பூங்காக்கள் அரசால் நிறுவப்படும். மருத்துவம், மற்றும் பாதுகாப்பு போன்ற முக்கிய ஆட்டோமொபைல் துறைகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப ஜவுளிகளின் உற்பத்தியை தமிழ்நாட்டில் மேம்படுத்துவதற்கும், உயர்த்துவதற்கும் இத்துறையில் ஏற்றுமதியின் வளர்ச்சியைத் தக்கவைக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் தொழில்நுட்ப ஜவுளித் தொழிற்கொள்கை (Technical Textiles Policy) ஒன்று புதிய பொருட்களை அண்மையில் உருவாக்கவும், வெளியிடப்பட்டுள்ளது. ஆராயவும் தனியார் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் விதமாக, **25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'தொழில்நுட்ப ஜவுளி மற்றும் செயற்கை இழை துறைக்கென ஒரு சிறப்பு ஆராய்ச்சி மற்றும் தொழில் மேம்பாட்டு நிதியை இவ்வரசு அமைக்கும்.**




மேலும், மேற்கொள்ளப்படும் தொழில்நுட்ப முதலீடுகளில் வழங்கப்படும் மானியத்தை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தி, 10 ஆண்டு காலத்தில் வழங்கப்படும். இச்சலுகை நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்.

154. நூற்புத் துறையில் பிற மாநிலங்களை விட தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட, நவீன தொழில்நுட்பத்தில் அதிகளவிலான முதலீடு மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இந்த நோக்கத்துடன், **அடுத்த 10 ஆண்டுகளில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நூற்புத் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டம் ஒன்று இந்த அரசால் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், 6 சதவீத வட்டி மானியம் வழங்கப்படும்.**

155. சென்னையில் நான்கு இலட்சம் சதுர அடி பரப்பளவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் **கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்தும் கண்காட்சி அரங்கம், கைவினைப் பொருட்களுக்கான வடிவமைப்பு மற்றும் புத்தாக்க மையம், திறந்தவெளி விற்பனை அரங்கம், வணிக வளாகங்கள் உள்ளிட்ட புதிய ஒன்றிணைந்தவளாகம் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

156. ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய கைவினைஞர் நலத் திட்டம் இந்த அரசு கடைபிடித்து வரும் சமூக நீதிக் கோட்பாடுகளுக்கு எதிரான கூறுகளைக் கொண்டதாக இருப்பதை அதனினும் மேம்பட்ட உணர்ந்து, அதற்கு மாற்றாக, கைவினைஞர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை வடிவமைத்து செயல்படுத்திட இந்த அரசு கருதுகிறது. இத்திட்டத்தின் கீழ், தையற்கலைஞர், மண்பாண்டம் வனைவோர், சிற்பக் கைவினைஞர் உள்ளிட்ட பல்வகைக் கலை மற்றும் கைவினைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்க்கு தொழில் திறன் சார் மேம்பட்ட பயிற்சியுடன் அவர்கள் தொழிலை நவீனப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்படும். 35 வயதிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தங்கள் தொழிலை நவீன முறையில் விரிவுபடுத்தவும், கைவினைத் தொழிலில் ஈடுபட விரும்பும் புதிய விண்ணப்பதாரர்களுக்கு உரிய திறன் பயிற்சிகள் வழங்கியும் 25 சதவீதம் மானியத்துடன் கூடிய கடனுதவி வங்கிகள் மூலம் அவர்களின் சந்தைப் படுத்தும் திறனை வழங்கப்படும். உயர்த்துவதற்கானஉரிய வழிகாட்டுதல்களும் வழங்கப்படும். ஆலோசனைகளும் இத்திட்டத்தின் கீழ், **ஆண்டு தோறும் 10,000 பேர் பயன்பெறும் வகையில்வரும் நிதியாண்டில் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

### வீட்டுவசதி!

157. ஒற்றைச் சாளர முறையில் கட்டட அனுமதி வழங்குவதை எளிமைப்படுத்தி, இணையதளம் வாயிலாக அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்குள் கட்டப்படும் குடியிருப்புக் கட்டுமானத்திற்கு (தரைத்தளம் அல்லது தரைத் தளம் மற்றும் முதல் தளம்) உடனடியாகப் பதிவு செய்து **சுய சான்றிதழ் மூலமாக பொதுமக்கள் கட்டட அனுமதி பெறுவதற்கு புதிய வசதி அறிமுகப்படுத்தப்படும். மேலும் அவ்வாறு உடனடி பதிவு செய்யப்படும் கட்டடங்களுக்கு கட்டட அனுமதி மற்றும் பணி முடிவுச் சான்று பெறத் தேவையில்லை.**

### பொதுப்பணிகள்!

158. மதுரை மாநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், சென்னை கிண்டியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, மதுரை அலங்காநல்லூர் அருகில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஆகியவற்றை மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே அழகிய முறையில் வடிவமைத்துபணிநிறைவு செய்து அனைவரது பாராட்டுகளையும் பெற்றது நமது பொதுப்பணித் துறை.

159. சென்னையை உலகத்தரம் வாய்ந்த மாநகரமாக மாற்றியமைத்திட, சர்வதேச கண்காட்சிகள், பன்னாட்டுக் கூட்டங்கள் நடத்திடும் வகையில், உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு அரங்கம் (Kalaignar Convention Centre) நவீன வசதிகளுடன் கிழக்குக் கடற்கரைச் சாலையில் முட்டுக்காடு பகுதியில் சுமார் மூன்று இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. 5000 இருக்கைகள் கொண்ட மாநாட்டுக் கூடம், 10,000 நபர்கள் பார்வையிடும் வசதிகொண்ட கண்காட்சி அரங்கம், கூட்ட அரங்குகள், கலை அரங்கம் ஆகிய வசதிகளுடன் அமையவுள்ள இந்தப் பன்னாட்டு அரங்கம் சிங்காரச் சென்னையின் நவீன அடையாளங்களுள் ஒன்றாகத் திகழும்.

160. தலைநகர் புதுதில்லியில் வைகை - தமிழ்நாடு இல்லம், 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சம் சதுர அடி பரப்பளவில் விருந்தினர்கள், அலுவலர்கள் மற்றும் போட்டித்தேர்வு மாணவர்கள் தங்குவதற்கு உரிய வசதிகளுடன் திராவிடக் கட்டடக்கலை மரபில் வடிவமைக்கப்பட்டு புதிதாகக் கட்டப்படும்.

161. அண்மையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் அமைந்துள்ள வளாகத்தில், தமிழர்களின் தொன்மையான வரலாறு, பண்பாடு மற்றும் கலைகளை ஒரே இடத்தில் அரங்கேற்றம் செய்யும் வகையில், நாட்டுப்புறக் கலைகள், சிற்பங்கள், கைவினை மற்றும் கைத்தறிப் பொருட்கள், தமிழ்நாட்டின் மரபுசார் தாவரங்களை உள்ளடக்கிய பசுமைப் பரப்புகள் ஆகியவை காட்சிப்படுத்தப் படும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், இந்த வளாகம் தமிழ்ப் பண்பாட்டின் முகவரியாகத் திகழும் வண்ணம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

162. புராதனக்கட்டடங்களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணிகளுக்கென இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாட்டில் உள்ள முத்தம்மாள் சத்திரம், திருவையாறில் உள்ள நூறாண்டு பழமையான திருமண மண்டபம், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள இயக்குநரக அலுவலகம் மற்றும் ஈரோடு கொடுமுடியில் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் பழமையான பயணியர் விடுதி, சென்னை கிண்டி பொறியியல் கல்லூரி புராதனக் கட்டடக் குவிமாடம் ஆகியவை பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.

தொடர்ச்சி 9ஆம் பக்கம்

# வடசென்னை மேம்பாட்டுக்கு ரூ.946 கோடி நிதி!

## நிதிநிலை அறிக்கை!... 8ஆம் பக்கத் தொடர்ச்சி

163. பல்வேறு அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிக் கட்டடங்களின் வடிவமைப்பில் உலக ளவில் வளர்ந்து வரும் நவீன போக்குகளையும் தமிழ்நாட்டின் கட்டிடக்கலை மரபுகளையும் கருத் திற்கொண்டு, புதிய கட்டட வடிவமைப்புக் கொள்கை ஆவணம் Future of Spaces விரைவில் வெளியிடப்படும். கட்டட வடிவமைப்பில் அழகி யல், நவீன தொழில்நுட்பம், பசுமைக் கட்டுமா னம், பணிச்சூழலியல் போன்றவற்றை முறை யாக நடைமுறைப்படுத்திடத் தேவை யான வழிமுறைகள் அடங்கிய கொள் கையாக இது அமைந்திடும்.

**நெடுஞ்சாலைகள்**

164. பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் சாலைக் கட்டமைப்பின் தரத்தை தொடர்ந்து மேம்படுத்த இந்த அரசு உறுதியாக உள்ளது. முதல மைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ், இதுவரை 1,262 கி.மீ நீளத் திற்கு 2,587 கோடி ரூபாய் மதிப்பில் சாலை அகலப்படுத்தும் பணிகள் முடிக் கப்பட்டுள்ளன. மேலும், 4,881 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன.

165. தமிழ்நாட்டின் முக்கிய நகரங் களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக 2,824 கோடி ரூபாய் செலவில் 16 புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பருவமழைக் காலத்தில் போக்குவரத்து துண்டிக்கப்படாமல் இருக்க, 2,006 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,113 உயர்மட்டப் பாலப் பணிகள் எடுக்கப்பட்டு, 683 உயர்மட்டப் பாலப் பணிகள் முடிவடைந்து பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள் ளன. மீதமுள்ள 430 உயர்மட்டப் பாலங்கள் கட் டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

166. சிவகாசி நகருக்கு வெளிவட்ட சாலை அமைக்கும் பணியும், மன்னார்குடி நகருக்கு வட் டச் சாலை அமைக்கும் பணியும், திண்டுக்கல் நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணியும், திருச்சி ஸ்ரீரங்கம் இடையே உயர் மட்ட பாலம் அமைக்கும் பணியும், அவினாசி முதல் மேட்டுப் பாளையம் வரை நான்குவழிச் சாலையாக அக லப்படுத்தும் பணியும் மற்றும் விழுப்புரம் மாவட் டம், மாரங்கியூர்ஏனாதிமங்கலம் சாலையில் கோரையாறு ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி ஆகியவை 665 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

167. கிழக்குக் கடற்கரைச் சாலையில், திரு வான்மியூர் முதல் உத்தண்டி வரையிலுள்ள 14.6 கி.மீ. நீளமுள்ள பகுதியில் காணப்படும் பெருமள விலான போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடும் வகையில், நான்குவழி உயர்மட்ட வழித்தடம் ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

168. ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு (CRIDP) 8,365 கோடி ரூபாயும் சென்னை எல்லைச் சாலை திட்டத்திற்காக 2,267 கோடி ரூபாயும் கன்னியா குமரி தொழில் வழித்தடத் திட்டத்திற்குசென்னை 908 கோடி ரூபாயும் இந்த வரவுசெலவுத் திட்டத் தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

169. கடந்த 40 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாத கடலூர் சரக்குத் துறைமுகம், தற்போது 150 கோடி ரூபாய் செலவில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும்அத்துறைமு கத்தை ஆண்டொன்றிற்கு சுமார் 35 இலட்சம் டன் சரக்குகள் கையாளும் வசதி கொண்டதாகத் தரம் உயர்த்திட, உரிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இதன் மூலம்,தமிழ்நாட்டின் மத்திய மண்டலம் பெரும் பொருளாதார வளர்ச்சி பெறும்.

170. தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த முக் கிய சாலைக் கட்டமைப்புத் திட்டங்களை, சிறந்த மேலாண்மை முறைகளை பின்பற்றிச் செயல்ப டுத்திட, ஒரு சட்டப்பூர்வ அமைப்பைஉருவாக்கமு டிவெடுக்கப்பட்டு, **தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் (Tamil Nadu StateHighways Authority) அமைத்திடும் சட்ட முன்வடிவு நடப்புக் கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்படும்**. இதன் மூலம், அரசு தனியார் பங்களிப்புடன் மாநிலத்தில்சா லைக்கட்டமைப்பு வளர்ச்சிக்கான முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க இயலும். இந்த வரவுசெலவுத் திட்டமதிப்பீடுகளில் நெடுஞ்சாலைகள்மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு 20,043 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முன்னாள் படைவீரர்கள் நலன்!**

171 தாய்நாட்டிற்காக நம் நாட்டின் எல்லைக ளில், பல்வேறு கடினமான சூழல்களில் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்திடும் நோக்கு டன் தன்னலமற்ற சேவைகள் செய்துவரும் நமது முன்னாள் படைவீரர்களின் நலனிற்காக இந்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரு கிறது. வீட்டுவரித் தொகையினை மீளப்பெறும் சலுகை, தற்போது கைம்பெண்கள், போரில் ஊன முற்ற படைவீரர் போன்ற சில பிரிவினருக்கு மட் டும் வழங்கப்படுகிறது. வரும் நிதியாண்டிலிருந்து, குடியிருப்புகள், சொத்துவரி, வீட்டுவரித் தொகை யினை மீளப்பெறும் இத்திட்டத்தினை அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் நீட்டிப்பு செய்து வழங்கிட ஆவன செய்யப்படும். இதனால், சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் முன்னாள் படைவீரர் கள் பயன் பெறுவர்.

**அரசு ஊழியர் நலன்!**

172. மாநிலத்தில் உள்ள தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியா ளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணி




யாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் வெவ்வேறு அரசுத் துறைகளிலுள்ள காலிப் பணியிடங்களுக்காக இதுவரை 27,858 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது தவிர, பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூல மாக 32,709 பேர் பணி நியமனம் செய்யப்பட் டுள்ளார்கள். ஆக மொத்தம் இந்த அரசு பொறுப் பேற்ற 24 ஆண்டுகளில் 60,567 பேர்களுக்கு அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 10,000 பணியிடங்களை நடப்பு நிதி ஆண்டி லேயே நிரப்பும்பொருட்டு உரிய நடவ டிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

173. அரசு அலுவலர் குறைந்த வாடகையி லான குடியிருப்புகளின் தேவை அதிகரித்து வரு வதை நிறைவு செய்யும் வகையில், சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 147 கோடி ரூபாய் செலவில், மூன்று இலட்சம் சதுர அடி பரப் பளவில் 95 B மற்றும் 133 C வகை குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

174. ஓய்வூதியதாரர் உறுப்பினர்களுக்கு இறக் கநேரிட்டால், குடும்ப தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தில்' நிதியு தவியாக 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. 202324 ஆம் ஆண்டில், 31.01.2024 வரை, 19,134 ஓய்வூதியதாரர் குடும்ப உறுப்பினர்க ளுக்கு 96 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட் டுள்ளது.

**இலங்கைத் தமிழர் நலன்!**

175. இலங்கைத் தமிழர்கள் நலனிற்காகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற் காகவும் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. முகாம்வாழ் இலங்கைத் தமிழர் களுக்கு புதிதாக 7,469 வீடுகள் கட்டித்தரப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. 176 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதற்கட்டமாக 3,510 வீடுகளுக்கான பணிகள் தொடங்கப்பட்டதில், இதுவரை 1,591வீடு களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நிறைவுபெறும் தருவாயில் உள்ளன. விரைவில் இரண்டாம் கட்டப் பணிகளும் தொடங்கும்.

**மக்கள் குறைதீர்ப்பு!**

176. பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உட னுக்குடன் தீர்வு காண்பதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருகிறது. முதல்வரின் முக வரி திட்டத்தில் இதுவரை பெறப்பட்ட 20.31 இலட் சம் மனுக்களில், 19.69 இலட்சம் மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டுள்ளன. மனுக்களுக்குக் காணப்பட்ட தீர்வுகளின் மீது, மனுதாரர்களிடமி ருந்து பின்னூட்டங்கள் பெறப்பட்டு உரிய மேல்ந டவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

177. பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்குச் செல்லவேண்டிய அவசியமின்றி, அவர்கள் அதி கமாக அணுகும் பதிமூன்று அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று, 30 நாட்களுக் குள் தீர்வு காணும் வகையில் "மக்களுடன் முதல் வர்" தொடங்கப்பட்டது. இதுவரை, என்ற புதிய திட்டம் இத்திட்டத்தின்கீழ் இதுவரை, 3.5 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

178. இதன் அடுத்தகட்டமாக, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒருநாள் வட்ட அளவில் ஒரு ஊரில் ஒருநாள் முழு வதும், களஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங் களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளை கேட்டறிந்து, **அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்குதடையின்றி மக்களைச் சென் றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக் கத்தோடு 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது**. இவ் வாறு, ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் கடைக் கோடி மக்களை தேடிச்சென்று அவர்களுக்குத் தேவையான அரசு சேவைகளை உடனுக்குடன் வழங்கிட இந்த அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

**சிறப்புத்திட்டச் செயலாக்கம்!**

179. சிறப்புத்திட்டச் செயலாக்கத் துறையின் மூலம் பல்வேறு அரசு அறிவிப்புகளுக்கான ஆணைகள் வெளியிடப்படுவதை, தொடர்ந்து மட் டுமல்லாமல், கண்காணிப்பதோடு **அத்திட்டங்க ளின் பலன்கள் தாமதமின்றி மக்களுக்குச் சென்ற டைவதை உறுதி செய்திட, முதலமைச்சர் அவர்கள் கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற புதிய முன்னெ டுப்பின் மூலம் மாவட்டங்களுக்கு நேரடியா கச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டார் கள்.** இதுவரை ஆறு மண்டலங்களில் 24 மாவட்டங்களுக்கான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தில் சமூகப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்திடச் செயல்படுத்தப்படும் மாபெரும் கட்டமைப் புத் திட்டங்களை "முத்திரைத் திட்டங்கள்" (Iconic Projects) என முன்னுரிமை அளிக் கப்பட்டு, அதன் முன்னேற்றங்கள் குறித்து முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தொடர் கண்காணிப்பின் விளை வாக, திட்டப் பணிகள் துரிதமாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

**சட்டம் மற்றும் ஒழுங்கு!**

180. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை முறையாக பேணிப் பாதுகாத்திடவும், சமூக நல்லிணக்கத்தை நிலைநிறுத்திட வும் இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்ததன் விளைவாக, தமிழ்நாட்டில் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளுடைய பாதுகாப்பிற்கு சிறப்பு முக்கி யத்துவம் அளித்து காவல்துறையின் செயல்பாடு கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதனால், தேசிய அளவில் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்களின் பட்டியலில் தமிழ்நாட்டிலுள்ள நக ரங்கள் முன்னிலை வகிக்கின்றன. மேலும், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் கடத்தல்க ளைத் தடுப்பதற்கும் இந்த அரசு மிகக் கடுமை யான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பொது மக்கள் அச்சமின்றி இருக்கவும், அவர்தம் உடைமைகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத் தவும், திறன்மிகு காவலர் (SMART KAVALAR) என்ற புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 46 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. அவற்றில் 39 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் அடங் கும்.

## உலகப் பொருளாதார அமைப்புகள் பாராட்டு!

181. மாநிலத்திலுள்ள அனைத்து 1,551 நிலை யங்களிலும் 372 சிறப்பு பிரிவுகளிலும் காவல்து றையினை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக் கும் வலைப்பின்னல் திட்டத்தை (CCTNS) மேம்படுத்தி, பொதுமக்களிடமிருந்து இணை யவழியில் புகார்களைப் பதிவு செய்வது, பிற துறைகளுடன் தகவல்கள் பரிமாற்றம் போன்ற அம்சங்களுடன் இணைய வழியில் CCTNS 20 என்ற ஒரு புதிய திட்டம், 124 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் செயல் படுத்தப்படும்.

182. தீயணைப்புத் துறையினை வலுப்ப டுத்தவும், நவீனமயமாக்கவும் 15வது நிதிக்கு ழுவின் நிதி உதவியோடு, 373 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். நவீன தீயணைப்பு வாகனங்கள் மற்றும் சிறப்பு மீட்புக் கருவிகள் வாங்கிட 137 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், சிறைச்சா லைகளை 104 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச் சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் பகுதி யில் ஒரு புதிய உயர்பாதுகாப்பு கொண்ட நவீன சிறைச்சாலை கட்டப்படும். மேலும், தடய அறிவி யல் துறையை முழுமையாக நவீனமயமாக்கும் நோக்கோடு, ஒரு புதிய திட்டம் நிறைவேற்றப்படும். இந்த ஆண்டு, 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடய அறிவியல் துறைக்குத் தேவையான புதிய கருவி கள், கணினி ஆகியவை வழங்கப்படும்.

**வணிக வரிகள்!**

183. தமிழ்நாட்டில் வணிகர்களிடமிருந்து வரி நிலுவையை எளிய முறையில் வசூலிப்பதற்கு சமாதான திட்டம் ஒன்றை இந்த அரசு அறிவித் தது. இத்திட்டத்தின் கீழ், ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் கீழ் வரி, அபராதம், வட்டி ஆகியவற்றை நீண்ட காலமாக நிலுவையில் வைத்திருந்த சிறு வணி கர்களுடைய 143 கோடி ரூபாய் நிலுவைத் தொகை அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட் டுள்ளன.

184. வணிகவரித் துறையின் வரி வருவா யைப் பெருக்குவதிலும் வரி ஏய்ப்புகளைக் கண் டுபிடித்து குறைப்பதிலும், வணிக வரித் துறைக்கு உதவி செய்திட ஹைதராபாத் இந்திய தொழில் நுட்பக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு பெருந்தரவு பகுப்பாய்வு மென்பொ ருளை பயன்படுத்தி (Big Data Analytics Solution) துறையின் செயல்பாடுகளை மேம்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், சரக்கு மற் றும் சேவை வரி வருவாயைப் பெருக்கவும். வரி ஏய்ப்பைத் தடுத்திடவும் தரவுகள் பகுப்பாய்வு மையம் (Data Analytics Unit) ஒன்று தலைமை அலுவலகத்தில் புதிதாக ஏற்படுத்தப்படும். நிகழ் நேரத்தில் கணிப்பாய்வை மேற்கொள்ளும் வகை யில், தகுந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பெருந்தரவு கணிப்பாய்வு மென்பொருள் கணினி கட்டமைப்புடன் அமைய இருக்கும் இந்தப் புதிய அமைப்பை ஏற்படுத்திட 4 கோடி ரூபாய் செலவி டப்படும்.

185. பத்திரப்பதிவுத் துறையின் கணினிமய மாக்கலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில், ஸ்டார் 3.0 கீழ், பத்திரப்பதிவு முறை யில் பெருந்தரவு பகுப்பாய்வு, செயற்கை நுண்ண றிவு, இயந்திர வழி கற்றல் ஆகிய உயர்தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி பத்திரப்பதிவுச் சேவையை நவீன முறையில் வழங்கிட, 320 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பதிவுத்துறை அலு வலகங்களுக்குப் புதிய சொந்தக் கட்டடங்கள் கட் டப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படை யில், கடந்த 2 ஆண்டுகளில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான, வலுவிழந்த கட்டடங்க ளில் முதற்கட்டமாக 71 இடங்கள் தேர்வு செய்யப் பட்டு அவ்விடங்களில் புதிய கட்டடங்கள் கட்ட 133 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பேரிடர் மேலாண்மை!**

186. நிகழ் நேர மழைப்பொழிவு மற்றும் வானிலை அளவீடுகளை பெறுவதற்காக 1,400 புதிய தானியங்கி மழைமானிகளையும், 100 புதிய தானியங்கி வானிலை நிலையங்களையும் நிறுவிட அரசு 32 கோடி ரூபாய் ஒப்புதல் வழங்கி யுள்ளது. மேலும், வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் அதிதிறன் மிக்க விரைவான கணினிச் சேவைகளைப் பெறவும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் [Space Application Centre (SAC)] புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

187. வெள்ளம், புயல், நிலஅதிர்வு போன்ற இயற்கைப் பேரிடர்களை கண்காணித்து, பேரிடர் அபாயக் குறைப்பிற்கான கள நிலவரங்களுக்கு உகந்த செயல்பாட்டு உத்திகளை வகுக்க ஏதுவாக "தொழில்நுட்ப மையம்" ஒன்றும் அமைக்கப்ப டும். வானிலை முன்னறிவிப்பை வலுப்படுத்தும் வகையில், இராமநாதபுரம் மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களில் இரண்டு சிபேண்ட் டாப்ளர் ரேடார்கள் (Doppler Radar) 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

**நிதி மேலாண்மை!**

188. நமது மாநிலத்தின் கடன் பொருளாதாரத் தின் (Credit Economy) அளவு, வரவுசெலவுத் திட் டத்தை விட மூன்று மடங்கு அதிகமாகும். எனவே, மாநிலத்தின் பரவலான வளர்ச்சிக்கு வலுவான கடன் பொருளாதாரம் இன்றியமையா




ததாகும்.இதனை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, வேளாண்மை, சிறு, குறு நிறுவனங்கள், மகளிர் சுயஉதவிக் குழு, கல்வி ஆகிய முன்னுரி மைத் துறைகளுக்கு கடன் வழங்கும் வங்கிக ளுக்கு, முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு, வரும் நிதியாண்டிற்கென 8 இலட்சம் கோடி ரூபாய் என உயர் இலக்கினை இந்த அரசு நிர்ண யித்துள்ளது. இது, கடந்த ஆண்டைவிட 14 சதவீ தம் அதிகமாகும்.

189. துரிதமான நிதி மேலாண்மை (Cash Management) மற்றும் கடன் நிலைத்தன்மை (Debt Sustainability) ஆகியவையே சிறந்த நிதி மேலாண்மையின் தூண்கள் ஆகும். பல்வேறு துறைகளின் சார்பாக எண்ணற்ற வங்கிக் கணக் குகளில் சேமிப்பு நிதியினைப் பயன்படுத்தாமல் வைத்துள்ள நிலையில், மறுபுறம் அரசு கடன் பெற்று செலவினங்களை மேற்கொண்டு வருகின் றது. இந்த நிலையை மாற்றிட, பல்வேறு துறைக ளில் உள்ள திட்டங்களில் பயன்படுத்தப்படாத சேமிப்புப் பணத்தை அரசிற்குத் திரும்பச் செலுத் திட, இந்த அரசு சிறப்புப் பணிக்குழு ஒன்றை அமைத்தது.

190. மேலும், இதுபோன்ற நிகழ்வுகளை வருங்காலத்தில் தடுப்பதற்கு, பல்வேறு துறைக ளுக்கு அவர்களின் தேவைக்கேற்ப, உரிய நேரத் தில் நிதி விடுவிப்பதற்கான தொழில்நுட்ப ரீதியான தீர்வை இந்த அரசு உருவாக்கியுள்ளது. இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ள பொது நிதிக் கண்கா ணிப்பு அமைப்பு (PFTS), 13 துறைகளில், 36 முக் கியத் திட்டங்களில் அரசு நிதியினை விடுவிப்பதி லிருந்து பயனாளிகளின் வங்கிக் கணக்கில் அந் நிதி சென்று சேரும்வரை கண்காணிக்க முடியும். இதன் மூலம், திட்டங்களின் செயல்படுத்தும் வேகத்திற்கு ஏற்றார்போல் அரசு நிதி விடுவிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, அரசுக்கு தேவைக்குமேல் கடன் வாங்காமல், நமது வட்டிச் செலவினத்தையும் குறைக்க உதவுகிறது.

191. நடப்பு நிதியாண்டில் மின்னணு ஒப்பந்தப் புள்ளி முறை இவ்வரசால் 01042023 முதல் இந்த அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு, இது வரை 1.3 இலட்சம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட் டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஒப்பந்தங்களில் மின் னணு வங்கி உத்தரவாத முறை மின்னணு ஒப் பந்தப்புள்ளி வலைதளத்தில் இந்த அரசால் அறிமு கப்படுத்தப்படும். இந்த முன்னெடுப்புகளின் தொடர்ச்சியாக, இசேவை மையங்களின் வாயி லாக 01/07/2024 முதல் அனைத்து துறைகளின் ஒப்பந்தக்காரர்கள் பதிவும் மின்னணு முறையில் மேற்கொள்ளப்படும்.

**பகுதி - ஆ**

**மாநில அரசின் நிதிநிலை**

192. நான் இதுவரை முக்கிய சீர்திருத்தங்களை யும் இந்த அரசின் முன்முயற்சிகளையும் எடுத்து ரைத்துள்ளேன். தற்போது மாநிலத்தின் ஒட்டு மொத்த நிதிநிலைமையை விளக்க விழைகிறேன்.

193. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதால், அத்திட்டத்திற்கான முழுச் செலவையும் மாநில அரசு தனது நிதியிலி ருந்து ஏற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக அரசிற்கு நடப்பு ஆண்டில் 9,000 கோடி ரூபாய் செலவினம் ஏற்பட்டுள்ளது. மேலும், 30.06.2022 முதல் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு நிறுத்தப்பட்டதால் ஆண் டொன்றுக்கு சுமார் 20,000 கோடி ரூபாய் வரு வாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சவால் கள் நிறைந்த சூழ்நிலையில், 2023-24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கடந்த மார்ச் மாதம் தாக்கல் செய்யப்பட்டது.

194. நடப்பு ஆண்டில் ஏற்பட்ட இரு தொடர் பேரிடர்கள் ஏற்படுத்திய பாதிப்பு, இந்த சூழ்நிலையை மேலும் மோசமடையச் செய்து, மாநிலத்தின் நிதி நிலைமையை கடுமையாக பாதித்துள்ளது. தேவையான நிவாரணத் தொகையை வழங்குவதற்கும், தற்காலிக மற் றும் நிரந்தர சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வ தற்கும் எதிர்பாராச் செலவினம் ஏற்பட்டுள்ளதுடன், குறிப்பிடத்தக்க அளவில் வருவாய் இழப்பும் ஏற் பட்டுள்ளது. பல முறை ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து எந்தவொரு நிதியையும் மாநில அரசுக்கு இதுவரை வழங்கவில்லை.

195. மாநிலத்தின் எதிர்பார்ப்பிற்கு நேர்மாறாக, மாநில அரசின் நிதிநிலையை மேலும் பாதிக்கும் வகையில், கடன் வாங்கும் வரம்பு குறித்து ஒன் றிய அரசு கடுமையான நிபந்தனைகளை விதிப்பதன் மூலம், வளர்ச்சித் திட்டங்களுக்காக நிதி ஆதாரங்களை திரட் டும் மாநில அரசின் அதிகாரத்தையும் ஒன் றிய அரசு கட்டுப்படுத்துகிறது.

196. இத்தகைய கடுமையான நிபந்த னைகளுள் ஒன்றின் விளைவாக, நடப்பு ஆண்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு மாநில அரசு, இழப் பீட்டு நிதியாக 17,17 கோடி ரூபாயை வழங் கியுள்ளது. இந்த நிபந்தனையை நிறைவேற் றத் தவறும் நேர்வில், அதற்கு இணையான தொகை நமது கடன் வாங்கும் வரம்பிலி ருந்து கழிக்கப்படும். மேலும், இதேபோன்று அடுத்த நிதியாண்டிலும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு இழப்பீட்டு நிதியாக 14,442 கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டும். மின் துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு இந்த அரசு உறுதிகொண்டுள்ள அதே வேளையில், இத்த கைய நிபந்தனை, மாநில அரசின் நிதி நிலையின் மீது பெரும் சுமையை ஏற்படுத்தி, வளர்ச்சிப் பணி களுக்கான நிதி ஒதுக்கீட்டை பாதிக்கிறது. கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட உதய் (UDAY) திட்டத்தினைப் போன்று, இந்தத் தொகை யினையும் நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் உச் சவரம்பு கணக்கீட்டிலிருந்து நீக்கம் செய்ய வேண் டுமென்ற கோரிக்கையை மாநில அரசு ஒன்றிய அரசிடம் முன்வைத்துள்ளது.

197. இச்சூழ்நிலையில், 2023-24 ஆம் ஆண் டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,08,056 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ள வருவாய் செலவினங்கள், திருத்த மதிப்பீடுகளில் 3,17,484 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத் திற்கு 15,594 கோடி ரூபாய் நிதி இழப்பீடு, பேரிடர் நிவாரண உதவி மற்றும் சீரமைப்புச் செலவினங் களுக்காக 2041 கோடி ரூபாய் ஆகியவற்றால் வருவாய்ச் செலவினத்தில் உயர்வு ஏற்பட்டபோதி லும், திறன்மிக்க நிதி மேலாண்மை மூலம், வரு வாய் செலவினங்களின் உயர்வு 9,428 கோடி ரூபாய் அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# பூவிருந்தவல்லி - கோடம்பாக்கம் மெட்ரோ ரயில் 2025-டிசம்பரில் தொடங்கும்!

## நிதி நிலை அறிக்கை...

9ஆம் பக்கத் தொடர்ச்சி

198. வருவாய் வரவுகளை பொறுத்தவரையில், 2023-24ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,81,182 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் சொந்த வரி வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 1,70,147 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தினால், 2023-24 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20.61 சதவீதம் என எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாயின் வளர்ச்சி, திருத்த மதிப்பீடுகளில் 13.26 சதவீதம் எனக் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

199. மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய், 202324 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் கணிசமாக உயர்ந்து, திருத்த மதிப்பீடுகளில் 30,381 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வரிவிகிதங்களைச் சீரமைத்தல், வசூலிக்கும் திறனை மேம்படுத்துதல் போன்ற இவ்வரசால் மேற்கொள்ளப்பட்ட வருவாயை அதிகரிக்கும் முயற்சிகளின் விளைவாக இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது.




200. ஒன்றிய அரசிடமிருந்து பெறும்

## கிளாம்பாக்கத்துக்கு மெட்ரோ ரயில்!

உதவி மானியங்கள் மற்றும் மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு ஆகியவை ஒன்றிய அரசின் நிதிப் பங்கீட்டில் அடங்கும். ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள், 202324 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 26,996 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 202324 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டை விட சிறிதளவு குறைவானதாகும். வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 41,665 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த ஒன்றிய அரசின் வரிகளில் மாநில அரசின் பங்கு, திருத்த மதிப்பீடுகளில் 45,053 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒன்றிய அரசு தனது வரி வசூல் அதிகரிக்கும் என்று எதிர்பார்த்த தன் அடிப்படையில் திருத்த மதிப்பீடுகளில் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது.

201. ஒட்டு மொத்தமாக 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 37,540 கோடி ரூபாயாக இருந்த வருவாய் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், திருத்த மதிப்பீடுகளில் வருவாய் பற்றாக்குறை 44,907 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் 36,017 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கான இழப்பீட்டு நிதி நீங்கலான வருவாய்ப் பற்றாக்குறை திருத்த மதிப்பீடுகளில் 27,790 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. பேரிடர்களின் விளைவாக வருவாயிலும் செலவினங்களிலும் பாதகமான விளைவுகள் ஏற்பட்ட போதிலும், வருவாய் பற்றாக்குறையை அரசு திறன்பட நிருவகித்துள்ளது.

202. 2023 -24 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 44,366 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த மூலதன செலவினங்கள், திருத்த மதிப்பீடுகளில் 42,532 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10,169 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தநிகரக்கடன்கள்மற்றும்முன்பணங்கள் திருத்த மதிப்பீடுகளில் 6,624 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இரு தொடர் பேரிடர்கள் ஏற்பட்டதன் விளைவாக திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதில் ஏற்பட்ட தொய்வே இதற்குக் காரணமாகும்.

203. 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 92,075 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை திருத்த மதிப்பீடுகளில் 94,060 கோடி ரூபாயாக சிறிதளவு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளதன் காரணமாக, 2023-24ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3.25 சதவீதமாக மதிப்பிடப்பட்ட நிதிப்பற்றாக்குறை திருத்த மதிப்பீடுகளில் 3.45 சதவீதமாக அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

204. தற்போது நான் 202425 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை விளக்க விழைகிறேன்.

205. மாநிலப் பொருளாதார வளர்ச்சி, வரி விகிதங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் வரி வசூலில் திறன் மேம்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, 2024-25 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் சொந்த வரி வருவாய் மதிப்பீடுகள் 14.71 சதவீதம் வளர்ச்சியுடன் 1,95,173 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் வணிக வரிகள் மூலம் 1,43,381 கோடி ரூபாய், முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலம் 23,370 கோடி ரூபாய், மாநில ஆயத் தீர்வைகள் மூலம் 12,247 கோடி ரூபாய் மற்றும் வாகனங்கள் மீதான வரிகள் மூலம் 11,560 கோடி ரூபாய் அடங்கும். மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாயில் காணப்படும் வளர்ச்சி அதே அளவில் நீடிக்கும் என்ற எதிர்பார்ப்பில் 202425 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 30,728 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

206. வரும் நிதியாண்டில், சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு முற்றிலும் நின்றுவிடும் என்பதால், 2023 -24 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் போது, 2024 - 25 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் குறைத்து 23,354 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் ஒதுக்கீடுகளின் அடிப்படையில், 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய அரசின் வரிகளில் மாநில அரசின் பங்கு 49,755 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

207. 2024-25ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில், மொத்த வருவாய்ச் செலவினம் 3,48,289 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. பொறுப்பேற்ற செலவினங்களான சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் வட்டித் தொகை வழங்குவதற்கான மதிப்பீடுகள் அதிகரித்துள்ளது. மானியங்கள் மற்றும் உதவி மானியங்கள் வழங்குவதற்கான மதிப்பீடுகள் 1,46,908 கோடி ரூபாய் என் உயர்த்தி மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை முதல் முறையாக முழு ஆண்டிற்கும் செயல்படுத்த உள்ளதால் ஏற்படும் கூடுதல் செலவினம் 5,696 கோடி ரூபாய் ஆகும்.

208. ஒட்டு மொத்தமாக, 2024-25 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இழப்பீட்டிற்கான நிதி 14,442 கோடி ரூபாயையும் சேர்த்து வருவாய்ப் பற்றாக்குறை 49,279 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## பொதுப் பணித்துறைக்கு பாராட்டு!

இழப்பீட்டுத் தொகை நீங்கலாக, வரும் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 34,837 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருவாய்ப் இருக்குமென பற்றாக்குறை, 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான இழப்பீட்டு நிதி நீங்கலான வருவாய்ப் பற்றாக்குறையை விட குறைவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

209. 2024-25ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், மூலதனச் செலவினம் 47,681 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் போது 12 சதவீத வளர்ச்சி கொண்டதாகும். சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான செலவினம் 9,000 கோடி ரூபாயிலிருந்து 12,000 கோடி ரூபாயாக அதிகரித்ததன் காரணமாக நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் 11,733 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டமைப்புத் திட்டங்களில் பெருமளவில் முதலீடு செய்வதுடன், மூலதனச் செலவினத்தை அதிகரிப்பதிலும் மாநிலத்தின் இந்த அரசு உறுதியாக உள்ளது.

210. மொத்தத்தில், நிதிப்பற்றாக்குறை 1,08,690 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.44 சதவீதம் ஆகும். பதினைந்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், **மாநிலத்தின் வளர்ச்சியைப் பாதிக்காமல் நிதிப்பற்றாக்குறையைக்** கட்டுப்படுத்தும் சீரிய நிதி நிருவாக **மேலாண்மைய**ை இந்த அரசு கடைப்பிடித்து, **2022-23 ஆம் ஆண்டில் 3.46 சதவீதமாக இருந்த நிதிப்பற்றாக்குறையை 2023-24ஆம் ஆண்டில் 3.45 சதவீதமாகவும், 2024-25 ஆம் ஆண்டில் 3.44 சதவீதமாகவும் குறைத்துள்ளது. மாநிலத்தின் வரவுசெலவுத் திட்ட வருவாய் ஆதாரங்களில் இருந்தே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு இழப்பீட்டு நிதி வழங்கிய பின்பும் பேரிடர்களால் கடும் பாதிப்பைச் சந்தித்தபோதிலும் நிதிப்பற்றாக்குறையைக் குறைத்து இந்த அரசு சாதனை புரிந்துள்ளது. பல்வேறு சவால்களுக்கு இடையிலும், திறன்மிகு நிதிமேலாண்மையை உறுதியாகக் கடைப்பிடித்து, அதே நேரத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த அரசு உறுதி கொண்டிருப்பதை தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கும் இந்த வரவுசெலவுத் திட்டம் கோடிட்டுக் காட்டுகிறது.**

211 அண்மையில், பதினாறாவது நிதிக்குழுவை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. தமிழ்நாடு போன்ற வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு ஒன்றிய அரசின் வரிகளைப் பகிர்ந்தளிப்பதில்முந்தையநிதிக்குழுக்களால் இழைக்கப்பட்டுள்ள வரலாற்று அநீதியை, டாக்டர். அரவிந்த் பனகாரியாவின் தலைமையில் உள்ள நிதிக்குழுவினால் சரி செய்யப்படும் என்று இந்த அரசு நம்புகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் காரணங்கூறாமல், நாட்டின் வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் வகையில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய உரிய நிதியை உறுதிசெய்யும் நியாயமான முறையை நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

212. இந்தியத் திருநாடு விடுதலை பெற்ற பின் நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களும் தங்களுக்கான வளர்ச்சிப் பாதையை வகுத்துக் கொள்ளத் தொடங்கின. எனினும் சமூக முன்னேற்றத்திலும், பொருளாதார வளர்ச்சியிலும் தமிழ்நாடு முன்னேற்றம் அடைந்த விதம் குறித்து உலகப் பொருளாதார அறிஞர்களும், அமைப்புகளும் பாராட்டிப் போற்றுகின்றனர். தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் அவர்கள் குறிப்பிட்டதை இப்பேரவையில் பதிவு செய்திட விரும்புகிறேன்.

"Tamil Nadu is one of the states which had achieved rapid progress within a relatively short period despite it starting from appalling levels of poverty, deprivation and inequality. Tamil Nadu initiated bold social programmes and has some of the best public services among all Indian States and many of them are accessible to all on a nondiscriminatory basis. Tamil Nadu has one of the highest per capita income and lowest poverty rates among all Indian States. This is an important example of the complementarity between economic growth and public support."

213. கடந்த 75 ஆண்டுகளில் நாட்டின் சில மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சி மட்டும் அடைந்தன. மற்ற சில மாநிலங்கள் கல்வி, சுகாதாரம் என சமூகக் குறியீடுகளில் மட்டும் முன்னேற்றம் அடைந்தன. மாறாக சமூக முன்னேற்றம், தொழில் வளர்ச்சி என அனைத்து தளங்களிலும் பெருவளர்ச்சி பெற்று தமிழ்நாடு தன் முத்திரையைப் பதித்துள்ளது.

குறிப்பிட்டுச் சொல்வது என்றால்,

- ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டில் நாட்டிலேயே முதலிடம்
- மின்னணுப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் நாட்டில் முதலிடம்.
- புத்தொழில் சூழல் அமைவுக்கான தரவரிசையில் முன்னணி மாநிலம்.
- தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிரின் பங்கேற்பு நாட்டிலேயே முதன்மை.
- உயர் கல்விச் சேர்க்கையில் நாட்டில் முதலிடம்.
- தேசிய தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாட்டைச்

சேர்ந்த 146 கல்வி நிறுவனங்கள் இடம் பெற்று நாட்டிலேயே முதலிடம்.

214. இவ்வாறு உலகமே வியந்து பாராட்டும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த தலைவர்கள் பலரும் இம்மாமன்றத்தில் ஓவியமாக உறைந்து நின்றாலும், நம் எண்ணங்களில் என்றென்றும் நிறைந்து நம்மை வழிநடத்திக் கொண்டே இருக்கிறார்கள். அந்த வழியில் நமது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நாமெல்லாம் பணியாற்றுவது நமக்குக் கிடைத்த பெருமை.

**"காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி**

**அளிதோ தானே: அது பெறல் வருங் குரைத்தே"**

**(புறம்5)**

**ஓர் அரசன் தன்னுடைய குடிமக்களை, ஒரு தாய் தன்னுடைய குழந்தையைக் காப்பது போல் பாதுகாத்திடவேண்டும்.** என் புறநானூறுப் பாடல் ஒன்று அழகுற விளக்குகிறது. அதே வழியில் நல்லாட்சி நடத்திவரும் நமது மாண்புமிகு முதலமைச்சரின் பாதுகாப்பான கரங்களைப் பற்றி தமிழ்நாட்டின் மக்கள் தன்னம்பிக்கையுடன் தங்களுடைய வெற்றிப் பயணத்தை தொடர்ந்து வருகின்றனர்.

215. இந்த வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அயராது உழைத்த நிதித்துறையின் முதன்மைச் செயலாளர் திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும் நிதித்துறையின் பிற அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

216. இந்த வரவு - செலவுத் திட்டத்தினைச் செதுக்கிடத் தேவையான பல ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எனது மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

217. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்து உரையாற்றினார்.

தனது உரையை முடிக்கு முன், நிறைவாக நான் பிறந்த விருதுநகர் மாவட்டத்தில் தோன்றி, சங்க தமிழ் பாடலைப் பாடிய ஆண்டாள் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல,

"...எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்

உன்றன்னோடுற்றோமே




செய்வோம்..."

யாவோம் உனக்கே நாம்

என்ற வரிகளை நினைவுகூர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர் உறங்கும் இடம் நோக்கி தொழுது.

உரையை நான் நிறைவு செய்கிறேன்.

**வாழ்க தமிழ்!**

**வெல்க தமிழ்நாடு!**

என்று கூறி, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தனது உரையை நிறைவு செய்தார்.

## நிதியமைச்சர் தாக்கல் செய்துள்ள நிதி நிலை அறிக்கை

# நமது அரசின் கனவு! அது நாளை முதல் நனவாக வேண்டும்!

## அனைத்துத் துறை அமைச்சர்கள் - ஆட்சியர்களுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, பிப். 20-

**நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கை நமது அரசின் கனவு; அது நாளை முதல் நனவாக வேண்டும். இதனை மனதில் வைத்து அனைத்துத் துறை அமைச்சர்களும் மாவட்ட ஆட்சியர்களும் மாவட்ட நிர்வாகமும் திட்டங்களை மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-**



தடைகளைத் தாண்டி, வளர்ச்சியை நோக்கித் தமிழ்நாடு சீர்மிகு பயணத்தை நடத்தி வருகிறது. இதனை எடுத்துச் சொல்லும் அரசின் நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் இன்றைய தினம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**சீரான வளர்ச்சிக்கான அதிவேகப் பயணம்!**

பொதுவாக நிதிநிலை அறிக்கைகள் நிதியை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படும். இது நீதியை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அதுவும் சமூகநீதியை மையமாகக் கொண்டு தயாரான இந்த அறிக்கை, அனைத்து மக்களுக்குமான சமநீதியையும் சமநிதியையும் வழங்கித் தமிழ்நாட்டின் சீரான வளர்ச்சிக்கான பாதைக்கு அதிவேகப் பயணத்தை உறுதி செய்துள்ளது.

ஆறாவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசானது 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற திராவிடவியல் கோட்பாட்டின் அரசு நிர்வாக வடிவமாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் செயல்பாட்டின் பயனை நாம் அனைவரும் உடனடியாகவும், நேரடியாகவும் கண்டு வருகிறோம்.

**அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகிறது தமிழ்நாடு!**

இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 விழுக்காடு பங்கைத் தருவதாகத் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளமாக இருக்கிறது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி 8.19 விழுக்காடாக இருக்கிறது. மாநிலத்தின் பணவீக்கமானது 5.97 விழுக்காடாகக் குறைந்துள்ளது. ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது. தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14ஆவது இடத்தில் இருந்து 3ஆவது இடத்துக்குத் தமிழ்நாட்டை உயர்த்தி இருக்கிறோம். புத்தாக்கத் தொழில்கள் வரிசையில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. இப்படி அனைத்துத் துறையிலும் முன்னேறி வரும் மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது.

இது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உயர்த்தி வருகிறது. அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி என்பதே 'திராவிட மாடல்' வளர்ச்சியின் இலக்குகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். இந்த வளர்ச்சியின் அடுத்தகட்ட உயர்வை அடையாளம் காட்டுவதாக தமிழ்நாடு அரசின் 2024-25ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அமைந்திருப்பதை உணர்ந்து மகிழ்கிறேன்.

இலக்கை அமைத்துக் கொள்வதுதான் வெற்றிக்கான முதல் படி. இந்த நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டின் பெருங்கனவுகளை மாபெரும் இலக்காகக் கொண்டுள்ளது.

சமூகநீதி கடைக்கோடி மனிதருக்கும் நலவாழ்வு, உலகை வெல்லும் இளைய தமிழகம், அறிவுசார் பொருளாதாரம், சமத்துவ நோக்கில் மகளிர் நலம், பசுமைவழிப் பயணம், தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும் ஆகிய ஏழு இலக்குகளைக் கொண்டதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது.

**குடிமை முதல் விண்வெளிவரை அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கை!**

குடிசை இல்லாத் தமிழ்நாடு, வறுமை ஒழிப்பு, பின்தங்கிய பகுதிகளின் மேம்பாடு, விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல், மாணவர்களுக்கு கல்விக் கடன் காலை உணவுத் திட்ட விரிவாக்கம், நீர்நிலைப் பாதுகாப்பு, கணினிமயமாக்கம், சாலைகள், குடிநீர்வசதிகள், தமிழ், தமிழ் நூல்கள் மொழிபெயர்ப்பு தொல்லியல் விண்வெளி என அனைத்தையும் உள்ளடக்கியதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. குடிமை முதல் விண்வெளி வரை அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கையாக இது அமைந்துள்ளது.

இந்த அறிக்கையின் மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் அறிவிப்பும் ஈரமுள்ளதாக, இதயமுள்ளதாக இருக்கிறது என்பதுதான். "ஆடுகளை ஓட்டிக்கொண்டு வரும் ஒரு விவசாயி, ஒரே ஒரு ஆட்டை மட்டும் தோளில் தூக்கிப் போட்டு சுமந்து வருவான். அது காலில் அடிபட்டு நடக்க முடியாத ஆடாக இருக்கும். அதற்குப் பெயர்தான் சமூகநீதி" என்று சொன்னவர் தலைவர் கலைஞர். அந்த அடிப்படையில் பல்வேறு அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

கடைக்கோடி மனிதரையும் மேம்படுத்தி, இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை உச்சிக்குக் கொண்டு போய் உட்கார வைப்பதாக இதன் ஒவ்வொரு அறிவிப்பும் அமைந்துள்ளன.

**அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடு- நிதிச் சூறையாடல்கள்!**

நமது கையில் இருக்கும் வளத்தை, தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதாக இந்த அறிக்கையை வடிவமைத்துள்ளோம். கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடு, நிதிச் சூறையாடல்கள் நடந்து முடிந்த காலத்தில், ஆட்சிக்கு வந்தது தி.மு.க. என்பதை அனைவரும் அறிவீர்கள். கடன்களை மட்டுமே சொத்துகளாக வைத்து விட்டுப் போனார்கள். அதனை மனதில் வைத்து 'நிதி இல்லை' என்ற பல்லவியையே பாடிக் கொண்டிராமல் நிதியைத் திரட்டும் செயல்களைச் செய்தோம்.

**மாநில நிதி வளத்தை சுரண்டும் செயல்களை செய்யும் ஒன்றிய அரசு!**

இதற்கிடையில் ஒன்றிய அரசானது மாநிலத்தின் நிதி வளத்தை சுரண்டும் செயல்களைத் தொடர்ந்து செய்தது. நியாயமாக மாநிலத்துக்குத் தர வேண்டிய நிதி ஒதுக்கீடுகளையும் தர மறுத்தது. கடன் வாங்கித் திட்டங்களைத் தீட்டுவதற்கும் தடை செய்தது ஒன்றிய அரசு. இப்படி அனைத்துப் பக்கங்களிலும் வந்த நிதி நெருக்கடிகளையும், நிர்வாகத் தொல்லைகளையும் தாண்டியும், பொறுத்துக் கொண்டும்தான் இத்தகைய வெற்றியைத் தமிழ்நாடு அரசு பெற்று வருகிறது.

**தமிழ்நாடு - இந்தியாவில் சிறந்த மாநிலமாகத் திகழும்!**

இதுபோன்ற பொருளாதார நெருக்கடியைத் தருவதன் மூலமாகத் தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறை வளர்ச்சிச் செயல்பாட்டைத் தடுக்கப் பார்த்தார்கள். ஆனால் அந்தத் தடைகளையும் வென்று, அனைவர்க்குமான வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. ஏழு பெரும் கனவுகளையும் முழுமையாக நிறைவேற்றும்போது தமிழ்நாடு இந்தியாவில் சிறந்த மாநிலமாக, தலைசிறந்த மாநிலமாகத் திகழும் காலம் விரைந்து ஏற்படும்.

**நிதியமைச்சர் தங்கம் தென்னரசுக்குப் பாராட்டு!**

தலைசிறந்த தொலைநோக்குப் பார்வை கொண்ட கனிவான பொருளாதாரச் சமநிலை அறிக்கையைத் தயாரித்து வழங்கிய நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களைப் பாராட்டுகிறேன். திராவிட மாடல் அரசுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் எதிர்காலத்துக்கும் மாபெரும் கடமையை மிகச் சரியாக ஆற்றி இருக்கிறார் அமைச்சர் அவர்கள். அவருக்குத் துணையாக இருந்து, பொருளாதார வளத்தைச் சமூகச் சீர்திருத்த வளர்ச்சிக்குப் பயன்படும் வகையிலான அறிக்கையாக அமையக் காரணமாகவும் இருந்த நிதித்துறையின் முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதித்துறை அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

திராவிட மாடல் ஆட்சி உருவானபோது, "இந்த ஆட்சியானது ஒரு விவசாயிக்கு மழையாகவும், ஒரு ஏழைக்கு ஒரு கவளம் சோறாகவும், ஒரு ஊழியருக்கு மாதத்தின் முதல் நாளாகவும், ஒரு தொழிலதிபருக்கு வளர்ச்சியின் குறியீடாகவும் செயல்படும்" என்று நான் குறிப்பிட்டேன். அப்படித்தான் கழக அரசு செயல்பட்டு வருகிறது. இனியும் அப்படித்தான் செயல்படும் என்பதை நாட்டுக்குச் சொல்லும் அறிக்கைதான் இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை.

**கனவுகள் அனைத்தும் நனவாகும்!**

இவை நமது அரசின் கனவுகள் மட்டுமல்ல, நனவாகப் போகும் கனவுகள். நாளை முதல் அனைத்தும் நனவாகும். துறைசார்ந்த அமைச்சர்களும், துறையின் செயலாளர்களும் இந்தத் திட்டங்கள் எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டனவோ அதனை மனதில் வைத்துச் சிறப்பாகச் செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அனைத்து மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்களுக்கும் அறிவிப்புகள் பரந்து விரிந்துள்ளன. மாவட்ட ஆட்சியர்களும் மாவட்ட நிர்வாகமும் தங்களுக்கான திட்டங்களை மிகமிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

சென்னை- செங்கல்பட்டு - நீலகிரி - திருப்பூர் மாவட்டங்களில் - விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்கு

# ரூ.44 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்! பல்வேறு இணையதளச் சேவைகளை துவக்கி வைத்தார்!

சென்னை, பிப்.20-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்காக சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் ரூ. 44 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களையும், பல்வேறு இணையதள சேவைகளையும் துவக்கி வைத்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச்சேர்ந்தவிளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் உரிய பயிற்சி அளித்தல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் திறந்தவெளி விளையாட்டரங்கம், உள் விளையாட்டரங்கம், நீச்சல் குளம் மற்றும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சிறு விளையாட்டரங்கம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களை உருவாக்கும் குறிக்கோளுடனும் சர்வதேச அரங்கை அலங்கரிக்க விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளிப்பதே அகாடமியின் நோக்கமாக கொண்டு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் வளாகத்தில் ரூ. 17 கோடியே 47 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள மூன்றடுக்கு கட்டிடத்தில் சென்னை ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட்ட கட்டடம். அகாடமியின் தரைதளத்தில் பன்நோக்கு விளையாட்டுத் தளம், முதல் தளத்தில் டேக்வாண்டோ மற்றும் ஜுடோ விளையாட்டுத் தளம், இரண்டாவது தளத்தில் வாள்வீச்சு தளம் மற்றும் மூன்றாவது தளத்தில் விளையாட்டு அறிவியல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், மேல்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ. 5.33 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கட்டடம், மேலும் ரூ. 4.70 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் அமைக்கப்பட்ட கட்டடம், மேலும் ரூ.2.58 கோடி மதிப்பீட்டில் கெனோயிங் மற்றும் கயாக்கிங்கிற்கான முதன்மை நிலை பயிற்சி மையக் கட்டடம், விளையாட்டு வீரர்கள் சிறந்து விளங்குவதற்கு உதவும் வகையில் அதிநவீன வசதிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டும் சிறந்த மையமாகஅமையப் பெற்றுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் உடற்பயிற்சிச் கூடம், ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான குளியலறைகள், கழிவறைகள், இருப்பு அறைகள் மற்றும் பார்வையாளர் மாடம் ஆகிய வசதிகளுடன் கூடிய மாவட்ட விளையாட்டரங்கம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டடம் மேலும் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்கள் மலை மேலிட பயிற்சி மேற்கொள்ளும் போது, இதய செயல்பாடு, தசை செயல்திறன் மற்றும் ஆரோக்கிய மேம்பாடு, உடற்வலிமை மற்றும் நீடித்து உழைக்கும் திறன் கிடைத்திடும் வகையில் உலக தரம் வாய்ந்த வசதிகளும் அதற்கான உபகரணங்கள் கூடிய மலை மேலிடப் பயிற்சி மையம் முதல் தளத்திலும் அலுவலக அறை, கணிணி அறை, உடற்பயிற்சி அறை, மருத்துவர் அறை, மாணவர்கள் தங்கும் அறை, சமையல் அறை, உணவருந்தும் கூடம் ஆகியவை தரைத்தளத்திலும் அமைக்கப்பட்ட ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டடத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மறுசீரமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட *www.sdat.tn.gov.in* என்ற இணையதளத்தையும், இணையதள சேவைகளான விளையாட்டரங்க பதிவு (*Stadia Booking*), உறுப்பினர் பதிவு (*Membership Booking*), உரிமம் பெற்ற வளாக நிர்வாக அமைப்பு (*Licensed Premises Management System*), உயரிய ஊக்கத்தொகை இணைய வழி விண்ணப்பம் (*Online High Cash Incentive Application*) மற்றும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் சான்றிதழ்களை *Digilocker* இணையதளம் வாயிலாக பெறுதல் ஆகிய சேவைகளை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கடந்த பிப்ரவரி மாதம் 9 முதல் 19 வயதுக்குட்பட்ட 14 ஆட்டிசம் வீரர்கள் கடலூர் சில்வர் கடற்கரையில் இருந்து சென்னை மெரினாக் கடற்கரை வரையிலான 165 கிலோ மீட்டர் தூரத்தை 4 நாட்களில் நீந்திச் சாதனை படைத்த வீரர்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து சிறப்புப் பரிசினை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20.2.2024 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக சட்டத்துறை அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் - தலைமைக் கழக - வழக்கறிஞர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா, நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.2.2024

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் அவளூர் ஊராட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்கக் கூட்டம் ஒன்றிய செயலாளர் க.குமணன் தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் நெல்லிக்குப்பம் எஸ்.புகழேந்தி சிறப்புரையாற்றினார் உடன் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., ஒன்றிய நிர்வாகிகள் தா.த.கன்னியப்பன், டி.எல்.தயாளன், ந.வீரராகவன், முனியம்மாள், ராஜகோபால், கோ.கமலக்கண்ணன், ஏ.கே.பரசுராமன், தட்சிணாமூர்த்தி, வே.திருநாவுக்கரசு, இ.அசோகன், ஒன்றிய குழு உறுப்பினர் சங்கரி குமார், ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினரும் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய செயலாளருமான பி.ஜெ.மூர்த்தி ஸ்ரீலதாமூர்த்தி இல்லத் திருமணம் விழா நடைபெற்றது. இதில் கழகப் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞர் அணி செயலாளர்– அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர் உடன் அமைச்சர்கள் ஆர்.காந்தி, பி.மூர்த்தி, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, எஸ்.ஜெகத்ரட்சகன், மாவட்ட செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, நே.சிற்றரசு, ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ, ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ கலாநிதிவீராசாமி எம்.பி, இரா.கிரிராஜான் எம்பி, சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, விஜி.இராஜேந்திரன், எம்.கே.மோகன், காரம்பாக்கம் கணபதி ஜோசப்சாமுவேல் , ஐ பரந்தாமன் , தாயகம்கவி, கருணாநிதி மற்றும் பிரபு கஜேந்திரன், இ.ஏ.பி.சிவாஜி, ப.ரங்கநாதன், திருத்தணி எம்.பூபதி, சி.எச்.சேகர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ், உள்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (19.02.2024) இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் வடலூரில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மைய கட்டுமானப் பணிகள் மற்றும் வசதிகள் குறித்தும், மகா சிவராத்திரி பெருவிழா தொடர்பாகவும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வடசென்னை மத்திய சென்னையை இணைக்கும்

# யானைக்கவுனி மேம்பாலப் பணியினை விரைவில் முடிக்க வேண்டும்!

### தெற்கு ரயில்வே அதிகாரிகளிடம் தயாநிதிமாறன் எம்.பி. நேரில் வலியுறுத்தல்

*சென்னை,பிப்.20:*

வடசென்னை மத்திய சென்னையை இணைக்கும் யானைகவுனி மேம்பால பணியை விரைவில் முடிக்க வேண்டுமென தெற்கு ரயில்வே அதிகாரிகளிடம் தயாநிதிமாறன் எம்பி நேரில் வலியுறுத்தியுள்ளார்.

தெற்கு ரயில்வேயின் சென்னை ரயில்வே கோட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தெற்கு ரயில்வே பொது மேலாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் தயாநிதி மாறன் எம்பி பேசியதாவது:



யானைக்கவுனி பாலமானது வடசென்னை மற்றும் மத்திய சென்னைப் பகுதிகளை இணைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த 2019 முதல் தெற்கு ரயில்வே பொது மேலாளரிடம் பல்வேறு முறை வலியுறுத்தியும் இந்தப் பாலத்தின் சீரமைப்புப் பணி மந்த நிலையிலேயே நடைபெற்று வருவதால் இப்பகுதி குடியிருப்புவாசிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்தை அனுபவிப்பதோடு அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது. முன்னாள் முதல்வர் கலைஞர் நினைவாகவும், அவருக்கு மரியாதை செலுத்திடும் வகையிலும் எழும்பூர் ரயில் நிலையத்திற்கு அவரது பெயரை சூட்ட வேண்டும்.

வில்லிவாக்கம் பழைய ரயில்வே சாலையை மறுசீரமைக்கும் நடைமுறைகளை விரைவுபடுத்த தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு கடிதம் எழுதியிருந்தேன். இந்த பணியை மேற்கொள்ள முன்வந்த சென்னை மாநகராட்சிக்கு தடையில்லா சான்று வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் பொது மேலாளரிடம் வழங்கியிருந்தேன். ஆனால் இன்றுவரை தடையில்லா சான்று வழங்கப்படாததால் அந்தச் சாலை சீரமைப்பு பணிகள் கிடப்பில் உள்ளது.

சென்னை சென்ட்ரல், எழும்பூர் மற்றும் அனைத்து பறக்கும் ரயில், புறநகர் ரயில் நிலையங்களிலும் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளி பயணிகளுக்கு போதுமான அளவு பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக முதியவர்கள் அதிகமாக பயன்படுத்தும் மாம்பலம், சேத்துப்பட்டு, கடற்கரை, பார்க் டவுன் மற்றும் சூளைமேடு புறநகர் ரயில் நிலையங்களில் பேட்டரி வாகனங்கள், எஸ்குலேட்டர்கள் இன்றியமையாதவை. எழும்பூர் ரயில் நிலையத்திற்கு அடுக்கு மாடி வசதி கொண்ட பல் நோக்கு கார் பார்க்கிங் அமைக்க வேண்டும்.

சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களில் குறுகிய நேர காத்திருக்கும் அறை மற்றும் பொருட்கள் பாதுகாக்கும் அறைகள் மேம்படுத்தப்பட்டு, தேவையான ஏற்பாடுகளை செய்திட வேண்டும். டிஜிட்டல் அறிவிப்புப் பலகைகளை சுற்றுலாவை மேம்படுத்தவும், விழிப்புணர்வை அதிகரிப்பதற்காகவும் பொதுத் தகவல்களைக் காண்பிக்கவும் காட்சிப் படுத்தலாம். மூடப்பட்ட அண்ணாநகர் ரயில் நிலையத்தை மீண்டும் இயக்கக் கோரி அப்பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.அது திறக்கப்பட்டால், இப்பகுதி மக்களின் சிரமம் குறையும். எனவே அண்ணாநகர் ரயில் நிலையத்தை மீண்டும் இயக்க வேண்டும்.

பறக்கும் ரயில் நிலையங்களில் சமூக விரோத செயல்களை தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன், பெண் பாதுகாப்புப் பணியாளர்களின் இருப்பை அதிகரிக்கவும், பெண்களுக்கான பெட்டிகளில் சிறந்த சுகாதார வசதிகளை வழங்குவது காலத்தின் தேவை. தானியங்கி கதவுகள், கை சுத்திகரிப்பான்கள் மற்றும் வெப்பத் திரையிடல் நுழைவாயில்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக ரயில் நிலையங்களை நவீனப்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ரயில்வே அதிகாரிகளுடன், ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒருமுறையாவது, அனைத்து ரயில் நிலையங்களிலும், புகார்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துகளுக்கு முறையான அமைப்பு உள்ளதா என்பதை உறுதிப்படுத்த, வழக்கமான ஆய்வுகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் எம்பிக்கள் கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, செல்வம், கிரிராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

**கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!**

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், 22-2-2024 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில், எனது தலைமையில், சென்னை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் துணைத் தலைவர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் செயலாளர்கள் மா.உமாபதி, அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம் துணைச் செயலாளர்கள் சி.வீராகணேசன், கவிஞர் நன்மாறன், எழில்மாறன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் பிறந்தநாள், நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 19.02.2024

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் அரண்வாயல் குப்பம் அருண்வாயல், புட்லூர் ஆகிய ஊராட்சிகளில் கழகத் தலைவர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக தொடக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் புதிய பள்ளி கட்டிடங்களில் திறந்து வைத்ததை தொடர்ந்து பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார் உடன் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க நிலை) மோகனா, ஆசிரியர் இரா.தாஸ், உள்பட கழக நிர்வாகிகள் ஆசிரியர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு உறுப்பினர்கள் கிளைக் கழக செயலாளர் பலர் கலந்து கொண்டனர்.

### ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் பரப்புரைக் கூட்டம்!

### ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

*திருவள்ளூர். பிப்.20*

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் திருவள்ளூர் அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் உள்ள ஆர்.எம்.கே கெஸ்ட் ஹௌசில் நடைபெற்றது திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமை வகித்தார் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபால், காயத்ரி ஸ்ரீதரன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல் வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்புரையற்றினார் இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையற்றினார் .

அப்போது அவர் பேசியதாவது:

மார்ச் 1ஆம் தேதி அன்று கழக தலைவர் தமிழ்நாட்டில் நிரந்தர முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் ஆகிய பகுதிகளில் உள்ள கிளை கழகங்களில் கழக கொடியேற்றி ஏழை எளிய பொது மக்களுக்கு மற்றும் பார்வையற்றவர்களுக்கு மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு முதியோர் இல்லத்திற்கு உள்ள முதியோர்களுக்கு ஆதரவற்றவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் அறுசுவை உணவு மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்து கொண்டாட வேண்டும்

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கடந்த 10 ஆண்டுகளாக ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டுக்கு இருந்த அநீதிகளையும் ஒன்றிய அரசிலும் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்போது நாடகமாடும் அடிமை அதிமுகவின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வகையில் உரிமைகளில் மீட்க ஸ்டாலின் குரல் என்ற தலைப்பில் நாடாளுமன்ற தொகுதி வாரியாக தேர்தல் பரப்புரை கூட்டங்களை நடத்திட வேண்டும் என்று உயிரினும் மேலான கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்க திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி சார்பாக உரிமைகளை மீட்கும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் 18 ஆம் தேதி மாலை 5 மணி அளவில் திருவள்ளூர் மருத்துவ கல்லூரி அருகில் மாபெரும் தேர்தல் பரப்புரை கூட்டம் நடைபெறுகிறது எழுச்சியுடன் நடைபெறும பொதுக்கூட்டத்தில் கழக பொதுச்செயலாளர் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார் இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட முழுவதிலும் இருந்து மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் கழகத் தோழர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்று சிறப்பித்துமாறு கேட்டுக் கொள்கிறேன் இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த கழகத் தோழர்கள் அலைகடலென திரண்டு வந்து வரலாற்று சாதனை படைக்க வேண்டும் என்று அனைவரையும் அழைக்கிறேன் என தெரிவித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தின்படி 2024 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்ற தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழகத் துணை பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற கழகத் துறை தலைவர் கனிமொழி கருணாநிதி எம்பி தலைமையில் கழக தேர்தல் குழுவினர் பிப்ரவரி 27ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு தரப்பினை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர் அது சமயம் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தை சேர்ந்த தொழில்துறையினர் வியாபாரிகள் கல்வியாளர்கள் விவசாயிகள் சிறு குரு தொழில் முனைவோர்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மாணவர் சங்கங்கள் ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சி ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள் தொண்டு நிறுவனங்கள் அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள் வழக்கறிஞர் சங்கத்தினர்கள் பொது மக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை மனுக்களாக வழங்கிட ஏதுவாக மேற்கண்ட அனைவருக்கும் தகவல் தெரிவித்து அவர்களை அழைத்து வர உரிய ஏற்பாடுகளை அந்தந்த மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் கழக செயலாளர்கள் செய்ய கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார் இக் கூட்டத்தில் சன்.பிரகாஷ், ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், டி.தேசிங்கு, என்.இ.கே.மூர்த்தி, பேபிசேகர், பொன்.விஜயன், ஜி.நாராயணபிரசாத், ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், தி.வை.இரவி, தங்கம் முரளி, ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், நகர மன்ற தலைவர்கள் உஷாராணி ரவி, உ.வடிவேல், துணை தலைவர்கள் பரமேஸ்வரி கந்தன், எம்.பார்க்கத்துல்லாகான், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஒ.ஆர்.நாகூர்கனி, வி.தியாகராஜன், ஏ.ஜெ.பவுல், சங்கீதா சீனிவாசன், வழக்கறிஞர் பெ.வினோத், கு.தமிழ்செல்வி, பொறியாளர் எம்.மோகன், டாக்டர் ராஜேஷ், ஆதிகேசவன், சண்முக, எஸ்.சௌந்தரராஜன், ஷாஜகான், குமரேசன், மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### பூவிருந்தவல்லி தொகுதியில்

# புதிய பள்ளிக் கட்டிடங்கள் திறப்பு விழா!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*திருவள்ளூர், பிப்.20*

திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகள் முழுமையாக நிறைவு பெற்ற நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதனையடுத்து பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட

செம்பரம்பாக்கம் , சென்னேரிகுப்பம், பூவிந்தமல்லி 2 வது வார்டு, அரண்வாயல் குப்பத்தில், அரண்வயல், புட்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளியில் தலா 28 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை சேர்ந்த 6 பள்ளி கட்டிடங்களை நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முழுமையாக பூர்த்தியடைந்ததையடுத்து தமிழ்நாடு முதல்வர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதனையடுத்து செம்பரம்பாக்கம் , சென்னேரிகுப்பம், அரண்வாயல்குப்பம், அரண்வாயல், புட்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை பூந்தமல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி நேரில் புதிய கட்டிடங்களை நேரில் பார்வையிட்டு பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்கு இனிப்புகளை வழங்கினார்

அப்போது பேசும்போது, அரசு பள்ளிகள் வறுமையின் அடையாளமாக இல்லாமல் பெருமையின் அடையாளமாக மாறி வருகிறது. தற்போது அரசு பள்ளிகளிலும் ஸ்மார்ட் கிளாஸ் தொடங்கப்பட்டதால் தனியார் பள்ளிகளில் சேர்வதை விட அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்து வருவதாக தெரிவித்தார். மேலும், அனைத்து மாணவ மாணவிகளும் தரையில் அமர்ந்து படிக்காமல் மேஜை மீது அமர்ந்து படிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கல்வியின் வளர்ச்சிக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பாக செயலாற்றி வருவதாக பெருமிதம் தெரிவித்தார். இதில் சிறப்பாக பேசிய மாணவிக்கு பரிசு வழங்கி எம் எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய நகர செயலாளர்கள் ஆர்.ஜெயசீலன், ஜி.ஆர்.திருமலை, ப.ச.கமலேஷ், ஒன்றிய குழு தலைவர் ஜெயக்குமார் பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், விமல்வர்ஷன், நகர்மன்ற துணைத் தலைவர் ஸ்ரீதர், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன் வி.குமார், மாவட்ட கவுன்சிலர் ஏ.ஜி.ரவி, வட்டார வளர்ச்சி அலுவர் குணசேகரன், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க நிலை) மோகனா, வட்டார கல்வி அலுவலர் வீரராகவன், ஆசிரியர் இரா.தாஸ், ஒன்றிய கவுன்சிலர்கள் பிரியா செல்வம், நவமணிஅன்பழகன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சாந்தி வின்சன்ட் காவேரி அன்பழகன், பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஜனார்த்தன், புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், ராஜாமணி, சாரங்கன், முரளி, ராமச்சந்திரன், ஞானமூர்த்தி, ராதாகிருஷ்ணன், சிவபாலன், விக்னேஷ் ஸ்டீபன் ஸ்ரீதர், திருவள்ளூர் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் டி எம் ராமச்சந்திரன், டி.கே. சீனிவாசன், தரணி, எஸ்.சௌந்தரராஜன், அப்பன் ராஜ் , மேகநாதன், லாசர், விஜய ஆனந்த், அபினாஷ், அருண் கீதான், முருகேசன், ஆறுமுகம், சங்கர், வெங்கடேசன், சம்பத், ஜெய்சங்கர், ஜனா, பாபு, பிரேம், தினேஷ், ஜீவீ தாஸ், மகிமை தாஸ், மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (19.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் செ.பீட்டர் அந்தோணிசாமி, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம், தமிழ் மாநில அரசுப் பணியாளர் சங்கம், தமிழ்நாடு அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம், தமிழ்நாடு மாநில மாநகராட்சி அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு தேசிய ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் சங்கம், தமிழக பள்ளிக்கல்வி ஆசிரியர் கூட்டணி மற்றும் அனைத்திந்திய ஆசிரியர் பேரவை நிர்வாகிகள் சந்தித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (19.2.2024) முகாம் அலுவலகத்தில், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா, தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூற்றுப்படி

# நில ஆர்ஜிதம் செய்யப்படாத இடத்திலா, பிரதமர் மோடி எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட அடிக்கல் நாட்டினார்?

## பா.ஜ.க. ஆட்சியின் முகத்திரையைக் கிழித்து, கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேள்வி!

**கள்ளக்குறிச்சி, பிப். 20 –**

**தலைமைக் கழக அறிவிப்பின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் – சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் (17–02–2024) அன்று கள்ளக்குறிச்சியில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” எனும் தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூற்றுப்படி, நிலஆர்ஜிதம் செய்யப்படாத இடத்திலா? ஒன்றிய அரசின் பிரதமர் மோடி எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்ட அடிக்கல் நாட்டினார்? என்று பி.ஜே.பி. ஆட்சியின் முகத்திரையைக் கிழித்து, கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேள்வி எழுப்பி உரையாற்றினார்.

தலைமைக் கழகத்தின் சார்பில் தமிழகத்தின் முதல்வர் அவர்கள் நேற்றைக்கும் - இன்றைக்கும் - நாளைக்கும் தமிழ்நாட்டின் 39 பாராளுமன்ற தொகுதிகளில் இதுபோன்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களை நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். மாவட்டக் கழகத்தின் செயலாளர்கள் இனிய சகோதரர் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் இனிய அண்ணன் சிவலிங்கம் ஆகியோர் மிகச் சிறப்பாக இந்த மாநாட்டிற்கு நிகரான பொதுக்கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தை பொருத்தவரை, நமக்கு பாராளுமன்ற தொகுதியின் ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டம். இதுவே மற்ற அரசியல் இயக்கங்களுக்கு மாநில மாநாடு - தேசிய மாநாடு. அந்த அளவிற்கு எழுச்சியோடு இந்தக் கூட்டம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தினந்தோறும் எங்களுக்கு 7, 8 நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தாலும், பல்வேறு வகைகளிலான அரசு நிகழ்ச்சிகள், இயக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சிறப்புமிக்க வாய்ப்பு கிடைத்தாலும், கள்ளக்குறிச்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நல்ல நிகழ்ச்சியில் பங்கேற்பது என்பது என் வாழ்நாளில் எனக்கு கிடைத்த அரும் பெரும் வாய்ப்பு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இது பாராளுமன்ற தொகுதியின் செயல்வீரர்கள் கூட்டம் அல்ல, இது பொதுக்கூட்டம். செயல்வீரல்கள் நிரம்பி இருந்தாலும், இந்த மாபெரும் பொதுக்கூட்டம் என்பது இன்றைக்கு ஒரு வரலாற்று சிறப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், எந்த நோக்கத்திற்காக இந்த கூட்டத்தை நடத்த சொன்னாரோ - அந்த நோக்கத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றுகிற வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்வை பொருத்தவரை, கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த தாய்மார்களும், பெரியோர்களும், செயல் வீரர்களும் ஏராளமாய் நிரம்ப வந்து இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கு முன்னால் பேசிய உதயசூரியன் அவர்கள் சொன்னதைப்போல, இந்த நிகழ்ச்சி இதற்கு முன்னால் எல்லாம் தி.மு.கழகத்தின் பொதுக்கூட்டமாக இருந்தாலும் சரி அல்லது வேறு அரசியல் இயக்கங்களின் பொதுக்கூட்டமாக இருந்தாலும் இரவு 10 மணி வரை காவல்துறை அனுமதிப்பார்கள். எனவே, காவல்துறை அனுமதிக்கிற அந்த நேரம் வரை பொதுக்கூட்டம் நிச்சயம் நடைபெற்றே தீரும்.

ஆனால், நம்முடைய கழகத் தலைவர் அவர்கள், இன்றைக்கு அந்த பொதுக்கூட்டத்தின் தன்மையையே மாற்றி அமைக்கும் வகையில் எட்டு மணிக்கெல்லாம் பொதுக்கூட்டங்களை நிறைவு செய்து கழகத் தோழர்களையும், பொது மக்களையும் அவரவர் இல்லங்களுக்கு செல்ல வழிவிடுங்கள் என்று சொல்லும் வகையில் இன்றைக்கு இந்த கூட்டங்களை 6 மணிக்கு தொடங்கி, 8 மணிக்கு முடிக்கச்சொல்லி இருக்கிறார்கள். அந்த வகையில்தான், இந்த கூட்டம் நிறைவுப் பகுதியினை எட்டியிருக்கிறது. கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதியைப் பொறுத்தவரை, எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள். கடந்த தேர்தலின்போது பொன். கவுதம சிகாமணி எவ்வளவு வாக்குகள் வித்தியாசத்தில் இங்கே வெற்றி பெற்றார் என்கிற தகவலை சொன்னார்கள். 81 வாக்குகள், 4 லட்சத்திற்கு குறைவு. 3,99,919 வாக்குகள் இங்கே கூடுதலாக பெற்று வெற்றி பெற்றார். அவர் மட்டும் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறவில்லை. 2019-இல் நடைபெற்ற தேர்தலைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2 தொகுதிகளில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் 2 பேர் வெற்றி பெற்றார்கள். டி.ஆர்.பாலு திருப்பெரும்புதூர் தொகுதியில் 5,07,000-ற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியினை பெற்றார். அதேபோல், நம்முடைய திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் 5,18,000 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.கழகம் வெற்றி பெற்றது.

1977ஆம் ஆண்டு ராம்விலாஸ் பஸ்வான் என்பவர் பீகாரில் இருக்கிற ஹாஜ்பூர் என்ற இடத்தில் 4,24,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றார்கள். ராம்விலாஸ் பஸ்வான் இந்தியாவில் இருக்கிற மிகச்சிறந்த ஓர் பட்டியலினத் தலைவர். அவர் நான்கு லட்சத்து 24 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது ஓர் கின்னஸ் சாதனையாக, உலக சாதனைகளில் ஒன்றாக அன்றைக்கு அது இடம் பெற்றது. அதற்குப் பிறகு 1991ஆம் ஆண்டு ஆந்திராவில் இருக்கிற நந்தியால் தொகுதியில் பெருமதிப்பிற்குரிய நரசிம்மராவ் அவர்கள் ஐந்து லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்கள். இந்த இரண்டு சாதனைகளும் இந்திய அளவில் அன்றைக்குப் பாராட்டுக்களைப் பெற்றது.

ஆனால் 2019ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்ற அந்தத் தேர்தலில் திருப்பெரும்புதூரிலும், திண்டுக்கல்லிலும் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றோம். 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் சென்னை வடக்கு, திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகிய நான்குத் தொகுதிகளைப் பெற்றிருந்தோம்.

### 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு கிடைத்த வெற்றி!

2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.விற்கு கிடைத்த வெற்றி, இதுவரை அரசியல் வரலாற்றில், இந்தியா விடுதலைப் பெற்றப் பிறகு எந்தத் தேர்தலிலும் கிடைத்திராத, அதிகப்பட்ச வாக்குகள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றி என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள். 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் 8 தொகுதிகள், 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 9 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசம் 11 தொகுதிகள், ஒரு லட்சத்திற்கும் கீழான வாக்குகள் வித்தியாசம் 5 தொகுதிகள், இப்படி 39 தொகுதிகளிலும், ஒரு தொகுதியைத் தவிர மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றது. இந்த மாதிரியான வெற்றி இதற்கு முன்னால் எப்போதும் நாம் பெற்றதில்லை. இந்த வெற்றி என்பது தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களுக்குக் கிடைத்த வெற்றி.

அந்த தேர்தலுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்த இயக்கத்திற்கு எந்த அளவிற்கு கழக சாதனைகள், இன்றைக்கு இந்த அரசின் சாதனைகளை எந்த அளவுக்கு நிகழ்த்தப் பட்டிருக்கிறது. ‘பாசிசத்தை வீழ்த்துவதற்கு இந்தியாவை வெல்வதற்குரிய’ சூழலை ஏற்படுத்துவதற்கு நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் எந்த அளவிற்கு குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

அந்த நிலைகளை கடந்து வருகிற தேர்தல் வருகிறபோது, இன்றைக்கு மக்களிடையே ஏற்பட்டிருக்கும் எழுச்சி, தமிழ்நாடு முழுவதிலும் பொதுமக்களிடத்தில் காணப்படும் ஒரு மிகப்பெரிய மாற்றம், நிச்சயம் தெரிவித்துக் கொள்கிறேன் 40-க்கு 40 என்பது மட்டுமல்ல, 40 தொகுதிகளிலும் தி.மு. கழகத்தை எதிர்த்து நின்ற அத்தனை பேருமே டெபாசிட் இழந்தார்கள் என்கிற ஒரு நிலை, இந்த தேர்த லில் வரத்தான் போகிறது. இதில் மாற்றமில்லை. கள்ளக்குறிச்சியைப் பொறுத்தவரை, இந்த தொகுதிக்கு பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க அடையாளங்கள் இருக்கிறது. நான் இந்த தொகுதியில் பேச வேண்டும் என்று தலைமைக் கழகம் பணித்ததற்குப் பிறகு, இந்த தொகுதி சம்பந்தமான விஷயங்களை எடுத்துப் பார்த்தேன்.

இந்த தொகுதியில்தான் ஏற்காடு மலை இருக்கிறது. இந்த தொகுதியில்தான் கல்வராயன் மலை இருக்கிறது. ஏற்காடும், கல்வராயன் மலையும் இயற்கை ஆர்வலர்கள் அதிகம் நேசிக்கும் மலைப்பகுதிகள். அதற்கு என்ன காரணம்? ஏற்காட்டைப் பொறுத்தவரை, காப்பி தோட்டங்களும், ஆரஞ்சு பழ தோட்டங்களும் ஏற்காட்டுக்கு இன்றைக்கு புகழ் சேர்க்கும் மலைகளாகும். ‘மலைகளின் அரசன்’ சேர்வராயன் என்று சொல்வார்கள். ‘ஏழைகளின் ஊட்டி’ ஏற்காடு என்று சொல்வார்கள். அத்தகைய ஏற்காடு இந்த கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதியில் இருக்கிறது.

அதையும் கடந்து, நம்முடைய கல்வராயன் மலையில் மருத்துவ குணம் கொண்ட கடுக்காய் விளைகிற ஒரு மிகச்சிறந்த பகுதி, நம்முடைய கல்வராயன் மலைப்பகுதி. கடுக்காய் பற்றி இயற்கை ஆர்வலர்கள், சித்த வைத்தியர்கள், ஏன் சித்தர்கள் எல்லாம்கூட சொல்வார்கள். என்ன சொல்வார்கள் என்றால், காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய், மண்டலம் வந்தால் - மண்டலம் என்றால் உங்களுக்கு தெரியும் - 48 நாட்கள். காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் - மண்டலம் உண்டால் கோலை ஊன்றி நடக்கும் கிழவனும், கோழை வீசி உலாவி நடப்பான் என்று சித்தர்கள் பாடி இருக்கிறார்கள். அத்தகைய கடுக்காய் விளையும் பூமி கல்வராயன் மலை. அதையும் கடந்து ஈனாத மாட்டுக்கு 1 கடுக்காய். இளம்பிள்ளை தாய்ச்சிக்கு 7 கடுக்காய் என்று சொல்வார்கள். அத்தகைய மருத்துவ குணம் கொண்ட கடுக்காய் விளைகிற மலை, இந்த கல்வராயன் மலை.

இன்னொரு சிறப்பு இந்த பாராளுமன்ற தொகுதிக்குள்தான் கெங்கவள்ளியும் இருக்கிறது. இந்த கங்கவள்ளியில்தான் விளைகிற மரவள்ளி கிழங்கின் மூலம் வருகிற ஜவ்வரிசிதான் இந்தியா முழுமைக்குமான ஒரு மிகப்பெரிய உணவு ஆதாரமாக இருக்கிறது. எனவே, இந்த



பாராளுமன்ற தொகுதியைப் பொறுத்தவரை, அது ஏற்காடாக இருந்தாலும், கங்கவள்ளியாக இருந்தாலும், கல்வராயன் மலையாக இருந்தாலும் இந்த தொகுதிகளுக்கு பல்வேறு சிறப்புகள் உண்டு என்பதை நாம் நன்றாகவே அறிவோம்.

அத்தகைய தொகுதியில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த எழுச்சி மிகுந்த நிகழ்ச்சி என்பது மிகப்பெரிய அளவிலான பாராட்டுக்குரிய ஒன்று. இந்த தொகுதியில் ஏராளமான பணிகள் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் காலத்திலும் சரி, வணக்கத்திற்குரிய தமிழ்நாட்டின் இன்றைய் முதல்வர் அவர்கள் காலத்திலும் சரி நடைபெற்றிருப்பதை இங்கே பட்டியல் போட்டு காட்டினார்கள்.

### கள்ளக்குறிச்சியில் மருத்துவமனை திறப்பு!

கடந்த ஆண்டு இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் பாராட்டுதலுக்குரிய அமைச்சர் எ.வ. வேலு அவர்களின் மூலம் இந்த கள்ளக்குறிச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 700 படுக்கை வசதிகளுடன் அந்த மருத்துவமனை அன்றைக்கு திறந்து வைக்கப்பட்டது. இப்போது தினந்தோறும் 2,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பொது நோயாளிகளாக அந்த மருத்துவமனையை இன்றைக்குப் பயன்படுத்திக் கொண் டிருக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் கவுதம சிகாமணி, பாராளுமன்றத்திற்கு சென்ற நேரத்தில் அவர் வைத்த கோரிக்கைகளில் ஒன்று, கள்ளக்குறிச்சிக்கு ஒரு மருத்துவ கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை. அந்த கோரிக்கை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஏற்கனவே ‘மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி’ என்ற அந்த விதியின்படி, அந்த கல்லூரி இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு நம்முடைய முதல்வர் அவர்கள் முன்னிலையில் 2022-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12-ஆம் தேதி அந்த கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. இப்படிப்பட்ட மிகப்பெரிய பிரம்மாண்டமான மருத்துவமனை இந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இன்றைக்கு மோடி அரசு எத்தகைய அரசு என்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த கூட்டத்தொடரில் பேசியதை பார்த்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

2016-ஆம் ஆண்டு கார்ப்பரேட்டுகளின் மூலம் வந்த வரி வருவாய் கார்ப்பரேட்டுகளுக்கான அரசாங்கமாக பா.ஜ.க. அரசு இருந்து கொண்டிருக்கிறது. கார்ப்பரேட்டுகளின் மூலம் 2016-ஆம் ஆண்டு இந்தியாவின் வரி வருவாய் என்பது 33 சதவிகிதமாக இருந்தது. அது தற்போது எவ்வளவு சதவிகிதமாக இருக்கிறது என்றால், மோடி அரசின் பத்தாண்டுகால சாதனைகளின் ஒன்று, தற்போது அந்த வரி வருவாய் 22 சதவிகிதமாக இருக்கிறது. குறைந்திருப்பது 11 சதவிகிதம் தானே என்று நீங்கள் நினைக்க லாம். ஆனால் 1 சதவிகிதத்திற்கு எவ்வளவு ரூபாய் குறைகிறது என்றால், 50,000 கோடி. 11 சதவிகிதத்திற்கு 5,50,000 கோடி 1 ஆண்டுக்கு. 10 ஆண்டுகள் மோடி ஆட்சியில் கார்ப்பரேட்டுகளுக்கு சலுகையாக வழங்கப்பட்டிருக்கும் தொகை 55 லட்சம் கோடி. 55 லட்சம் கோடி கார்ப்பரேட்களுக்கு வரிகளின் மூலம் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த சலுகை வீழ்ந்திருக்கிறது என்பதை இன்றைக்கு நாம் உணர்கிறோம்.

அத்தகைய ஆட்சிதான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், ‘கலைஞர் நூற்றாண்டு’ என்றவுடன் கிண்டியில் ஒரு மருத்துவமனை அமையும் என்று அறிவித்தார்கள். கிண்டி என்பது என்னை தேர்ந்தெடுத்த சைதாப்பேட்டையில் இருக்கிறது. அவ்வாறு நம்முடைய முதலமைச்சர் அறிவித்த, 1000 படுக்கைகளுடன், ரூ.230 கோடி ரூபாய் செலவில் ஒரு மருத்துவமனை அமையும். அந்த மருத்துவமனை கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையாக இருக்கும் என்றார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அதை அறிவித்தபோது சொன்னார், இதை கட்டுவதற்கு 24 மாதங்கள் ஆகும் என்றார். அதை கட்டியவர் யார் என்றால், இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு தலைமையிலான அந்த பொதுப்பணித் துறை அங்கே கட்டப்பட்ட அந்த மருத்துவமனையை 24 மாதகால அவகாசத்தில் கட்டி முடிக்கப்பட அந்த மருத்துவமனையை பதினைந்தே மாதங்களில் கட்டி முடித்து தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். அந்த 230 கோடி ரூபாய் மருத்துவ மனை, 110 கோடி ரூபாய் மருத்துவ மனை - ஆக மொத்தம் 440 கோடி ரூபாயில் கட்டப்பட்ட அந்த மருத்துவமனை கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டு, இன்றைக்கு ஆயிரக்கணக்கான பொது நோயாளிகளுக்கு தினந்தோறும் சிகிச்சை அளித்து வருகிறது. 12 மிக சிறப்பான முழுவதும் எக்குப் அறுவை சிகிச்சை அரங்கம், ஈரடுக்கு எண்டோஸ்கோப்பி, ஒரு சிறந்த தானியங்கு எம்.ஆர்.ஐ. இக்கருவிகளெல்லாம் இந்தியாவில் வேறு எந்த அரசு மருத்துவமனைகளிலும் இல்லாத உபகரணங்கள், அந்த மருத்துவமனையில் இருக்கிறது.

இதை ஏன் கள்ளக்குறிச்சியில் சொல்கிறேன் என்றால், கிண்டியில் திறந்திருக்கும் மருத்துவமனையை, கள்ளக்குறிச்சியில் சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? கள்ளக்குறிச்சியில் இருக்கிறவர்கள் அங்கு சிகிச்சைக்காக வாருங்கள் என்று சொல்லும் நோக்கம் அல்ல. ஆனால், ஒன்றிய அரசு 2018-ஆம் ஆண்டு மதுரையில் ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையை திறப்போம் என்றார்கள். எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை 2018-இல் திட்டமிட்டார்கள். 2019 ஜனவரி 27-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடியே தமிழ்நாட்டிற்கு வந்து மதுரையில் அடிக்கல் நாட்டினார். அவ்வாறு நாட்டிவிட்டு சென்றவர் இதுவரைக்கும் ஒன்றுமே செய்யவில்லை.

இளைஞர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அந்த அடிக்கல் நாட்டிய செங்கல்லை எடுத்துக்கொண்டு தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரத்தை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நாட்டப்பட்ட அடிக்கல் இதுதான். இந்த ஒரு செங்கல்தான் என்று ஊர் முழுவதும் காட்டி வந்தார். இன்றைக்கும்கூட அந்த ஒரு கல்லோடு அங்கு நிற்கிறது. அந்த மருத்துவமனை குறித்து, கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் 3-ஆம் தேதி பாராளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பி இருக்கிறார்கள், தமிழகத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள். ஏன் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதில் அரசு தாமதம் காட்டுகிறது என்று கேட்கிறார்கள்? இந்தியாவின் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் எழுந்து சொல்கிறார், ”இந்த மருத்துவமனைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் தமிழ்நாடு தாமதம் காட்டுகிறது. அதனால் மருத்துவ மனையை கட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது” என்றார். நான் உடனே அன்றைக்கு மாலையே பத்திரிகையாளர்களை அழைத்து, பத்திரிகையாளர்களிடத்தில் கேட்டேன், நிலம் ஆர்ஜிதம் செய்வதில் அரசு தாமதமாக இருக்கிறது. அதனால் மருத்துவ மனை கட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று நிதித்துறை அமைச்சர் சொல்கிறார். 2019 ஜனவரி திங்கள் 27-ஆம் தேதி ஒரு பிரதமர் வந்து அடிக்கல் நாட்டியது நில ஆர்ஜிதம் செய்யப்படாத, யார் வீட்டு நிலத்திலோ வந்து அடிக்கல் நாட்டிவிட்டு சென்றுவிடுவாரா?

ஒரு பிரதமர் வந்து இப்போது இந்த இடத்தில் கூட்டம் போடுகிறார் என்றால், வசந்த கார்த்திகேயனும் சொன்னார். ஏற்கனவே 2019-இல் தேர்தல் பிரச்சாரத்திற்கு இந்த இடத்தை நாங்கள் வாங்கி, கூட்டம் போடுவதற்கு அனுமதி வாங்கி நடத்தினோம் என்றார். இப்போது அதே இடத்தில் திரும்பவும் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வாங்கி நில உரிமையாளர்களிடத்தில் அனுமதியினை பெற்று இப்போது கூட்டம் நடத்துகிறோம் என்று சொன்னார். பக்கத்தில் இருக்கும் கட்டடம் எல்லாம்கூட அப்போது காலியாக இருந்தது. இப்போது அங்கு எல்லாம் கட்டடங்கள் வந்து விட்டது என்று சொன்னார்கள்.

எனவே ஒரு நிலத்தின் பயன்பாடு என்பது வேறு ஒருவருக்கு சொந்தமாக இருக்கிறபோது, ஒரு பிரதமர் வந்து அங்கு அடிக்கல் நாட்டுவிட்டு வந்துவிட முடியுமா? நில ஆர்ஜிதம் செய்யப்படாத ஒரு இடத்தில் பிரதமர் வந்து அடிக்கல் நாட்டினார் என்றால், பிரதமர் எவ்வளவு பெரிய தவறு இழைத்தவராக ஆகிவிடுகிறார். அல்லது பிரதமரை அங்கு அழைத்து வந்த எடப்பாடி பழனிசாமி ஒரு மிகப்பெரிய குற்றவாளியாக ஆகிறார்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கை கூறிய பொய்!

இதில் உண்மை என்னவென்றால், அன்றைக்கு அந்த இடத்தை பொறுத்தவரை 2022 ஏக்கர் நிலம் அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்து ஒன்றிய அரசுக்கு ஒப்படைக்கிறோம். அப்போது அந்த அடிக்கல் நாட்டிவிட்டு சென்றவுடன் ஒன்றிய அரசின் அதிகாரிகள் மதுரை ஆட்சியருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்கள். உங்கள் ஆவணங்களை எல்லாம் - நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட ஆவணங்களை எல்லாம் டெல்லிக்கு அனுப்புங்கள் என்றார்கள். உடனடியாக, 2020 நவம்பர் 3-ஆம் தேதி அந்த ஆவணங்கள் எல்லாம் டெல்லிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆனால், 2023-ஆம் ஆண்டு நிர்மலா சீதாராமன் பாராளுமன்றத்தில் சொல்லுகிறார், ”நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அதனால்தான் இந்த மருத்துவமனை கட்டுவதில் தாமதம்” என்று சொல்கிறார். நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நிலஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அதனால்தான் இந்த மருத்துவமனை கட்டுவதில் தாமதம் என்று. இந்தியாவின் மிக உயர்ந்த பொறுப்பில் இருக்கிற நிதியமைச்சர் இவ்வளவு பெரிய பொய்யை பாராளுமன்றத்தில் சொல்கிறார்கள். இந்த செய்தியை ஏன் இங்கு சொல்கிறேன் என்றால், ஒன்றிய அரசாங்கம் இணைத்து ஒரு மருத்துவமனையை ஐந்தாண்டுகள் ஆகியும் இன்னும் கட்டவில்லை. ஆனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதினைந்தே மாதங்களில் 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு பிரம்மாண்ட மருத்துவமனையை சென்னையில் ஏற்படுத்தினார். அது மட்டுமல்ல ரூ.220 கோடி செலவில் தென்னகம் பயன்பெறுகிற வகையில் மதுரையில் ஓர் மிகப் பெரிய நூலகம், 4 லட்சம் புத்தகங்கள் இடம் பெற்று பெருமை சேர்க்கும் வகையில் ‘கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்’ என்று பெயரிட்டு அதை திறந்துவைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல ‘ஏறுதழுவுதல் அரங்கம்’ என்று மிகச் சிறப்பாக கட்டப்பட்டு, அதை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள்.

அதேபோல் முதலமைச்சர் அவர்கள் முட்டுக்காட்டு பகுதியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் ‘கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு அரங்கம்’ என்று அமைத்திருக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவிருந்த போது, சென்னையில் ‘டைடல் பார்க்கை’ பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்களை வைத்து திறந்து வைத்தார்கள். அதற்கு பிறகு தகவல் தொழில்நுட்பம் தமிழ்நாட்டில் எந்தளவுக்கு வளர்ச்சி அடைந்தது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அதற்குப் பிறகு கோவையில் ‘டைடல் பார்க்’ வந்தாலும், இப்போது கள்ளக்குறிச்சிக்கு அருகில் விழுப்புரத்தில் ரூ.31 கோடி ரூபாய் செலவில், ஓர் மினி டைடல் பார்க் அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று அடிக்கல் நாட்டியுள்ளார்.

இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தியாவுக்கே வழிக்காட்டக்கூடிய ஓர் அரசை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றில்கூட இல்லாத வகையில் மாதந்தோறும் மகளிருக்கு ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 குடும்பங்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.

பதினைந்து நாட்களுக்கு முன்னால் தொகுதி வாரியாக கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் இயக்க முன்னணித் தலைவர்களையெல்லாம் அழைத்து தேர்தல் நேரத்தில் என்னென்னப் பணிகளையெல்லாம் ஆற்றிட வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அவர்களே சொன்னது, கலைஞர் உரிமைத் தொகை. உங்களது மாவட்டங்களில் இன்னமும் விடுபட்டு இருந்தால், தகுந்த ஆதாரங்களோடு விண்ணப்பித்தால், அந்தத் தொகை கிடைக்காதவர்களுக்கு பெற்றுத் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையில் சொன்ன அத்தனை விஷயங்களையும் முதலமைச்சர் அவர்கள் நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

### விடியல் பயணம் – மகளிர் இலவச பயணம்!

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், மகளிருக்கு இலவச பேருந்து பயணம் கொண்டு வருவதற்கு முன்பு பொதுப் போக்குவரத்து பயணம் என்பது 40 சதவிகிதம் இருந்தது. விடியல் பயணம் - மகளிருக்கு இலவச பயணம் என்று அறிவித்தபிறகு அது 65 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் இதுவரை ரூ.445 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதையும், அதற்காக ரூ.2,500 கோடி ரூபாயும் மானியம் வழங்கப்பட்டுள்ளதையும் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்கள்.

அதேபோல் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் மகத்தானத் திட்டங்களில் ஒன்று வரலாற்று பெருமைவாய்ந்த காலை உணவுத் திட்டம். சென்னை மாநகரத் தலைவராக இருந்த சர்.பிட்டி தியாகராயர் அவர்கள் ஏழை, எளிய குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வருகிற போது அவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டம்தான் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மதிய உணவுத்திட்டத்தை விரிவாக்கம் செய்தார்கள். அவருக்குப் பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் அத்திட்டத்தை சத்துணவுத் திட்டமாக தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய குழந்தைகளுக்கு மாற்றினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாரத்திற்கு 5 முட்டைகளும், முட்டைகள் சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப் பழத்துடன் கூடிய வகையில் சத்துணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்தார்கள். இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் உலகிலேயே இல்லாத அளவிற்கு காலை உணவுத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 16 லட்சம் மாணவர்கள் பயனடைகிற வகையில், 31,008 தொடக்கப் பள்ளிகளில் ஆண்டுக்கு ரூ.500 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்த நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்ததைப் போன்றே 13 லட்சத்து 12 ஆயிரம் குடும்பங்களுக்கு நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஒரு லட்சம் பேருக்கு கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இப்படி ஏராளமானத் திட்டங்களை செயல்படுத்திக்கொடிண்ருக்கிறார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் ‘புதுமைப்பெண் திட்டம்’, புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் 6ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று, இளங்கலைப் படிக்கும் அரசு மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை அது 3 ஆண்டுகளில் ரூ.36 ஆயிரமும், பொறியியல் பயிலும் மாணவிகளுக்கு 4 ஆண்டுகளில் 48 ஆயிரமும், மருத்துவம் படிக்கும் மாணவிகளுக்கு 5 ஆண்டுகளில் 60 ஆயிரமும், தொழிற்கல்வி படிப்பவர்களுக்கு 24 ஆயிரமும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 4,81,075 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகையும், படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ‘நான் முதல்வன் திட்டம்’ - இளைஞர்கள் திறன் பயிற்சி பெறுகிறத் திட்டம் தொடங்கும் போது இத்திட்டத்தின் மூலம் ஆண்டிற்கு 10 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள் என்று அரசு உயரதிகாரிகள் குறிப்பிட்டார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் 28 லட்சம் இளைஞர்கள் பயனடைந்திருப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்கள். தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, மக்களுடன் முதல்வர் திட்டத்தை பொதுமக்களிடமிருந்து அனைத்துத் துறைகளிலும் மனுக்களைப் பெற்று, அதற்கு தீர்வுகாணுகின்ற திட்டம். சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில் 3.50 லட்சம் மனுக்களுக்குத் இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீர்வுக் கண்டிருக்கிறார்கள்.

### மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்!

அதேப்போல் மருத்துவத்துறையில் 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம் சாமணப்பள்ளியில் மக்களைத் தேடி மருத்துவம் என்றதொரு மகத்தானத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து 1 கோடி பேரை இத்திட்டம் சென்றடைந்தால் மகிழ்ச்சி அடைவேன் என்று குறிப்பிட்டார்கள். முதலாவது பயனாளிக்கும் தொடங்கிவைத்து, 50 லட்சம் பயனாளிக்கும் மருந்துபெட்டகத்தை தந்தார்கள். 60 லட்சம் பயனாளி மதுரையில் இருக்கிற பயனாளிக்கும், 75 லட்சமாவது பயனாளி சேலம் அருகே இருக்கிற மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியில் ஒரு பயனாளிக்கும் மருந்துப் பெட்டகத்தை வழங்கினோம். திருச்சி அருகே சன்னாசிப்பட்டி 1 கோடியே ஓராவது பயனாளிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருந்துப்பெட்டகத்தை வழங்கினார்கள். கடைக்கோடி மனிதருக்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற வகையில் நீரிழிவு, இரத்த அழுத்தம், பிசியோ தெரபி, பாலியேட்டிவ் கேர், டயாலிசிஸ் போன்றவற்றிற்கு இதுவரை 1 கோடியே 72 ஆயிரத்து 332 நோயாளிகளுக்கு வீடுகளுக்கேத் தேடிச் சென்று கிசிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உலகிலேயே ஒரு மகத்தானத் திட்டமாகும்.

கியூபா போன்ற நாடுகள் மருத்துவத்தில் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தாலும், மக்கள் மருத்துவமனைக்குப் போனால்தான் சிறந்த மருத்துவம் கிடைக்கும். ஆனால் மருத்துவர்களே வீடுகளுக்குத் தேடி சென்று மருத்துவம் பார்ப்பது உலகிலேயே தமிழ்நாட்டில்தான். ‘இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48’ திட்டத்தை மேல்மருவத்தூரில் 2021ஆம் ஆண்டு டிச.18 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் எங்கே எல்லாம் அதிகமான விபத்துகள் நடக்கிற இடங்கள் என்று 500 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 500 இடங்களில் இருக்கிற 690 மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. விபத்துக்குள்ளான முதல் 24 மணி நேரத்தில் அரசின் சார்பில் ரூ.1 லட்சம் ரூபாய் இலவசமாக தந்து உயிரைக் காப்பது. இதன்மூலம் 2 லட்சத்து 20 ஆயிரத்து 302 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. இத்திட்டம் ஓராண்டு நிறைவில், அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ.191 கோடியே 63 லட்சத்து 14 ஆயிரத்து 113 தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

### கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவிருந்தபோது உலகிலேயே முன்மாதிரியான வருமுன் காப்போம் என்றத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க.வினர் வருமுன் காப்போம் திட்டத்திற்கு மூடுவிழா நடத்தினார்கள். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள வால்பாறை - வாழப்பாடியில் தான் அந்தத் திட்டத்தை ‘கலைஞரின் வருமுன் காப்போம்’ என்று தொடங்கி வைத்து ஆண்டிற்கு 1,250 மருத்துவ முகாம்கள் என்று செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒன்றியத்திற்கு 3 முகாம்களும், சென்னை நீங்கலாக, மாநகராட்சிக்கு 4 முகாம்களும், சென்னையைப் பொறுத்தவரை 15 முகாம்கள் நடத்தப்படுகிறது.

விவசாயப்பெருங்குடிமக்கள் இப்பகுதியில் வசிப்பதால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவிருந்தபோது இலவச மின்சாரம் வழங்கினார்கள். இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 லட்சத்து 65 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள். இந்த முதலமைச்சர் தான் இந்தியாவின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு, இந்தியாவின் பெருமைகளை மீட்பதற்கு, பாசிசத்தை வீழ்த்துவதற்கு, இந்தியா கூட்டணி வெற்றிபெறுவதற்கு இன்றைக்கு அயராது உழைத்துக்கொண்டிருக்கிறார். இந்தியா முழுவதும் ஸ்டாலினின் குரல் வெல்லட்டும். இந்த சிறப்பான மாநாட்டுக்கு நிகரான பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்த வசந்தம் கார்த்திகேயன், சிவலிங்கம் அவர்களுக்கும் மகிழ்ச்சி கலந்த பாராட்டுக்கள். நன்றி வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (19.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கு.செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் சட்ட மன்றக் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள எஸ். ராஜேஷ்குமார் ஆகியோர் சந்தித்தனர். அப்போது முதல்வர் அவர்கள் தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.2.2024) அவரது இல்லத்தில், மயிலாடுதுறை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கொக்கரக்கோ வை. சௌமியன், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் சௌ. சர்வோதயன் (எ) பாலாஜி, திருமதி சு. தாட்சாயிணி ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட கழகத்தினர் விருப்ப மனு!





நாடாளுமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் விநியோகம், சென்னை–அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழக அலுவலகத்தில் நேற்று தொடங்கியது. கழகத்தினர் விண்ணப்பப் படிவங்களுக்கு உரிய கட்டணத்தை தலைமைக் கழகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கழகத்தினருக்கு விண்ணப்பங்களை, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி வழங்கினார். தலைமைக் கழக மேலாளர் ஆர்.பத்மநாபன், தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.




ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க 5 வளாகத்தில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்காக சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் ரூ. 44 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களையும், பல்வேறு இணையதள சேவைகளையும் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘தமிழ்த் தாத்தா’

# உ.வே.சா.வின் தமிழ்த் தொண்டைப் போற்றி வணங்குகிறேன்!

### 170-வது பிறந்த நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வளைதளப் பதிவு!

சென்னை, பிப். 20 -

‘தமிழ்த்தாத்தா’ உ.வே.சா அவர்களின் 170ஆவது பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவில், நீடுபுகழ் உ.வே.சா. வின் தமிழ்த் தொண்டைப் போற்றி வணங்குகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வளைத் தளப் பதிவு வருமாறு:-



அழியக் கிடந்த பழந்தமிழ் இலக்கியங்களை எல்லாம் அச்சிலேற்றி, அழகிய நடையில் அவற்றுக்கு உரையும் எழுதி, தமிழுக்குத் தாம் தந்த பங்களிப்பினால் ‘தமிழ்த்தாத்தா’ என்று நிலைத்துவிட்ட நீடுபுகழ் உ.வே.சா அவர்களின் பிறந்தநாளில் அவரது தமிழ்த் தொண்டைப் போற்றி வணங்குகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## வடலூரில் அமைக்கப்படவுள்ள

# வள்ளலார் சர்வதேச மையத்தின் கட்டுமானப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது.

சென்னை, பிப். 20-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நேற்று (19-02-2024) இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் வடலூரில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மைய கட்டுமானப் பணிகள் மற்றும் வசதிகள் குறித்தும், மகா சிவராத்திரி பெருவிழா தொடர்பாகவும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

20212022 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பில், திருவருட்பிரகாச வள்ளலார் அவர்களின் புகழைப் போற்றும் வகையில் “வள்ளலார் சர்வதேச மையம்“ வடலூரில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனை நிறைவேற்றிடும் வகையில் கடலூர் மாவட்டம், வடலூர், திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் அரசு நிதியில் 99.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.02.2024 அன்று அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, நேற்று (19.02.2024) ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் வடலூரில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மைய கட்டுமானப் பணிகள் குறித்தும், அதில் அமையவுள்ள தியான மண்டபம், வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் அருங்காட்சியகம், பாடசாலைகள், வைத்திய சாலை, கலையரங்கம், நிர்வாக அலுவலகம், டிஜிட்டல் நூலகம், முதியோர் இல்லம், பக்தர்களுக்கான தங்குமிடங்கள், தர்மசாலையை புதுப்பித்து குளிர்பதனக் கிடங்கு மற்றும் சேமிப்பு அறையுடன் விரிவுபடுத்துதல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள், கழிவறைகள் மற்றும் குளியலறை வசதிகள், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

மேலும், வருகின்ற மார்ச் 8ந் தேதி மகா சிவராத்திரி பெருவிழாவினை மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீசுவரர் திருக்கோயில், திருநெல்வேலி, அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், பேரூர், அருள்மிகு பட்டீசுவரர் திருக்கோயில் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவானைக்காவல், அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் 7 திருக்கோயில்களில் ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாக கொண்டாடிட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் திரு.ஜெ. குமரகுருபரன், ஆணையர் திரு.க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் திரு.அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா. கவிதா, தலைமைப் பொறியாளர் திரு.பி.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இன்று மாலை மறைமலைநகரில் நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (20.02.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணியளவில் மறைமலைநகர், பொத்தேரியில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம். ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர் பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும், இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்தநாள் விழா சம்பந்தமாக, 23.02.2024அன்று முதல்வர் அவர்கள் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்திற்கு வருகை குறித்து, 24.02.2024அன்று நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்ட 2வது அலகினை திறந்து வைக்க முதல்வர் அவர்கள் வருகை சம்பந்தமாக

நாடாளுமன்ற தேர்தல் ஆக்கப் பணிகள் சம்பந்தமாக மற்றும் கழக வளர்ச்சி.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டங்கள் எழுச்சியுடன் நடந்தேறியுள்ளன!

# கடமை உணர்வோடு ஓய்வின்றி உழைப்போம்! ‘இந்தியா’ கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்!

### சமூக வலைதளப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, பிப்.20 -**

**தமிழ் நாடெங்கும் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளதையொட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், “நாடாளுமன்றத் தேர்தலில் கடமையுணர்வோடு ஓய்வின்றி உழைப்போம்! ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வோம்!” எனச் சூளு ரைத்துள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**“நாற்பதும் நமதே! நாடும் நமதே! என்பதை உறுதிசெய்யும் விதமாக மிக எழுச்சியோடு பிரமாண்டமாகத் தமிழ்நாடெங்கும் நடந்தேறியுள்ளன ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டங்கள்!**

**வெற்றிகரமாக இந்தக் கூட்டங்களை ஒருங்கிணைத்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் - கழக முன்னணியினர் என அனைவர்க்கும் பாராட்டுகள்! நன்றி!**

2024 நாடாளுமன்றத் தேர்தல் - வெற்றியை நோக்கிய நம் பயணத்தில் அடுத்த நூறு நாட்களும் மிக முக்கியமானவை. கடமையுணர்வோடு ஓய்வின்றி உழைப்போம்; ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வோம்!”

இவ்வாறு சமூக வலைதளப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## 109 அ வட்ட துணைச் செயலாளர்

# எ.விஜயகுமார் தந்தை ஆறுமுகம் படத்திறப்பு !

### நே.சிற்றரசு,நா.எழிலன் பங்கேற்பு!

சென்னை பிப்: 20 -

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 109அ வட்ட துணை செயலாளர் எ. விஜயகுமார் அவர்களின் தந்தை ப. ஆறுமுகம் அவர்களின் 16ம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று 20.02.2024 அன்னாரின் இல்லத்தில் மாலை 7:00 மணியளவில் 127, இன்பராஜபுரம், சூளைமேடு, அன்னாரின் படத்திற்கு மாவட்ட செயலாளர் நே சிற்றரசு, எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் மற்றும் கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் மற்றும் 109அ வட்ட கழக உடன்பிறப்புக்கள் அனைவரும் அன்னாரின் படத்திற்குக்கு மலர் தூவி மரியாதை செய்ய உள்ளனர்.



கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கதிர் ஆனந்த், வழக்கறிஞர் இரா.கிரிராஜன், கலாநிதி வீராசாமி, சிறுவேடல் க.செல்வம் ஆகியோர் நேற்று தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங்கை சந்தித்து ரயில்வே பணிகள் குறித்து கேட்டறிந்தனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி - கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் அற்புதமான திட்டத்தை

# வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

## விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திட்டத்தைத் தொடங்கி வைத்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!




**மதுரை, பிப். 20 -**

**முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' (Kalaignar Sports Kits) வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் பேசுகையில்,**

**"இந்த அற்புதமான திட்டத்தை வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில் துவக்கி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். டாக்டர் கலைஞர் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள 12 ஆயிரத்து 620 கிராம ஊராட்சிகளுக்கும் 86 கோடி ரூபாய் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு : -

ஒவ்வொரு ஊராட்சிக்கும் 33 வகையான விளையாட்டு உபகரணங்கள் வழங்க இருக்கின்றோம். கலைஞரின் நூற்றாண்டில் அவரின் பெயரிலேயே இந்தத் திட்டத்தைத் துவங்கி வைப்பதில் நாங்கள் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறை என்பது நகரம் முதல் கிராமம் வரை பறந்து விரிந்து இருக்கவேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகின்றோம்.

கிராமப்புற விளையாட்டுத் திறமையாளர்களைக் கண்டறியத்தான் `முதலமைச்சர் கோப்பை' விளையாட்டுப் போட்டிகளை, சென்ற வருடம் சிறப்பாக நடத்தி முடித்தோம். மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள், அதில் கலந்துகொண்டார்கள். ஏழை எளிய கிராமப்புற விளையாட்டு வீரர்களுக்கு உதவத்தான் `தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்' என்ற திட்டத்தைத் தொடங்கி, பல உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதன் தொடர்ச்சியாக, இந்த `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்'டை உங்களுக்கு வழங்குகின்றோம்.

படிப்படியாக தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் இந்தத் திட்டம் போய்ச் சேர இருக்கின்றது. இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் பெயர்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பெயரால் எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும், நம் விளையாட்டுத் துறையின் சார்பாக முதன்முறையாக அவரின் பெயரால் ஒரு விளையாட்டுத் துறை திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்பது அந்தத் துறையின் அமைச்சர் என்கின்ற முறையில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன்.

கலைஞர் அவர்களுக்கு அரசியல்வாதி, இலக்கியவாதி, பேச்சாளர், எழுத்தாளர் எனப் பல முகங்கள் உண்டு. ஆனால், விளையாட்டிற்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு ஏன் அவருடைய பெயரை இந்தத் திட்டத்திற்கு வைத்திருக்கிறீர்கள் என்று உங்களில் சில பேர் நினைக்கலாம். கலைஞர் அவர்கள் தன் சிறு வயதிலேயே களத்தில் இறங்கி, எல்லா விளை யாட்டுகளையும் விளையாடியவர். அதன் பிறகுதான் அரசியலுக்கு வந்து, ஆடுகளத்திற்குள் நுழையாமல் தவிர்த்து வந்தார்.

ஆனால், கலைஞர் அவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் ஒரு ஆர்வம்மிக்க ரசிகர். அது கிரிக்கெட் போட்டியாக இருந்தாலும் சரி, ஃபுட்பால் போட்டியாக இருந்தாலும் சரி, நெருக்கடியான நேரத்திற்கு இடையிலும் அந்தப் போட்டிகளை, தொலைக்காட்சிகளில் பார்த்து ரசிப்பார். ஆனால், அவற்றை எல்லாம் விட அவர் பெயரை இந்தத் திட்டத்திற்கு சூட்டிய காரணம் ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்கவேண்டிய அத்தனை குணங்களும் திறமைகளும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இருந்தன. அதுதான் அவருடைய சிறப்பு.

### விளையாட்டு வீரனுக்கான திறமைகள்

ஒரு விளையாட்டு வீரனுக்கு என்னென்ன திறமைகள் வேண்டும்? நல்ல புத்துணர்ச்சி வேண்டும், நல்ல கூர்மையான நினைவாற்றல் வேண்டும், தோல்வியிலும் துவண்டு விடாத மன திடம் வேண்டும் இதைவிட முக்கியம் நல்ல டீம் ஒர்க் வேண்டும்... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இந்தத் திறமைகள் அனைத்தும் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரிடம் இருந்தன. கலைஞரின் ஞாபக சக்திக்கு நினைவாற்றலுக்கு நிகரான எனர்ஜியை நாம் நினைத்துகூடப் பார்க்க முடியாது.

வசதிகள் எதுவும் இல்லாத அந்தக் காலத்திலேயே, தமிழ்நாடு முழுவதும் கிராமம் கிராமமாக சுற்றுப்பயணம் செய்து, கழகத்தை வளர்த்தவர்தான் டாக்டர் கலைஞர். ஒரே நேரத்தில் அரசியலிலும் சினிமாவிலும் இலக்கியத்திலும் கொடிகட்டி பறந்திருக்கிறார் என்றால், அவர் எவ்வளவு உழைத்திருக்க வேண்டும் என்று நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கலைஞர் அவர்களுக்குள்ள அந்த எனர்ஜி, ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் இருக்க வேண்டும். ஓயாமல் பயிற்சி எடுக்க வேண்டும். சோர்வு என்பதே கூடாது. கடுமையான முறையான பயிற்சிதான் ஒரு விளையாட்டு வீரனை வெற்றி வீரன் ஆக்கும்.

அடுத்து கலைஞரின் கூர்மையான மனம். கலைஞர் அவர்களுக்கு இருக்கின்ற `சார்ப் மைண்ட்' மிக ஆச்சரியமான ஒரு விஷயம். என்ன செய்யப் போகிறோம், அதற்குப் பதிலாக எதிரில் இருப்பவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள். அதற்கு என்ன பதில் சொல்லலாம் என்று முன்கூட்டியே யோசித்துச் செயல்படக் கூடியவர்.

ஒரு விளையாட்டு வீரனுக்கும் அந்தத் திறமை தேவை. நாம் இப்படி விளையாடினால், நம் எதிர் அணி எப்படி விளையாடுவார்கள் என்று கணிக்க வேண்டும். அப்படி அந்த சார்ப் மைண்ட் இருந்தால்தான் விளையாடுகின்ற போட்டிகளில் வெற்றியைப் பெற முடியும்.

### வெற்றி நிச்சயமாக நம்மைத் தேடி வரும்

அடுத்து கலைஞரின் மன திடம்... தோல்வியாக இருந்தாலும் சரி, வெற்றியாக இருந்தாலும் சரி, இரண்டையும் சரிசமமாகப் பார்க்கக் கூடியவர். கலைஞர் அவர்கள் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருந்தால், வெற்றி நிச்சயமாக நம்மைத் தேடி வரும் என்ற மன உறுதியுடன் கடைசிவரை கலைஞர் அவர்கள் மக்களுக்காக உழைத்துக்கொண்டே இருந்தார்கள்.

மன உறுதி, ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் இருக்கவேண்டும். கடைசியாக, கலைஞரின் 'டீம் ஒர்க்', கூட்டணி முயற்சி கூட்டு முயற்சி. கலைஞர் அவர்களை மாதிரி ஒரு டீம் ஒர்க் செய்த இன்னொரு நபரை இந்த உலகத்திலேயே பார்க்க முடியாது. கலைஞர் அவர்களை மாதிரியே இப்போது நூற்றாண்டைக் கண்ட அவரின் நெருங்கிய நண்பர் இனமானப் பேராசிரியர் தாத்தா, அவரை மாதிரி எண்ணற்ற போராளிகள், எண்ணற்ற பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், களப்பணியாளர்கள், இளைஞர்கள், என கலைஞரிடம் ஒரு மிகப்பெரிய டீம், டஃபான டீம் இருந்தது.

அந்த டீமை கலைஞர் அவர்கள் நேர்த்தியாக வழிநடத்தினார். கலைஞர் அவர்களுக்குப் பின்னர் நம் முதலமைச்சர் அவர்கள் அந்த டீமை இப்பொழுது சிறப்பாக வழிநடத்தி கொண்டிருக்கின்றார். அதே மாதிரி உங்கள் விளையாட்டிலும் நல்ல டீமை நீங்கள் அமைத்துக் கொள்ளவேண்டும். நல்ல டீம் அமைந்து விட்டாலே, நாம் பாதி வெற்றி பெற்று விட்டோம் என்று அர்த்தம்.

கலைஞர் அவர்களின் பெயரால் வழங்கக்கூடிய விளையாட்டு உபகரணங்களைப் பெறக்கூடிய விளையாட்டு வீரர்களாகிய, உங்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் கலைஞர் அவர்களுக்கு இருந்த இந்தத் திறமைகளை நீங்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது இங்கு வழங்கப்படுகின்ற இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, நம் வீரர் வீராங்கனைகள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். சிறந்த திறமையாளர்களை மேலும் ஊக்குவித்து, உலகறிய வைக்க தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் வழிவகை செய்யப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

### விளையாட்டு அறிவியல் மையம்

அது மட்டுமல்ல, மதுரை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுக்காக கழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக, சமீபத்தில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் மற்றும் ஜல்லிக்கட்டு அரங்கத்தை 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் திறந்து வைத்தார்கள். கேலோ இந்தியா போட்டிகளை மதுரையிலும் நடத்தினோம் மேலும் இன்றைக்கு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் திறக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட விளையாட்டு அரங்கில் உள்ள விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்டு ரூபாய் ஆறு கோடி மதிப்பீட்டில் ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றது.

ஒலிம்பிக் தடகள வீராங்கனை ரேவதி போன்ற விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் நீண்ட நாள் கோரிக்கையான செயற்கைத் தடகள ஓடுபாதை 8 கோடி 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மதுரை மாவட்ட விளையாட்டு அரங்கில் அமைக்கப்பட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார். அதன் அடிப்படையில், மதுரையில் இருக்கக்கூடிய சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் ரூபாய் மூன்று கோடி மதிப்பில் விளையாட்டு அரங்கம் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது.

விரைவில், அந்த விளையாட்டு அரங்கமும் பயன்பாட்டிற்கு வர உள்ளது என்பதை நான் இங்கே கூறுகின்றேன். வெற்றி என்பது சுலபமாகக் கிடைக்காது. நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும் என்று கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். எனவே விளையாட்டுத் துறை மட்டுமல்ல நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள அத்தனை துறைகளிலும் வெல்ல வேண்டும் என்றால், இன்றைய இளம் தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

### விளையாட்டை ஊக்குவிக்கின்ற சிறந்த மாநிலம்

உதாரணத்திற்கு எங்களுடைய துறை கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்டுள்ள பல பணிகளுக்கு பரிசாக, சென்ற மாதம் சி.ஐ.ஏ கான்ஃபிடரேசன் ஆஃப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ் என்ற ஓர் அமைப்பு `இந்தியாவிலேயே விளையாட்டை ஊக்குவிக்கின்ற சிறந்த மாநிலம்' என்ற விருதை நம் தமிழ்நாட்டிற்குக் கொடுத்தார்கள்.

ஒரு வாரத்திற்கு முன்பு `தி இந்து' பத்திரிகை குழுமத்திலிருந்து வெளிவரும் `ஸ்போர்ட்ஸ் ஸ்டார்; எங்களைப் பாராட்டி இந்தியாவிலேயே ஒரு மாநிலம் விளையாட்டிற்கு ஊக்கம் கொடுக்கிறது என்றால், அது தமிழ்நாடுதான் என்று `தி பெஸ்ட் ஸ்டேட் ப்ரொமோட்டிங் ஸ்போர்ட்ஸ் என்று நம் தமிழ்நாட்டிற்குக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில்தான் `தேசிய விளையாட்டுப் போட்டிகளை' (`கேலோ இந்தியா கேம்ஸ்') முதன்முதலில் நடத்தினோம். சென்னை மதுரை, கோவை, திருச்சி என பல மாவட்டங்களில் நடத்தினோம். இதில் பதக்க பட்டியலில் பார்த்தீர்களென்றால், வரலாற்றிலேயே முதன்முறையாக தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்தது, அந்த விளையாட்டு வீரர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளை உங்கள் அனைவரின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கே உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் வெங்கடேசன் அவர்கள் மதுரையில் இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்காக, அவர்களுடைய பாராட்டைத் தெரிவித்திருந்தார். மதுரையில் நடத்துவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அது என்ன காரணம் என்றால், சென்ற வருடம் ஒரு ஐந்து ஆறு மாதங்களுக்கு முன்பு, உங்களின் அமைச்சர் மூர்த்தி அவர்கள் இதே மதுரைக்கு என்னை அழைத்துக் கொண்டு வந்து, கிட்டத்தட்ட 1,360 கிரிக்கெட் டீமை வரவைத்து, அவர்கள் அத்தனை பேருக்கும் கிரிக்கெட் கிட் பரிசாகக் கொடுத்தார். எனவேதான் அவர் கட்சி சார்பாக நிகழ்ச்சி நடத்தினார். நான் என் துறையின் சார்பாக, இதே மதுரையில் இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்திக் காட்டுகிறேன் என்று மதுரையில் இதைத் துவங்கி இருக்கின்றோம்.

எனவே வந்திருக்கும் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இளைஞர்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருந்தால்தான் அந்த நாட்டின் மனிதவளம் சிறந்து விளங்கும். அதற்கு இந்த விளையாட்டு உபகரணங்கள் பெரும் துணையாக இருக்கும். `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் 'பெற்ற அத்தனை ஊராட்சிகளையும் அந்த ஊராட்சிகளின் முகங்களாக உள்ள மாணவர்கள், இளைஞர்கள், விளையாட்டுவீரர்கள், வீராங்கனைகள் உங்கள் அத்தனை பேரையும் வாழ்த்திப் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

விழாவில் அமைச்சர்கள் பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, பூமிநாதன், வெங்கடேசன், மதுரை மாநகர மேயர் இந்திராணி பொன்வசந்த், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கூடுதல் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மணிமாறன், இளைஞர் அணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதுரை மாநகராட்சியின் ஆணையர் தினேஷ்குமார் ஐ.ஏ.எஸ்., கூடுதல் ஆட்சியர் மோனிகா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் சூரியகலா கலாநிதி, மதுரை கிழக்கு மண்டலக் குழுத் தலைவர் வாசுகி கிருஷ்ணகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், ஒலிம்பிக் போட்டி பங்குபெற்ற தடகள வீராங்கனை ரேவதி, யாதவா மகளிர் கல்லூரி தாளாளர் அருண் மூர்த்தி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

# திராவிட மாடல் என்றால் என்ன?

## அன்பில் மகேஸ் பொய்யாமொழி
### (பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்)



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனிதவளம் மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் 2024-2025'ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை 19.02.2024 அன்று தாக்கல் செய்தார்.

இந்த நிதிநிலை அறிக்கையை உற்று நோக்கியிருப்பவர்கள் அனைவருக்கும் திராவிட மாடலின் நோக்கம் புரிந்திருக்கும்!

இருப்பினும் சிலர் கண்டும் காணாமல் இருப்பர்! சிலர் அவர்களின் முதலாளிகளுக்கு பயந்துகொண்டு திராவிட மாடல் பற்றி தெரியாது என முழிப்பர்!

ஆனால் இன்னும் சிலர் 'இது கானல் நீர் போல உள்ளது' என்பார்கள். உண்மைதான் அவர்களுக்கு திராவிடம் என்பதே கானல் நீர்தான்!

இவர்களைப் பற்றி தூற்றுவதை விடவும் திராவிட மாடல் என்றால் என்ன? என்பதை விளக்குவதுதான் சரியானதாக இருக்கும்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பள்ளிக் கல்வித்துறை வளர்ச்சிக்காக 2021-2022'ஆம் நிதியாண்டில் ரூ.32,599.54 கோடி, அதுவே 2022-2023'ஆம் நிதியாண்டில் ரூ.36,985.89 கோடி, 2023-2024'ஆம் நிதியாண்டில் ரூ.40,299 கோடி என உயர்ந்து தற்போதைய 2024-2025'ஆம் நிதியாண்டில் ரூ.44,042 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதான் திராவிட மாடல்!

இந்திய ஒன்றியமே வியந்து பார்க்கும் 'புதுமைப் பெண்' திட்டத்தால் 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் மாதந்தோறும் 1000 ரூபாயை கல்வி ஊக்கத்தொகையாக பெற்று பயனடைந்து வருகின்றார்கள். இத்திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் தமிழ்நாட்டில் உயர் கல்வியில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

இத்தகைய சிறப்புகளைக் கொண்ட புதுமைப் பெண் திட்டத்தை அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவிகளும் பயன்பெறும் வகையில் விரிவுப்படுத்தியுள்ளார் முதலமைச்சர் அவர்கள். இதற்காக ரூ.370 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல அரசுப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12'ஆம் வகுப்பு மாணவர்கள் உயர் கல்வியில் சேரும் போது மாதம் ரூ.1000 ஊக்கத்தொகை வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தையும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இதுதான் திராவிட மாடல்!

இந்த மகிழ்ச்சியை மாணவர்களோடு கொண்டாட வேண்டும் எனும் விருப்பத்தின்படி சட்டமன்றம் முடிந்த உடனே தாம்பரம் விரைந்தோம். தாம்பரத்தில் உள்ள கிறிஸ்துராஜா அரசு உதவிபெறும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளைச் சந்தித்து இனிமேல் நீங்களும் பயனாளிகள்தான் எனும் மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்துகொண்டோம்.

அதே போல தாம்பரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவச் செல்வங்களிடம் "தமிழ்ப் புதல்வன்" திட்டம் குறித்து எடுத்துரைத்து அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டோம்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுப்படுத்தியுள்ளார் முதலமைச்சர் அவர்கள். இப்பள்ளிகளில் பயிலும் 2 இலட்சத்து 50 ஆயிரம் மாணவச் செல்வங்களும், அவர்களின் பெற்றோர்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படவுள்ளது. இதுதான் திராவிட மாடல்!

பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்திற்காக இந்தாண்டும் ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் 15,000 திறன்மிகு வகுப்பறைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படவுள்ளது. இதுதான் திராவிட மாடல்!

இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்திட ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

மதுரையை போலவே கோவையிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டப்படும் என்ற மாபெரும் அறிவிப்பினையும் அறிவித்துள்ளார். இதுதான் திராவிட மாடல்!

அறிவுசார் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும், அறிவார்ந்த தமிழ் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் இதுபோன்ற திட்டங்களை அறிவிப்பதோடு அதனை வெற்றிகரமாக செயல்படுத்துவதுதான் திராவிட மாடல் எனலாம்!

நமது தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் வருவாயில் ஒரு ரூபாய் எப்படி திரட்டப்படுகிறது? என வரவு செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேட்டில் குறிப்பிட்டிருந்தார்கள்.

மாநிலத்திற்கு வருவாயாக கிடைக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் மாநிலத்தின் வரியாக 50.2 சதவிகிதம் மாநிலத்தின் பங்காக உள்ளது! ஒரு ரூபாய் வருவாயில் ஒன்றிய அரசின் பங்கு வெறும் 16.3 சதவிகிதம் மட்டுமே!

பெயரளவிற்கு மட்டுமே மாநிலத்தின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும் இது போன்ற ஒன்றிய அரசை வைத்துக் கொண்டு கல்வி, வாசிப்பு, மாணவர்கள், நூலகங்கள், உயர்கல்வி எண்ணிக்கை என அறிவுத்தளத்தை மேம்படுத்துவதற்காக திட்டங்களை செயல்படுத்துவதுதான் திராவிட மாடல்!

திராவிட மாடல்தான் இந்திய ஒன்றியத்தின் வளர்ச்சிக்கான முன்னோடி மாடலாகவும் அமையும் காலம் வெகு தொலைவில் இல்லை!

●

# தன்னை வெல்வான்! தரணியை வெல்வான்!

■ நீரை.மகேந்திரன்



“கட்சிக்கு முடிவெடுக்கும் ஆற்றல் பெற்ற தலைவர் தேவை, இந்தச் சூழலில் கலைஞரைவிட உறுதியோடு செயலாற்றக் கூடியவர் இல்லை”. 1969-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின் கழகத் தலைமை பொறுப்பை யார் ஏற்பது என்கிற கேள்வியின்போது , கலைஞர்தான் சரியானவர் எனத் துணை நின்றவர் தந்தை பெரியார்.

தந்தை பெரியார் தனது உணர்வுகளை எப்போதும் யாரிடத்திலும் அவ்வளவு எளிதாக வெளிக்காட்டிக் கொண்டதில்லை. ஆனால், கலைஞரிடத்தில் மட்டும் தனிப் பாசத்தைப் பல நேரங்களில் வெளிப் படுத்திக் காட்டியிருக்கின்றார். 1943-ஆம் ஆண்டிலேயே “தன்னோடு வா” என கலைஞரை ஈரோட்டுக்கு அழைத்துக் கொண்டதும் அவரது கணிப்புதான்.

## நமது கலைஞர்

கலைஞரின் ஆட்சி நிர்வாகத் திறனைப் பாராட்டும்விதமாக பெரியார் கூறுகையில், “கலைஞர் நமக்குக் கிடைத்தற்கரிய வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும். ஒரு பகுத்தறிவாளராகவும், ஆட்சிக்கலையில் அரிய ராஜதந்திரியாகவும் நடந்துவருவதன் மூலம் தமிழர்களுக்குப் புது வாழ்வு தருபவராகிறார் நமது கலைஞர்” எனப் புகழ்ந்தார் பெரியார்.

அவர் ‘நமது கலைஞர்’எனக் கூறியது மிகப்பெரும் பொருள் கொண்டது. சொல்லப்பட்ட ஆண்டு அந்த அளவுக்கு அரசியல் முக்கியத்துவம் கொண்டது. ஆம், 1973-ஆம் ஆண்டு, காஞ்சிபுரத்தில் ஒரு பொதுக்கூட்டம். அதில் பெரியார் உரையாற்றுகிறார்

“கலைஞர் அவர்களின் ஆட்சியைப் போல எந்த அமைச்சரும் ஆட்சி செய்யவில்லை. மற்ற முதல்வர்கள் செய்த காரியங்களையும் கலைஞர் அவர்கள் செய்து இருக்கும் காரியங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான் இருக்கும்.

நமது கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், ஏழை எளியவர்கள் தொழிலாளர்கள்’ ஆகியவர்களை மனதில்கொண்டு பல நன்மைகளைச் செய்து வருகிறார். எதிரிகள் பொறாமை உணர்ச்சியினால் இதனைப் பாராட்டாததோடு தூற்றியும் திரிகின்றார்கள். உண்மையிலேயே சாதி ஒழிந்த சமுதாயமாக நாடு ஆக வேண்டும் என்ற கருத்தில்தான் கலைஞர் எல்லா மக்களும் கோயிலுக்குப் போகலாம். பூசை பண்ணலாம் என்ற உத்தரவு போட்டார்.

இன்றைய நிலையில், கலைஞர் அவர்கள், ஆட்சிப்பொறுப்பில் இல்லாது வேறு யார் இருந்தாலும்கூட இவ்வளவு திறமையாக எதிரிகளைச் சமாளித்துக் கொண்டு காரியம் ஆற்றி வர முடியாது. இப்படிப்பட்ட முதல்வரை நாம் பெற்று இருப்பது ஒரு நல்ல வாய்ப்பு என்று மக்கள் உணர வேண்டும். இவ்வளவு அரிய பெரிய காரியங்களை எல்லாம் நமது நலன் கருதிச் செய்கின்ற ஆட்சியினை ஆதரிக்க வேண்டும்” என்கிறார் பெரியார்.

கலைஞரின் ஆட்சிக்கலைக்கு முன்பும் பின்பும் பெரியார் கொண்டிருந்த கருத்தைப் போலவே, பேரறிஞர் அண்ணாவும் கலைஞர் குறித்த வியப்பினை பல நேரங்களில் வெளிப்படுத்துகிறார். “நான் சொல்லாமலேயே செய்து முடிக்கும் ஆற்றலைப் பெற்றவர் கருணாநிதி” என்கிறார் பேரறிஞர் அண்ணா.

## ஈடு இணை இல்லாதவர்

“என்னை முழுவதும் அறிந்தவர்கள்தான் கழகத்திலே இருக்கிறார்கள். அதிலே முற்றிலும் அறிந்தவர் என்று சொல்லத்தக்கவர்களிலே கருணாநிதிக்கு மிகச் சிறந்த இடம் உண்டு. அவர் மூலமாக நானும் நாடும் இன்னும் நிரம்ப எதிர்பார்க்கிறோம்” என்றும் “கருணாநிதிக்கு ஈடு கருணாநிதிதான்” என்றும் குறிப்பிட்டவர் பேரறிஞர் அண்ணா.

‘கல்லக்குடிப் போராட்டமா? கருணாநிதி தலைமை தாங்கட்டும், ‘சென்னை மாநகராட்சித் தேர்தலா ? வேட்பாளர் தேர்வுக்குழு தலைமை கருணாநிதி’, ‘1956-ஆம் ஆண்டு தேர்தல் சிறப்பு மாநாடா ? தம்பி, கருணாநிதியிடம் பொறுப்பை ஒப்படை’ என நம்பிக்கை வைத்தார் அண்ணா.

‘இந்தக் கழகத்தில் பலதரப்பட்ட உணர்வுள்ளவர்கள், பல எண்ணங்கள் கொண்டவர்கள் யாராக இருந்தாலும், சிறப்பாகப் பணியாற்றக் கூடியவர்கள் உண்டு. எதிலும் நிதானமாகப் பணியாற்றக் கூடியவர்கள் உண்டு. அவர்களை எல்லாம் இன்னும் சிறப்பாக - திறம்படச் செயல்பட வைக்கத் திறமைசாலிகள் வேண்டும். அத்தகைய சிறப்புகளைப் பெற்றவர் என் தம்பி கருணாநிதிதான்’ என்று பலமுறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி, பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார்.

‘என் தம்பிகள் நான் சொல்வதைச் செய்து முடிப்பார்கள். ஆனால், தம்பி கருணாநிதி மட்டும்தான் நான் சொல்லாமலேயே செய்து முடிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பவர்’ என அண்ணாவின் சொற்களில் கலைஞர் மீது வைத்த நம்பிக்கையைக் காணலாம்.

“வண்ணங்கள் பல இருந்தாலும், அந்த வண்ணங்கள் நல்ல ஓவியத்தை உருவாக்க ஓவியப் புலவன் தேவை. ஒரு கட்சியில் பலதரப்பட்டவர்கள் இருந்தாலும், சிறப்பாகச் செயல்பட வைக்கும் திறமையுள்ளவர்கள் மூலம், அது போய் அவர்களைச் சேர வேண்டும். தம்பி, கருணாநிதி அந்தச் சிறப்புகளை நன்கு பெற்றவர்களில் ஒருவர்.

> **‘என் தம்பிகள் நான் சொல்வதைச் செய்து முடிப்பார்கள். ஆனால், தம்பி கருணாநிதி மட்டும்தான் நான் சொல்லாமலேயே செய்து முடிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பவர்!’**

“கலைத்துறையிலே கருணாநிதி பெற்ற புகழ் கொஞ்சநஞ்சமல்ல; ‘பராசக்தி’ மூலம் அவர் அடைந்த புகழோடு மேலும் மேலும் பல திரைப்படங்களாலும் அவர் புகழடைந்தார். கருணாநிதி அந்தக் கலையை நம்பி, அந்தத் துறையிலேயே சென்றிருந்தால் பணத்தோடும் வாழலாம்; பகட்டோடும் வாழலாம். ஆனால், அவர் கொண்ட இலட்சியத்தை மறந்து விடவில்லை” என்றார் அண்ணா.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் கலைஞரின் தலைமைப் பண்பு, உழைப்பு வேகம் எல்லாம் அறிந்திருந்தாலும், கலைஞரின் நிதானம் அதன் அடிப்படையாக இருந்தது.

## தரணியை வெல்வான்

1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் பாளையங்கோட்டை தனிமைச் சிறைக்குப் பின்னர் கலைஞரிடம் வெளிப்பட்ட நிதானம் அவரின் தலைமைப் பண்புகளில் ஒன்றாக மாறியது எனக் கணிக்கிறார் பேரறிஞர் அண்ணா.

“என் தம்பி கருணாநிதி தனிமைச் சிறையில் தவிக்கிறார் என்று சொன்னார்கள். தவறாகச் சொல்லிவிட்டார்கள், தம்பி கருணாநிதியைத் தனிமையில் தள்ளும் அளவிற்குக் கொடுமை அல்ல, அங்கு பாம்பும், பூரானும் இருக்கிறது” என ‘திராவிட நாடு’ ஏட்டில் எழுதினார் அண்ணா.

‘காஞ்சி’ இதழில் எழுதிய ஒரு கட்டுரையில், “சிறைக்கூடம் தள்ளப்படும் இலட்சியவாதிகளோ, பன்மடங்கு உறுதி கொண்டவர்களாவது மட்டுமல்ல, தன்னைப் பற்றிய எண்ணம், தனது நலனை பற்றிய நினைப்பு, தனது குடும்பம் பற்றிய எண்ணம் இவைகளைக் கூட மறந்து விடவும், தான் தனக்காக அல்ல; மற்றவர்களுக்காக என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும்; தன்னைப் பற்றிய எண்ணம் எழுப்பிவிடும் ஆசை, அச்சம், கவலை, கழகம், பிரிவாற்றாமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவும் ஒரு துறவு நிலையைப் பெற்றெடுக்கிறது சிறைச்சாலை.

பாளையங்கோட்டை சிறைவாசலில் கண்டேன் இந்தப் பேருண்மையை” எனக் குறிப்பிட்டதுடன் முத்தாய்ப்பாக “தன்னை வெல்வான், தரணியை வெல்வான்” என முடித்திருந்தார். கலைஞர் தரணியை வென்றது, அண்ணாவின் நம்பிக்கையன்றி வேறில்லை.

---

## திராவிட இயக்க இதழ்கள் - முல்லை



1945-ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசனுக்காகவே தொடங்கப்பட்ட இதழ் ‘முல்லை’. அதைத் தொடங்கியவர் முத்தையா. பின்னாளில் ‘முல்லை’ முத்தையா என்று அழைக்கப்படலானார். பாரதிதாசன் அந்த இதழை ஆதரித்தார்.

மாதந்தோறும் வெளிவந்த இதன் முதல் இதழில் ‘போஷகர்’ என்ற சொல்லுக்கு ‘ஆதரவாளர்’ என்ற தமிழ்ச் சொல் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது.

முல்லை இதழில் தொ.மு.சி. ரகுநாதன் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். இதழ் வெளிவந்த காலத்தில் புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, லா.சா.ரா ஆகியோரின் படைப்புகளையும் தாங்கி, ஓர் இலக்கிய இதழாகவும் ‘முல்லை’ திகழ்ந்தது. கண்ணதாசனும் இதில் பங்களித்துள்ளார்.

மொத்தம் 12 இதழ்கள் மற்றும் ஒரு தொகுப்பு மலர் ஆகியவற்றுடன் வெளிவந்து நின்று போனது இந்த இதழ். அந்த ஓர் ஆண்டு இதழ்களில் வெளிவந்த சிறுகதைகள் ‘முல்லை கதைகள்’ என்ற பெயரில் பின்னாளில் நூலாக வெளியிடப்பட்டது. முல்லை பதிப்பகத்தின் முதல் வெளியீடு அந்த நூல்தான். இந்த இதழ் குறித்து, ஓர் அறிமுக நூலை வரலாற்றாய்வாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதியுள்ளார்.

## :ப்ளாஷ்பேக்



## இணையப் பேனா!



செந்தில்நாதன்

1999 -ஆம் ஆண்டு பிப்ரவரி 8,9,10 ஆகிய தேதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், ‘தமிழிணையம்-99’ மாநாடு நடைபெற்றது. அப்போது தகவல் தொழிநுட்பப் பணிக் குழுவின் தலைவராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் துணைத் தலைவராக முரசொலி மாறன் அவர்களும் செயல்பட்டார்கள். இந்த மாநாட்டில் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பிரிட்டன், சுவிட்ஸர்லாந்த் ஆகிய நாடுகளைச் சேர்ந்த - கணினித் துறை வல்லுநர்கள் தமிழ்மொழிக்கான குறியீடு தர நிர்ணயத்தை உருவாக்கினார்கள். இந்திய மொழிகளில், மொழிக்கான தர நிர்ணயம் உருவாக்கப்படுவது, அதுவே முதல்முறை. அப்போது தமிழ்நாடு அரசால் ஊடக ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டேன். மாநாடு சிறப்புற நடைபெற்று முடிந்த பிறகு, மாநாட்டில் பங்காற்றிய அனைவரும் தலைமைச் செயலகத்தில் கலைஞரைச் சந்தித்து புகைப்படம் எடுத்துக்கொண்டோம். ‘தமிழிணையம் 99’-லிருந்து ‘கணித்தமிழ்-2024’ வரை வந்திருப்பதை நினைத்தால் வியப்பாகத்தான் இருக்கிறது.

**-ஆழி.செந்தில்நாதன், ஐலேசா நிறுவனத் தலைவர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in


## கருவூலம்

### சிங்கத்தின் கால்கள் ஓய்ந்தன!

**1950-ஆம் ஆண்டு நாகை மாவட்டம், செம்பனார்கோயிலில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் பேசினார். ஒலிபெருக்கி இல்லாமல், ஒலிபெருக்கி வந்த பின் என 30 ஆண்டுகள் நின்றுகொண்டே தடியைச் சுழற்றியபடி மணிக்கணக்கில் பேசிய பெரியார், முதன்முதலில் அந்தக் கூட்டத்தில்தான் நிற்க முடியாமல் நாற்காலியில் அமர்ந்து பேசினார். அதன்பிறகு 23 ஆண்டுகள் பெரியார் மேடையில் அமர்ந்தவாறே பேசினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 394




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை குடிநீர் வாரியம் சார்பில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நெம்மேலியில் அமைக்கப்பட்டுள்ள நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தினை 24.02.2024 அன்று திறந்து வைக்கிறார்கள். அதற்கான விழா முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் நேற்று (19.02.2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இவ்வாய்வின்போது, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச. அருள்ராஜ், மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (19.2.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வில், நெடுஞ்சாலைத்துறையில் உதவிப் பொறியாளர்களாகத் தேர்வு செய்யப்பட்ட 32 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி ந.சாந்தி, மற்றும் இணை இயக்குநர் (நிர்வாகம்) திருமதி ஆர்.விமலா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ஜாபர்கான்பேட்டையில்

# ரூ.83 இலட்சம் மதிப்பில் விளையாட்டுத் திடல்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.20-

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு139, ஜாபர் கான்பேட்டை, ராகவன் காலனி, 2வது லிங் தெருவில் ரூ.83 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடலை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.02.2024) மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், ரூ.83 இலட்சம் மதிப்பில் ராகவன் காலனியில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடலில் கூடைப்பந்து மைதானம், இறகுப்பந்து மைதானம், கைப்பந்து மைதானம், சிறுவர் விளையாட்டுத் திடல், உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம், நவீன நடைபாதை, குடிநீர் வசதி, மின் வசதி, காவலர் அறை, சுற்றுச்சுவர், நவீன கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த.விசுவநாதன், மாமன்ற உறுப்பினர்கள் ப. சுப்பிரமணி, எம்.ஸ்ரீதரன், மண்டல அலுவலர் பா.முருகேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நேற்று (19.2.2024) தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் 170வது பிறந்த நாளையொட்டி, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதி மற்றும் அனைத்துத் தரப்பு மக்களின்

# சமமான வளர்ச்சிக்கான நிதிநிலை அறிக்கை!

## விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் பாராட்டு!

சென்னை,பிப்.20

இதுகுறித்து பொன் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசு நிதி நிலை அறிக்கையில் 2030க்குள் கிராமப்புறங்க ளில் 8 லட்சம் குடிசை வீடுகள் கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, கிராமப்புற ஏழை எளிய மக்களின் ‘வீடு’ கனவை நினைவாக்கிடம் அரிய திட்டமாகும். குடிசைகள் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் திட்டம் மட்டுமல்ல, கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய அரியத் திட்டமாகும்.

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஏரி, குளம் போன்ற சுமார் 5000 நீர் நிலைகளை ரூபாய் 500 கோடியில் புனரமை க்கப்படும் என்று அறிவித்திருப்பது மிகுந்த வரவேற்புக் குரியதாகும். குறிப்பாக, நிலத்தடி நீரை பாதுகாத்திடவும், கிராமப்புற மக்களின் நீர் ஆதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும், விவசாயிகளுக்கு உறுதுணையாக அமைவதற்குமான அரியத் திட்டமாகும்.

ஊரக வேலை



வாய்ப்பு திட்டத்திற்கு ரூபாய் 3,300 கோடி ஒதுக்கி இருப்பது, ஊரக பகுதிகளில் சாலைகளை மேம்படுத்திட ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டு இருப்பது, இப்படி கிராமப்புறத்தை மேம்படுத்துவதற்கான நோக்கத்தோடு நிதி அமைச்சர் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்துள்ளார்.

சிங்கார சென்னையை மேம்படுத்தவும், சென்னையை சமன்படுத்துவதற்கு ஏற்ப ரூபாய் 1000 கோடியில் வட சென்னைக்கு திட்டங்கள் தீட்டிடவும், சென்னை கடற்கரையை மேம்படுத்திடவும் அறிவிக்கப்பட்டு இருப்பது தமிழ்நாட்டின் தலைநகரை உயர்த்துவதற்கான உயரியத் திட்டமாகும்.

நூலகங்களை தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கொண்டு சேர்த்து அறிவுள்ள அடுத்த தலைமுறையை உருவாக்கிட அரசு திட்டமிட்டு செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு, கோவையில் கலைஞர் நூலகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பாகும்.

5 லட்சம் ஏழைகளை வறுமை கோட்டில் இருந்து மீட்டெடுக்க முதல்வரின் தாயுமானவர் திட்டம், ஏழை எளிய மக்களுக்கு கிடைத்த அட்சயத் திட்டமாகும்.

மூன்றாம் பாலினத்தவரின் உயர்கல்வி செலவை அரசு ஏற்கும் என்பது ஒரு புரட்சிகரமான அறிவிப்பாகும். அரசு பள்ளியில் 6 முதல் 12 வரை பயின்று உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்பது ஏழை எளிய மாணவர்களின் உயர்கல்வியை ஊக்குவித்து உதவி செய்யும் திட்டமாகும்.

எட்டு இடங்களில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ள ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொழி பெயர்க்கப்பட்டுள்ள தமிழ் மொழி நூல்களை 100 நாடுகளின் நூலகங்களில் வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் தமிழ் மொழியை, தமிழர்களின் நாகரிகப் பண்பாட்டை உலகறிய செய்யும் உயரிய நோக்கமாகும்.

பொதுவாக தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் கருத்தில் கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களையும் மனதில் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எவராலும் குறை கூற முடியாத சமமான வளர்ச்சிக்கான அரியத் திட்டமாகும்.

சமூக நீதி, கடைக்கோடி மனிதருக்கும் நல வாழ்வு, உலகை வெல்லும் இணைய தமிழகம், அறிவுசார் பொருளாதாரம், சமத்துவ நோக்கில் மகளிர் நலம், பசுமைவழிப் பயணம், தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும் இப்படி ஏழு தமிழ் கனவுகள் என்ற தலைப்பில் பல்வேறு திட்டங்களை இந்த அரசு அறிவித்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வரவேற்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.








நேற்று (19.02.2024) மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தலைமையில் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் எட்டாவது கூட்டம் நடைபெற்றது. வாரியத்தின் வாயிலாக மீனவர்களுக்கு பல்வேறு நிவாரணம் மற்றும் உதவித்தொகை திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக பல்வேறு ஆதாரங்களில் இருந்து நிதிப்பங்களிப்பு மேம்படுத்துதல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் மீன்வளம் மீனவர் நலத்துறை சுன்சோங்கம் ஜடக் சிரு, மீனவர் நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (19.2.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், குழு உறுப்பினர்கள் க.திருநாவுக்கரசு, பேராசிரியர் சுப. வீரபாண்டியன், திருமதி ஓவியா, திருமாவேலன் மற்றும் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! எம்.ஸ்ரீதரன் முன்னிலை! சைதை மேற்கு பகுதி துணைச் செயலாளர்

## கவிதா கவுதமன் இல்ல மணவிழா! கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

### தயாநிதி மாறன் எம்.பி. - தமிழச்சி தங்கப் பாண்டியன் எம்.பி. - எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் பங்கேற்பு!

சென்னை, பிப். 20-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குப் பகுதி துணைச் செயலாளர் கவிதா கவுதன், சைதை மேற்குப் பகுதி தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.தீபன் இல்ல திருமண விழா 22.2.2024 - வியாழக்கிழமை காலை 8 மணியளவில், மேற்கு மாம்பலம், வெற்றி கிருஷ்ணன் மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் முன்னிலை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் மற்றும் சைதை மா.அன்பரசன், ஆர்.என்



துரை, த.பாபு, எம்.சுரேஷ்குமார், சைதை த.சம்பத், ந.தமிழரசு, கு.புகழ்வேந்தன், ஜி.பாபு, எஸ்.ஆனந்தன், ஜி.ஜே.மோசஸ், ஆ.கவிராஜ் ஆகயோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இம்மணவிழாவை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து மணமக்கள் க.முகேஷ் - வெ. உஷா ஆகியோரை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவில் தயாநிதி மாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., மயிலை த.வேலு எம்.எல்.ஏ., நே.சிற்றரசு, ஜெ.கருணாநிதி எம்.எல்,ஏ., ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ., க.தனசேகரன், க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், பாலவாக்கம் த.விஸ்வ நாதன், வடசென்னை ந.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கர், வாசுகி பாண்டியன், சைதை சம்பத், ரத்னா லோகேஸ்வரன்,

துரை கபிலன், கே.கண்ணன், மு.ராசா, சு.சேகர், எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், நொளம்பூர் வே.ராஜன், துரை வீரமணி, ஜி.வெங்கடேசன், வி.ஏழுமலை, நந்தனம் மதி, எஸ்.முரளி, மின்னல் கந்தப்பன், எம்.கே.ஏழுமலை, ப.ரவி, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜன், ஆர்.பாலசுந்தரம், பி.ஜே.பாஸ்கர், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், பி.எஸ்.முருகேசன், வீர.கனிமொழி, த.பஷீர், வ.செல்வக்குமார், எம்.விநாயக மூர்த்தி, ஆர்.கிருஷ்ணகுமார், ச.சங்கர் கணேஷ், ஜெ.கி.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், கோட்டூர் எஸ்.பிரகாஷ், செ.ரவி, சைதை சாதிக், அஞ்சல் என்.ராமன், கழக ரமேஷ், நா.மணிகண்டன், ஹரி பாபு, பா.அருண்குமார், ஆர்.சசிகுமார், சி.பரிமேலழகர், கனிமொழி தனசேகரன், நிஷா சையத் மற்றும் பலர் கலந்துகொண்டு வாழ்த்துகின்றனர்.

க.தீபன் நன்றி கூறுகிறார்.

அமைச்சர் ஆர்.காந்தி தலைமை! முன்னாள் நகரச் செயலாளர் - சோளிங்கர்

## ஏ.இராஜேந்திரன் புதல்வி டாக்டர் ஆர்.துர்கா - டாக்டர் எம்.பெரியண்ணா (எ) மனோஜ் திருமணம்!


### கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் நடத்தி வைக்கிறார் - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

சோளிங்கர், பிப். 20-

சோளிங்கர் நகரக் கழக முன்னாள் செயலாளர் லயன் ஏ.இராஜேந்திரன் புதல்வி மணவிழாவை, அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில், கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.

இராணிப்பேட்டை மாவட்டம் - சோளிங்கர் நகரக் கழக முன்னாள் செயலாளர் லயன் ஏ.இராஜேந்திரன் - திருமதி ஆர். அன்பரசி ஆகியோரின் புதல்வி டாக்டர் ஆர்.துர்காவிற்கும் - கிருஷ்ணகிரி மாவட்டம் - ஒசூர் வட்டம் - பேடரபள்ளி வி.முருகன் - திருமதி எம்.சாந்தி ஆகியோரின் புதல்வி டாக்டர் எம்.பெரியண்ணா (எ) மனோஜ்க்கும் திருமணம், 21.2.2024 - புதன்கிழமை அன்று காலை சோளிங்கர் - எம்.எஸ்.பி.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு - இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளரும், கைத்



தறி, கதர்துறை அமைச்சருமான ஆர்.காந்தி, திருமதி கமலா காந்தி ஆகியோர் தலைமை வகிக்கிறார்கள்.

அ.அசோகன், மு. சிவானந்தம், எம்.கோபி, ஏ.எஸ். பழனி ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஆர்.ஏ.சோமசுந்தரம், எஸ்.எம்.நாகராஜி, ஏ. கலைக்குமார், பூங்கொடி ஆனந்தன், டி.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.என்.பூர்ணசந்திரன், வி.எம்.சந்திரன், சி.மாணிக்கம், எஸ். வினோத், கே.பி.வெங்கடேசன், எஸ்.டி.தங்கராஜ், அன்பரசு, எஸ்.டி.சிட்டிபாபு, எஸ்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமணத்தை - கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.

டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., என்.ஆர். இளங்கோ எம்.பி., டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி., தி.அ.முகமது சகி, வேலூர் மாவட்டச் செயலாளர் எம்.எல்.ஏ., ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ஏ.எம். முனிரத்தினம் எம்.எல்.ஏ., மற்றும் ஆர்.வினோத் காந்தி, ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஜி.காமராஜ், டாக்டர் ஈ.எஸ்.எஸ். ராமன், எம்.பீபாலன், ஏ. கோபிகிருஷ்ணா, ஏ.கே. சுந்தரமூர்த்தி, ஜெயந்தி திருமூர்த்தி, ஏ.வி.சாரதி, கே.குமுதா, கே.துரை மஸ்தான், மு.கண்ணையன், க.சுந்தரம், எம்.எஸ்.கலைமணி, பே.வடிவேல், ஆர். ரவீந்திரன், எஸ்.ஜி.சி.பெருமாள், சேக்ஷ வெங்கட்ராமன், எம்.பாலாஜி, தெய்வசிகாமணி, வி.பி.எஸ். கலைசந்தர், ஆர்.தமிழ்ச்செல்வன், கே.பசுபதி, ஆ.சௌந்தர், எம்.இ.பாண்டுரங்கன், ஏ.வி.நந்தகுமார், எஸ்.அசோக், ஜெ.ரமேஷ், சி.ஜெ.சீனிவாசன், என். கே.கிருஷ்ணன், எஸ்.சரவணன், கிஷோர் ரெட்டி, எஸ்.ராஜேந்திரன், கே.கருணாகரன், எஸ்.சக்கரவர்த்தி, கொடைக்கல் எஸ். சேகர், இ.செல்வம், எஸ். என்.உதயகுமார், ஆர். சிலம்பரசன், ஏ.கே.முருகன், எம்.குப்பன், கே.பி. எஸ்.வெங்கடேசன், டி.தில்லை, வி.எல்.ஜோதி, பி.பூங்காவனம், ஏ.வி.சரவணன், எஸ்.டி.முகமது அமீன், என்.ஆர். சீனிவாசன், ஜனார்தனன், எஸ்.நாகராஜன், பி.கே. பாபு, பாஸ் (எ) நரசிம்மன், சி.பெரியசாமி, எஸ்.டி. சேதுரவி, கே.பி.ஜெ. தாமோதரன் உள்பட பலரும் வாழ்த்துகின்றனர்.

ஏ.எஸ்.ஏழுமலை, ஆர். ஜெயக்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இரா.செந்தில்குமார் தலைமையில்

## இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்தநாள்!

### தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் இரா.மூர்த்தி, பங்கேற்பு !

சென்னை பிப்:20

இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் சிந்தனைசு சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்தநாளை முன்னிட்டு அவருடைய சிலைக்கு சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா,

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சி 18.2.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ம.சிங்கார வேலர் மணிமண்டபம் இராயபுரம் சிக்னல் அருகில் நடைபெற்றது. இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செல்திில்குமார் தலைமை வகித்தார்.

இதில் பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன்,மு. கோபி, க.நாகம்மை, கி. ராஜேந்திரன், வே.சிவகுமார், நா.சண்முகம், த. ஜெயபால்,பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ. மோகன், எல்.சீனிவாசன், காட்டன் ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என். கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எஸ்.புகழேந்தி, எஸ்.சுரேஷ், அத்தோ முனுசாமி,வி.குமார், கா. கலைச்செல்வன், எம்.என். வெங்கட், ஐசிஎப் பழனி, என்.பாரி, கே.லட்சுமணன், ஜி.லோகேஷ், அ.ஞானசேகரன், டி.ஸ்டீபன், மு.கலியமூர்த்தி, டி.மரியசெல்வம், பி.சதிஷ்குமார், ஜி.ஜெயராஜ், ஆ.மணிவண்ணன், வேழவேந்தன், எஸ்.குமார், செட்டி மு.சந்திரன், ஜி.சித்தார்த்தன், யு.அனிபா, எஸ். மணிகண்டன், ஆர்.ராஜன், ஜி.உமாபதி, பி.பிரபாகரன், கே.சிவதனுஷ், ஆர்.செழியன், எம்.யோகேஷ், ஜெ. கார்த்திக், எ.குமார், வி. பிரேம்குமார், வி.லோகேஷ், ந.தென்னரசு, என்.ராஜசேகர், கே.சி.பிரதாபன், கே. கிரிதரன், ஜி.பூலோகதேவி, எஸ்.ரவி, எஸ்.மகேஷ்குமார், கே.ஐனுல்ஹக், எம். சாகுல்மீரான், ஜெ.எ.சாலமன், பி. அஜித், கே.பி.என். செழியன், ஆர்.நரேஷ், பி. கோதண்டம், கே.பாலகிருஷ்ணன், எஸ்.சௌந்திரபாண்டியன், இரா.முருகன், என்.தேவகுமார், ஜி. சுரேஷ், என்.சுனில்குமார், டி.கவியரசு, டி. ஜெயக்குமார், ஏ.ஜாபர் சாதிக், குப்பன், ஹன்றி, கே. ராஜசேகர், எம்.செல்வம்,ஐ.ராமு, எம்.தினேஷ்,ஜி.அருண், டி.சரவணன்,எம்.ஜாகீர், பி.அஸ்வின், எஸ்.மாரியப்பன், ஜி.ராஜா, கே.சி.மணிவண்ணன், கே.சி.இளங்கோ, கே.குபேரன், ஆர்.பிராசந்த், பி.கார்த்திக், ஆ.ஆனந்தன், எஸ்.ராஜேஷ், யு.மதிவாணன், எஸ்.முத்துகுமார், எம்.சம்பத், எஸ்.சூரிய பிரகாஷ், டி.வருண் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, ஆவடி மாநகராட்சியில் 8வது வார்டில் உள்ள ஆவடி மநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ மிதிவண்டிகளை மாணவர்களுக்கு வழங்கி கடந்த கல்வி ஆண்டில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்தலில் முதல் மூன்று இடங்களில் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கினார். உடன் மேயர் ஜி.உதயகுமார், துணை மேயர் சூரியகுமார், மாநகர செயளாலர் சான் பிரகாஷ், பகுதி கழக செயலாளர் பேபி சேகர், மாமன்ற உறுப்பினர் சக்திவேல், வட்ட கழக செயலாளர்கள் கா.மு.ஜான், டிசோசா மற்றும் ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் டாக்டர் எம். கிருஷ்ணன்

பிப்ரவரி 20 (1994)



சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாவட்ட இணைச் செயலாளராக பணியாற்றியவர்.

1.4.1945ல் சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட 14வது திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாட்டுச் செயலாளராக பணிபுரிந்தவர்.

1948ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு – கருப்புச் சட்டை போரிலும், 1953ல் நடைபெற்ற குலக் கல்வி எதிர்ப்புப் போரிலும் பங்கேற்றவர்.

1971ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது கழக துணை ஆய்வுக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


ஏழாம் ஆண்டு
நினைவு அஞ்சலி
நாள்: 20.02.2024



K.P.K.தங்கவேலு
முன்னாள் மாவட்ட கழக செயலாளர், புதுகோட்டை (தெற்கு)
முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்
...................... நீங்காத நினைவுகளுடன் ......................
K.P.K.T.தங்கமணி
ஒன்றிய கழக செயலாளர், திருவரங்குளம் (மேற்கு)
வள்ளியம்மை K.P.K.T. தங்கமணி
ஒன்றியப்பெருந்தலைவர், திருவரங்குளம்
K.P.K.குடும்பத்தினர்கள், பாத்தம்பட்டி.




நேற்று (19.02.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், ஜாபர்கான்பேட்டை, வார்டு139, ராகவன் காலனியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.83 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடலை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த.விசுவநாதன், மாமன்ற உறுப்பினர்கள் ப. சுப்பிரமணி, எம். ஸ்ரீதரன், மண்டல அலுவலர் பா.முருகேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்களை அந்தமான்நிக்கோபார் தீவின் தலைநகரான போர்ட் பிளேயர் நகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் கருணாநிதி, திருமதி வசந்தா, திருமதி மங்கையர்கரசி, திருமதி லட்சுமி கணேசன், சோமேஸ்வர ராவ், முன்னாள் நகர மன்றத் தலைவர் கே.கணேசன் மற்றும் அலுவலர்கள் நேற்று (19.02.2024) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர். இவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் கையேட்டினை மேயர் வழங்கினார். இந்நிகழ்வின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் உடனிருந்தார்.

## ஆம்னி பேருந்துகள்

# அரசு அறிவித்த இடங்களில் மட்டுமே பயணிகளை ஏற்றி, இறக்க வேண்டும்!

## போக்குவரத்துத்துறை அறிவிப்பு!

சென்னை, பிப்.20-

தெற்கு நோக்கி செல்லும் அனைத்து ஆம்னி பேருந்துகளும் சென்னை புறவழிச் சாலையில் போரூர் சுங்கச் சாவடி மற்றும் சூரப்பட்டு சுங்கச்சாவடி மற்றும் கிளாம்பாக்கம் பேருந்துமுனையம் ஆகிய மூன்று இடங்களை தவிர வேறு எந்த இடத்திலும் பயணிகளை ஏற்றி இறக்க கூடாது என்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் 09.02.2024 தேதியிட்ட இடைக்கால உத்தரவினை எதிர்த்தும் அதனடிப்படையில் போக்குவரத்து ஆணையர் கடந்த 13.02.2024 அன்று வெளியிட்ட ஒரு விரிவான பத்திரிக்கைச் செய்தியை எதிர்த்தும், கடந்த 22.01.2024 அன்று போக்குவரத்து ஆணையர் பிறப்பித்த இரண்டு ஆணைகளை எதிர்த்தும் ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு இன்று மாண்பமை உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதன்மூலம் கடந்த 22.01.2024 அன்று போக்குவரத்து ஆணையர் பிறப்பித்த இரு உத்தரவுகளும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 09.02.2024 தேதியிட்ட இடைக்கால உத்தரவும் மற்றும் போக்குவரத்து ஆணையரால் 13.02.2024 அன்று வெளியிடப்பட்ட பத்திரிக்கைச்செய்தியும் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் உறுதி படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி சென்னையில் இருந்து தெற்கு நோக்கி பயணிக்கும் ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்கள் எக்காரணம் கொண்டும் கீழ்க்கண்ட 3 இடங்களை தவிர வேறு எங்கும் பயணிகளை ஏற்றி இறக்க கூடாது என அறிவிக்கப்படுகிறது:

1.சென்னை புறவழிச்சாலையில் போரூர் சுங்கச்சாவடி

2.சென்னைபுறவழிச்சாலையில் சூரப்பட்டு சுங்கச்சாவடி

3. கிளாம்பாக்கம் பேருந்து முனையம்

மேற்கண்ட 3 இடங்களை தவிர தெற்கு நோக்கி செல்லும் ஆம்னி பேருந்துகள் வேறு எங்கும் பயணிகளை ஏற்றி இறக்குவதற்கு அனுமதி இல்லை என்பது மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி மேற்கூறிய 3 இடங்களை தவிர வேறு இடங்களில் தெற்கு நோக்கி செல்லும் ஆம்னி பேருந்துகள் பயணிகளை ஏற்றி இறக்குவது கண்டறியப்பட்டால் தொடர்புடைய ஆம்னி பேருந்துகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவது மட்டுமல்லாமல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் அடிப்படையிலும் சென்னையில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் ஆம்னி பேருந்துகள் எக்காரணம் கொண்டும் மேற்கூறிய 3 இடங்களை தவிர வேறு இடங்களை தங்களது பயணச்சீட்டு முன்பதிவு மென்பொருளிலும், Red Bus, Abhi Bus, உள்ளிட்ட செயலிகளிலும் பொதுமக்களை குழப்பும் வகையில் பதிவிடக்கூடாது எனவும் அவ்வாறு பதிவு செய்தால் தொடர்புடைய ஆம்னி பேருந்துகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவது மட்டுமல்லாமல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

இதனை மீறி செயல்படும் ஆம்னி பேருந்து உரிமையாளர்களால் பொது மக்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு ஆம்னி பேருந்து உரிமையாளர்களே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் எனவும் எச்சரிக்கப்படுகிறது.

இவ்வாறு போக்குவரத்துத்துறை ஆணையர் அறிவித்துள்ளார்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. வர்த்தகர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்,

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்**

**தாம்பரம் மாநகரம்**

தலைவர் - சி.ஆர்.எம்.மனோஜ்குமார், 1,15 வது தெரு, வினோபாஜி நகர், அஸ்தினாபுரம், சென்னை-600 064.

துணை தலைவர் - அ.கமலகண்ணன், 41, பம்மல் மெயின் ரோடு, முத்தமிழ் நகர், பம்மல், சென்னை - 600 075.

அமைப்பாளர் - **தேனுபுரி,** 6, வடக்கு மாடவீதி, மாடம்பாக்கம், சென்னை-600126. துணை அமைப்பாளர்கள் - பி.ராஜ்மோகன், வி.ஆர்.காம்ப்ளக்ஸ், மே.தாம்பரம், சென்னை - 600 045. இரா.செல்வகுமார், 2வது தெரு, அரங்கநாதபுரம், மே.தாம்பரம், சென்னை - 600 045. ய.ந.ராஜேஷ், 39, வெங்கடேஸ்வரா தெரு, பாலாஜி நகர் விரிவு, அனகாபுத்தூர், சென்னை - 600 070. மா.ஆமோஸ், 37, பரமேஸ்வரன் தெரு, பழைய பல்லாவரம், சென்னை - 600 117. க.யோகநாதன், 7/15, வெங்கடாசலபதி தெரு, ராஜகீழ்பாக்கம், சென்னை - 600 073. ச.குமார், 21அ, இரட்டைப்பிள்ளையார் கோயில் தெரு, பம்மல், சென்னை-600 075. பி.ஹரிகிருஷ்ணன் (ஏ) வீடியோ அரி, எண்.32, சாவடி தெரு, சபரி கணேஷ் அப்பார்ட்மெண்ட், சென்னை - 600 043. செ. சவரிமுத்து, 19, வினோபா நகர், அனகாபுத்தூர், தாம்பரம் மாநகரம்-600 070. ஆர்.புருஷோத்தமன், 158, மாருதி நகர், மாடம்பாக்கம் - 600 126. நாராயணசாமி, 414, 14வது குறுக்கு தெரு, திருமலை நகர், அஸ்தினாபுரம், சென்னை-600 064. ஆ.வீரமணி, 23/70, ருக்மணி பிளாட்ஸ், நல்லதம்பி ரோடு, அண்ணாநகர் , பம்மல், சென்னை-600 075.

**திருச்சி மத்திய மாவட்டம்**

**திருச்சி மேற்கு மாநகரம்**

தலைவர் - மு.சின்னசாமி, 46,லாசன்ஸ் ரோடு, ராஜா காலனி முதல் தெரு, திருச்சி. துணை தலைவர் - து.இளையராஜா, 24, மல்லிகைபுரம், திருவரங்கம், திருச்சி,

அமைப்பாளர் - **சா.வரதராஜன்,** நெ.24, சர்ச் காலனி, வயலூர் ரோடு, புத்தூர், திருச்சி. துணை அமைப்பாளர்கள் - ஆர்.கி.செல்வம், 34, காவல்கார தெரு, பாண்டமங்கலம், உறையூர், திருச்சி-3. அ.பாலகிருஷ்ணன், 9சி, விஸ்வாஸ் நகர், விஸ்தரிப்பு, கருமண்டபம், திருச்சி. ஜெ.வசந்த்பிரபு, 9, அந்தோணியர் கோயில் தெரு, திருச்சி. மோ.ஆனந்த், 34சி, காமராஜர் மன்ற தெரு, பெரியமிளகுபாறை , திருச்சி-1. ம.சங்கிலி, 15, சின்னசெட்டி தெரு, உறையூர், திருச்சி-3. த.இளங்கோவன், 106பி, முதல் மெயின் ரோடு, ராஜாகாலனி, கலெக்டர் ஆபிஸ் ரோடு, திருச்சி.

**ஆந்திர மாநிலம்**

தலைவர் - ஏ.வி.பீதாம்பரம், 8-4.162/7, மெயின் ரோடு, சத்தரவாடா அஞ்சல், நகரி, சித்தூர் மாவட்டம் 517592. துணைத் தலைவர் - எம்.ஜி.வள்ளுவன், 5/80ஏ, பொன்னியம்மன்கோவில் தெரு, சிந்தலப்பட்டடை, நகரி அஞ்சல், சித்தூர் மாவட்டம் - 517 590.

அமைப்பாளர் - **எம்.ஏ.ஜெயராமன்,** 4/41, இராமர் கோயில் தெரு, சிந்தலப்பட்டடை, நகரி போஸ்ட், சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம். துணை அமைப்பாளர்கள் - பி.எம்.சங்கரன், 4/26, பஜனை கோயில் தெரு, புதுப்பேட்டை, நகரி,சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம். எம்.இராஜகோபால், 2/247, கொண்டமிட்டா, காவம்மாள் மந்திர அருகில், ஸ்ரீ காளஹஸ்தி போஸ்ட்,சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம். மி.ப.இரங்கன், 4/11, பஜனை தெரு, சிந்தலப்பட்டடை, நகரி போஸ்ட், சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம். வி.வி.சுப்பாராவ், எல்.ஐ.சி. ஏஜண்ட், அக்ரஹாரம், ஸ்ரீ காளஹஸ்தி போஸ்ட், சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.02.2024

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஏனாத்தூர் ஊராட்சியில் திராவிட மாடலின் நல்லாட்சி நாயகர் மு.க. ஸ்டாலின் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் ஒன்றியக் கழக செயலாளர் படுநல்லி பி.எம். பாபு தலைமையில் ஆர்.கே.தேவேந்திரன் வரவேற்பில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட துணைச் செயலாளருமான க.செல்வம், கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., வண்ணை புகாரி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் எஸ்.பி. பூபாலன், வி.பழனி, வி.வெங்கட்ராமன், டி.கவிதாடில்லிபாபு, கே.ஆறுமுகம், கே.பார்த்திபன், கே. திருஞானசம்பந்தம், எம்.அருள்முருகன், என். ஜெயபால், ஆ. கே.சசிகுமார், எஸ்.கே.சுரேஷ், ஈ.அப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ச.சண்முகநாதன் வரவேற்புரை விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பு சார்பில்

# மருத்துவர் வே.நமச்சிவாயம் நினைவேந்தல் நிகழ்ச்சி!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ,- ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. எஸ்.மோகன் பங்கேற்பு!

சென்னை, பிப்.20-

விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பு சார்பில் மறைந்த மருத்துவர் வே. நமச்சிவாயம் அவர்களின் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை (21.2.2024-புதன் கிழமை) மாலை 5 மணிக்கு தியாகராயர் நகர், வெங்கட்நாராயணா சாலையில் அமைந்துள்ள செ.தெ.நாயகம் தியாகராயர் மேநிலைப்பள்ளியில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு ச.சண்முகநாதன் வரவேற்றுப் பேசுகிறார்.

சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ. தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம். எல்.ஏ., தி.மு.க. மாணவர் அணி மாநில இணைச் செயலாளர் எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆர். வேலு நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.

இதில் மருத்துவர் எஸ். ஞானசுந்தரம், மருத்துவர் வெ.சொக்கலிங்கம், வழக்கறிஞர் துரை.கலையரசு, வந்தியத் தேவன்(ம.தி.மு.க.) அ.பன்னீர்செல்வம் (தி.க.) க.இராஜசேகர் மற்றும் பலர் புகழரையாற்று கின்றனர்.

நிறைவாக நிலவு பு.க. செல்வமணி நன்றி கூறுகிறார்.

### நே.சிற்றரசு எம்.சி, தயாநிதிமாறன் எம்.பி, நா.எழிலன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக்கழக ஆலோசனைக்கூட்டம்!

### பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, பிப். 20

ஆயிரம்விளக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி தி.மு.க. வட்டக் கழகச் செய லாளர்கள் மற்றும் வட்டப் பாக பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20.2.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, ஆர்.ஆர்.மஹால், சூளைமேடு நெடுஞ்சாலையில் நடைபெறுகிறது.

பகுதிக் கழக அவைத் தலைவர் புவி பாலாஜி தலைமை வகிக்கிறார்.

ஆயிரம்விளக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி மற்றும் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ , மற்றும் ஆயிரம்விளக்கு தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், பாகத் தலைவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் கழக ஆக்கப் பணி.

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

# மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம்

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம் 25-2-2024 ஞாயிறு அன்று காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது (காசிமுத்து மாணிக்கம்) தலைமையில், வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் கே.எஸ்.மூர்த்தி, முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவைநா.முருகவேல்,பி.டி.பாண்டிச்செல்வம்,எஸ்.முத்துச்செல்வி,என்.தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசித.வனராஜ்,வி.பி.மணி,இ.ராமர்,க.தனசெல்வம்,வேப்பூர்வி.எஸ்.பெரியசாமி, பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா; நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.2.2024

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி




சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி தி.மு.க. வட்டக் கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்று வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் குறித்து கழகத்தினர் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் தொகுதி மேற்பார்வையாளர் கலை கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் வி.எஸ். ராஜ், மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர்,மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.பி.கே. தங்கவேலு

### பிப்ரவரி 20 (2017)



**ஆலங்குடி பகுதியில், கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற துவக்கிய இவர், ஆலங்குடி வட்ட துணைச் செயலாளர், திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து பணியாற்றிய இவர், மறைவெய்தியபோது புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.**

**பாத்தம்பட்டி ஊராட்சி தலைவராகவும், திருவரங்குளம் ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



செயல்மறவர் KPK தங்கவேலு
நினைவு நுழைவாயில்
முன்னாள் புதுக்கோட்டை
தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்
திராவிட இயக்க தீரர் KPK.தங்கவேலு
அவர்களின்
நினைவு நுழைவாயில் திறப்பு விழா
நாள் : 20 - 2 - 2024, செவ்வாய்க்கிழமை, மாலை 4 மணி இடம் : பாத்தாம்பட்டி, புதுக்கோட்டை
தலைமை
மாண்புமிகு. சிவ.வீ.மெய்யநாதன் M.C.A.,
சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
நுழைவாயில் திறந்து வைப்பவர்
மாண்புமிகு. எஸ்.ரகுபதி B.Sc.,B.L.,
சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர்
மாவட்டக் கழகச் செயலாளர்
திருப்பணிச்செம்மல் S.ராமச்சந்திரன் B.Sc., புதுகை கம்பன் கழகத் தலைவர் / தொழிலதிபர், முத்துப்பட்டினம்
பெரியண்ணன் அரசு M.Sc.,Ex.,M.L.A.
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
K.K.செல்லபாண்டியன் B.A.,B.L.,
புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
M.M.அப்துல்லா M.B.A.,M.P.
Dr. வை.முத்துராஜா M.B.B.S.,M.L.A.
நன்றியுரை : KPKT.தங்கமணி
ஒன்றிய கழகச் செயலாளர்
வள்ளியம்மை தங்கமணி
ஒன்றிய பெருந்தலைவர் - திருவரங்குளம்
மற்றும் கழக முன்னணியினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் முன்னின்று போற்றுவோம் வாரீர்!
இவண்... இ.லூர்துநாதன் மாவட்டக் கழகப் பிரதிநிதி
ஆலங்குடி பேரூர் - புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.